بِسْــــمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# உணவு

## ஓர் இஸ்லாமியப் பார்வை

எம்.ஏ.பக்கீர் முகம்மது அல்தாஃபி

வெளியீடு
**சன் பப்ளிகேஷன்ஸ்**

**புத்தக விபரத் தொகுப்பு**

| | |
|---|---|
| நூலின் பெயர் | : உணவு - ஓர் இஸ்லாமியப் பார்வை |
| ஆசிரியர் | : எம்.ஏ.பக்கீர் முகம்மது அல்தாஃபி |
| உரிமை | : ஆசிரியருக்கே! |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : ஜூன் 2012 |
| வெளியீட்டு நாள் | : 15-06-2012 |
| நூலின் அளவு | : கிரவுன் 1/8 |
| பக்கங்கள் | : 160 |
| அச்சுக் கோர்வை | : ஸ்டார் கிராஃபிக்ஸ், சென்னை - 1<br>போன் : 90436 77026 |
| அச்சிட்டோர் | : சன் பிரிண்டிங் ஏஜென்ஸி<br>போன் : 9443879861 |
| வெளியீடு | : சன் பப்ளிகேஷன்ஸ். |

மொத்த விற்பனையாளர் :

**மூன் பப்ளிகேஷன்ஸ்**

83/3, (66), மூர் தெரு, மண்ணடி,

சென்னை - 600 001 போன் : 044 6569 0810

விலை : **ரூ. 36.00**

# பொருளடக்கம்


**சாப்பிடுவதின் ஒழுங்குகள்**

தூய்மையானதைச் சாப்பிடுதல் .......... 07
தூய்மையற்றதைச் சாப்பிட்டால் .......... 07
உணவு விரிப்பு .......... 08
உண்பதற்கு அமரும் முறை .......... 09
பிஸ்மில்லாஹ் கூறி சாப்பிடுதல் .......... 10
பிஸ்மி சொல்லாத உணவில் ஷைத்தான். .......... 11
பிஸ்மில்லாஹ் கூற மறந்து விட்டால் .......... 11
வலது கரத்தால் சாப்பிடுதல் .......... 12
அருகிலிருப்பதைச் சாப்பிடுதல் .......... 12
தேவைப்பட்டால் தூரத்தில் உள்ளதைச் சாப்பிடுதல் .......... 12
கீழே விழுந்ததை எடுத்துச் சாப்பிடுதல் .......... 13
தட்டை வழித்து விரலை சூப்புதல் .......... 13
சாப்பிட்ட பின் துஆ ஓதுதல் .......... 14
உணவைக் குறை கூறாதிருத்தல் .......... 15

**குடிப்பதின் ஒழுங்குகள்**

நின்று கொண்டு குடித்தல் .......... 16
சிறு சிறு மடக்காக குடித்தல் .......... 18
அருந்தும் பானத்தில் மூச்சுவிடுதல்/ஊதிக் குடித்தல் .......... 18
பால் குடித்தால் வாய்க் கொப்பளித்தல் .......... 19
உணவுப் பாத்திரங்கள் .......... 20
தங்கம், வெள்ளிப் பாத்திரத்தில் சாப்பிடுதல் .......... 20
ஹராமான உணவுக்குப் பயன்படுத்தப்படும் பாத்திரம் .......... 20
நாய் வாய் வைத்த பாத்திரம் .......... 22
தடுக்கப்பட்டவையும், அதன் கேடுகளும் .......... 24
தடுக்கப்பட்டவை கெட்டவையே .......... 24
தாமாகச் செத்தவை .......... 26
இரத்தம் .......... 28
பன்றி .......... 29
அல்லாஹ் அல்லாதோருக்காக உருவாக்கப்பட்டவை .......... 30
அல்லாஹ்வின் பெயர் கூறாமல் அறுக்கப்பட்டவை .......... 33
வேட்டை நகமுடைய பறவைகள் .......... 34
கோரைப் பல்லுடைய விலங்குகள் .......... 34
கழுதை .......... 34
மதுபானம் (போதை தருபவை) .......... 34
தீங்கு தருபவை .......... 37

**அனுமதிக்கப்பட்ட உணவுகள்**

அனைத்தும் அனுமதியே .......... 38
நிர்பந்தத்தில் உள்ளவர் ஹராமைச் சாப்பிடுதல் .......... 38
பசியுடனிருப்பவர் பிறர் தோட்டத்தில் சாப்பிடுதல் .......... 40
வழி தவறி வந்துவிட்ட ஆடு, கோழிகளைச் சாப்பிடுதல் 43
அற்பமான பொருளை அனுமதியின்றி சாப்பிடுதல் .......... 44
வேட்டையாடிச் சாப்பிடுதல் .......... 44
பொது அனுமதி உள்ளதைச் சாப்பிடுதல் .......... 45
நெருங்கிய உறவினர் வீடுகளில் சாப்பிடுதல் .......... 46
தவறாகப் பொருளீட்டியவரின் உணவைச் சாப்பிடுதல் .......... 46
வேதக்காரர்களின் உணவைச் சாப்பிடுதல் .......... 49
இஹ்ராமிலிருப்பவர் வேட்டையாடப்பட்டதைச் சாப்பிடுதல் .......... 51

**சந்தேகங்கள்**

ரொட்டி சாப்பிடுவது சுன்னத்தா? .......... 52
சாப்பிடும் போது பேசலாமா? .......... 56
பாங்கு சொல்லும் போது சாப்பிடலாமா? .......... 57
மூன்று விரல்களால் மட்டுமே சாப்பிட வேண்டுமா? .......... 58
வயிறு முட்ட சாப்பிடலாமா? .......... 59
உணவில் அஜினமோட்டோ சேர்க்கலாமா? .......... 64
ஆல்கஹால் கலந்துள்ள மருந்தைச் சாப்பிடலாமா? .......... 65
உண்ணக்கூடாததை விற்பனை செய்யலாமா? .......... 69
ஜம் ஜம் நீரை நின்று கொண்டு தான் குடிக்க வேண்டுமா? .......... 71
சமைத்த உணவு உளூவை நீக்குமா? .......... 72
ஒட்டக இறைச்சி உளூவை முறித்து விடும் .......... 73
தடுக்கப்பட்டதில் முரண்பாடா? .......... 74
அசைவம் அவசியமா? .......... 75
நண்டு சாப்பிடலாமா? .......... 82
அல்லாஹ்வையன்றி நமக்காக அறுத்ததை சாப்பிடலாமா? .......... 84
சாப்பிடலாமா? கூடாதா? என சந்தேகம் வந்தால்? .......... 85
உணவுக்கு இறைவன் பொறுப்பு எனில் பசியும், பட்டினியும் ஏன்? .......... 89
இணை வைப்பவர் அறுத்ததை சாப்பிடலாமா? .......... 92

பொதுவானவை
குழந்தைகளின் முதல் உணவு ........ 94
நபி (ஸல்) அவர்களின் உணவு ........ 96
பரகத் நிறைந்த உணவு ........ 99
பரகத்தை பெறும் வழிகள் ........ 101
பசித்தோருக்கு உணவளித்தல் ........ 102
யாசித்து உண்ணுதல் ........ 104
உழைத்து உண்ணுதல் ........ 107
பச்சை வெங்காயமா? பள்ளிக்கு வரவேண்டாம் ........ 108
சமைத்தவருடன் சேர்ந்து சாப்பிடுதல் ........ 109
உணவுத் திருநாள் ........ 110
கணவன், மனைவி ஊட்டி மகிழ்தல் ........ 111
முஸ்லிம்களின் வீடுகளுக்குச் சென்றால் ........ 111
வீணாகும் உணவுப் பண்டங்கள் ........ 111
உண்ணாதிருத்தல் ஆரோக்கியமே! ........ 116

விருந்து
விருந்தோம்பல் ........ 118
விருந்து அழைப்பு ........ 120
இயன்றால் பெண்களையும் சேர்த்து அழைத்தல் ........ 122
அழைப்பை ஏற்றுக் கொள்ளுதல் ........ 123
அழையா விருந்தாளி ........ 125
விருந்தின் நாட்கள் ........ 127
விருந்தின் தரம் ........ 128
விருந்து உண்பதும் பரிமாறுவதும் ........ 130
விருந்துக்காக துஆ செய்தல் ........ 135
சாப்பிட்டதும் வெளியேறுதல் ........ 135

சுன்னத்தான விருந்துகள்
திருமணம் ........ 136
அகீகா ........ 146
புது வீடு புகுதல் ........ 150
புறக்கணிக்க வேண்டிய விருந்துகள் ........ 152
இறப்பு விருந்து ........ 156
ஹஜ் பயண விருந்து ........ 157
ஏழைகள் அழைக்கப்படா விருந்து ........ 158


## முன்னுரை

2010 ஆம் ஆண்டு ரமளான் மாதம் மதுரையில் **'உணவின் சட்டங்கள்'** என்ற தலைப்பில் உரையாற்றினேன். அவ்வுரையைக் கேட்ட சிலர் இதை ஒரு நூலாகக் கொண்டு வர வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். அதன் விளைவே உங்கள் கரங்களில் தவழும் இந்நூல்.

உணவைப் பற்றிய செய்திகளை ஒரு சிறு நூலுக்குள் சிறைபிடிக்க நினைப்பது சாத்தியமற்ற ஒன்று. ஏனெனில் உணவைப் பற்றி எழுதுவது ஒருவிதத்தில் மனிதகுல வரலாற்றையே எழுதுவதற்குச் சமம் எனலாம்.

முதல் மனிதன் பூமியில் தேடிய முதல் தேடலே வயிற்றின் பசி போக்கும் உணவுத் தேடலாகத் தான் இருந்திருக்க வேண்டும்.

அன்று முதல் இன்று வரை மனிதன் தனது சிறு மதியின் துணை கொண்டு எதைச் சாப்பிடலாம்? எதைச் சாப்பிடக்கூடாது? எந்த உணவில் ஆரோக்கியம் இருக்கிறது? அறுசுவை எதிலிருக்கிறது? அவற்றை உண்ணும் முறை என்ன? என்றெல்லாம் பக்கம் பக்கமாக பாடம் படித்திருந்தாலும் அதில் தெளிவற்ற நிலையே இன்னும் தொடர்கிறது.

அது குறித்து தீர்க்கமான முடிவுக்கு வருவதாக இருந்தால் முக்காலமும் அறிந்த முதலோனின் வார்த்தைகளே அதற்கு முழுமையான வழிகாட்டும். ஆதி மனிதனின் காலம் தொட்டு இறைவனும் இதை நினைவூட்டிக் கொண்டே வருகிறான்.

**என்னிடமிருந்து உங்களுக்கு நேர்வழி வரும்போது எனது நேர்வழியைப் பின்பற்றுவோருக்கு எந்த அச்சமும் இல்லை அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்.** - அல்குர்ஆன் *2:38*

இது மனித குலத்தின் ஆதிப் பெற்றோருக்கு இறைவன் கூறிய வார்த்தைகளாகும். அந்தப் பேரறிவை முதலாய்க் கொண்டு நான் அறிந்த சில விஷயங்களை இங்கே தொகுத்துள்ளேன். இந்நூல் வெளிவர ஊக்கமளித்து உதவிகள் செய்த என் நண்பர்களுக்கும் அருள்புரிந்த அல்லாஹ்வுக்கும் நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

குறைகள் இருப்பின் சுட்டிக் காட்டுங்கள் இன்ஷாஅல்லாஹ் திருத்திக் கொள்கிறேன்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

அன்புடன்
**எம்.ஏ. பக்கீர் முஹம்மது**

## சாப்பிடுவதின் ஒழுங்குகள்

### தூய்மையானதைச் சாப்பிடுதல்

தமக்கு அனுமதிக்கப்பட்டவை யாவை? என்று அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். தூய்மையானவை உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது எனக் கூறுவீராக! *அல்குர்ஆன் : 5:4*

நாம் உங்களுக்கு வழங்கியவற்றில் தூய்மையானதை உண்ணுங்கள்! இங்கே வரம்பு மீறாதீர்கள்! (வரம்பு மீறினால்)

எனது கோபம் உங்கள் மீது இறங்கும். எவன் மீது எனது கோபம் இறங்கி விட்டதோ அவன் வீழ்ந்து விட்டான்.

*அல்குர்ஆன் : 20:81*

கீழ்காணும் வசனங்களிலும் இக்கருத்தைக் காணலாம் *16:114, 2:57, 2:168, 1:172,5:87, 5:88, 6:142, 7:157, 7:160, 8:69, 16:72, 17:70,*

### தூய்மையற்றதைச் சாப்பிட்டால்

நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதரைப் பற்றி நினைவு கூர்ந்தார்கள். (உடல் முழுவதும்) அழுக்கடைந்து, ஆடையெல்லாம் புழுதி படர்ந்த நிலையில் நீண்ட பயணம் செய்யும் அவர், தன் இரு கைகளையும் வானத்தின் பக்கம் உயர்த்தி, என் இறைவா! என் இறைவா! (என்கிறார்). அவரது உணவும் ஹராம். அவரது உடையும் ஹராம், அவரது பானமும் ஹராம். இவ்வாறு ஹராமிலே மூழ்கியிருப்பவருக்கு எவ்வாறு பதிலளிக்கப்படும்? எனக் கேட்டார்கள்.

*அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூல் முஸ்லிம் : 1,686 திர்மிதி, 2915 அஹமது, 7998*

தூய்மையான உணவு என்பது இரண்டு வகைகளில் அமையும். ஒன்று வெளிப்படையான அசுத்தத்தை விட்டு நீங்கி இருக்க வேண்டும். இரண்டு இறைவனால் தடுக்கப்பட்ட ஹராமை விட்டும் நீங்கி இருக்க வேண்டும்.



ஹராம் எனும் அசுத்தத்தைச் சாப்பிட்டு விட்டால் நமது பிரார்த்தனைகள் அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்படாது என்பதை இந்த ஹதீஸிலிருந்து அறியலாம்.

### உணவு விரிப்பு

சுப்ரா என்ற பெயரில் விரிப்பு ஒன்றை விரித்து அதன்மீது உணவுப் பாத்திரத்தை வைத்து சாப்பிடுவது சுன்னத்தான வழிமுறை என்று சிலர்கடைபிடித்து வருகின்றனர்

நபி (ஸல்) அவர்கள் உணவு விரிப்பு ஒன்றை வைத்திருந்தார்கள் என்பது உண்மை. ஆனால் அந்த விரிப்பு நேரடியாக அதிலேயே உணவைக் கொட்டிச் சாப்பிடும் வகையில் இருந்தது. உணவுத் தட்டுக்கு கீழே விரிக்கும் விரிப்பாக அது இருக்கவில்லை. நபி (ஸல்) அவர்களிடமிருந்த விரிப்பைப் பற்றி அனஸ்(ரழி) அவர்கள் கூறுகிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் சபிய்யா (ரழி) அவர்களைத் திருமணம் செய்து இல்லறத்தில் ஈடுபட்டார்கள். அவர்களின் வலீமாவுக்காக முஸ்லீம்களை நான் அழைத்தேன். தோலால் ஆன உணவு விரிப்பை விரிக்குமாறு கட்டளையிட்டார்கள் அது விரிக்கப்பட்டது. அதில் பேரீத்தம்பழம், பாலாடைக்கட்டி, நெய் ஆகியவை போடப்பட்டது.

*அறிவிப்பவர் : அனஸ் (ரழி) நூல் : புகாரி : 5387.*

உணவுத் தட்டின் கீழ் சுத்தமான விரிப்பு ஒன்றை விரித்துக் கொண்டால் கீழே சிந்தும் பருக்கையை எடுத்துச் சாப்பிட வசதியாக இருக்கும். (அ) எச்சில் கழிவுகளை போட்டு எடுத்துச் செல்ல வசதியாக இருக்கும் என்பன போன்ற காரணங்களுக்காக விரிப்பு வைத்துக் கொள்வதில் தவறில்லை. சுன்னத் என்ற அடிப்படையில் இவ்வாறு செய்ய இயலாது.

மேலும் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களும் வஹீயின் அடிப்படையில் விரிப்பைத் தேர்ந்தெடுக்கவில்லை. அவர்கள்

வாழும் காலத்தில் உள்ள சமூகப்பழக்கத்தின் அடிப்படையில் தான் இதைச் செய்து வந்துள்ளார்கள். எனவே இதை மார்க்க அனுஷ்டானமாகவும் கருத முடியாது.

**உண்பதற்கு அமரும் முறை**

நபி (ஸல்) அவர்கள் சாய்ந்து கொண்டு சாப்பிடுவதை பெருமையின் வெளிப்பாடாகக் கருதியிருக்கிறார்கள். எனவே, அவ்வாறு நான் சாப்பிடமாட்டேன் என அறிவிக்கிறார்கள்.

நான் நபி (ஸல்) அவர்களோடு இருந்தேன். அப்போது தனக்கு அருகில் இருந்தவரிடம் நான் சாய்ந்து கொண்டு சாப்பிடமாட்டேன். ஒரு அடிமை அமர்வதைப் போல் அமர்ந்து அடிமை உண்பதைப் போல் (பணிவாக) உண்பேன் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பாளர்அபூஜுஹைஃபா (ரழி) நூல் : புகாரி : 5399, 5398 திர்மிதி 1735அபூதாவூது : 3277 இப்னுமாஜா : 3253 அஹ்மது : 18005, 18015*

குத்தலிட்டு அமர்தல், ஒரு காலை மடக்கி அதன் பாதங்களின் மீது பித்தட்டை வைத்து மறுகாலை மடக்கி நெஞ்சோடு சேர்த்தணைத்து அமர்தல், அத்தஹிய்யாத்தில் உட்காருவதைப் போல அமர்தல் ஆகிய முறைகளில் அமர்ந்து தான் சாப்பிட வேண்டுமென்றும் அதுவே நபி வழி எனவும் சிலர் வாதிடுகின்றனர்.

இந்த முறைகளில் அமர்ந்து சாப்பிடுவது வசதியாக இருக்கிறது என்பதற்காக ஒருவர் இவ்வாறு சாப்பிட்டால் அதில் நாம் குறை காண முடியாது.

ஆனால் இவ்வாறு தான் சாப்பிட வேண்டும் என வலியுறுத்துவதாக இருந்தால் அதற்கு நபி (ஸல்) அவர்களிடமிருந்து இதற்கான கட்டளையை எடுத்துக் காட்ட வேண்டும். அவ்வாறு எதுவும் இல்லை எனும் போது இதை நபி வழி என்று கூறுவது தவறாகும்.



**பிஸ்மில்லாஹ் கூறி சாப்பிடுதல் :**

உங்களில் ஒருவர் உணவு உண்ணும் போது பிஸ்மில்லாஹ் என்று கூறட்டும்..

*அறிவிப்பவர் ஆயிஷா (ரழி) நூல் : திர்மிதி : 1781 அபூதாவூது : 3275 இப்னு மாஜா : 3255 அஹ்மது 23954 : 24551 24895 25089*

அனஸ் (ரழி) அவர்கள் கூறினார்கள் :

அபூதல்ஹா (ரழி) அவர்கள் (தனது மனைவி) உம்மு சுலைமிடம் நபி (ஸல்) அவர்களுக்காக உணவு தயார் செய் என்று கூறிவிட்டு, என்னை நபியவர்களிடம் அனுப்பினார்கள். நான் அவர்களிடம் வந்து அபூதல்ஹா (உங்களை அழைத்து வருமாறு) என்னை அனுப்பி வைத்தார் என்று கூறினேன்.

உடனே நபி (ஸல்) அவர்கள் (அருகிலிருந்த) கூட்டத்தாரை நோக்கி எழுந்து வாருங்கள் என்று கூறி நடக்கலானார்கள். கூட்டத்தாரும் அவர்களோடு சேர்ந்து நடந்தார்கள். அல்லாஹ்வின் தூதரே! உங்களுக்கு மட்டும் தான் உணவு தயாரித்துள்ளேன் என அபூதல்ஹா கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் உமக்கு எந்தச் சிரமமும் இல்லை நீர் சொல்லும் என்றார்கள். அவரும் சென்றார். மக்களும் சென்றார்கள்.

உணவு கொண்டு வரப்பட்டது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தனது கரத்தை அதன் மீது வைத்து **(அல்லாஹ்வின்) பெயரைக் கூறினார்கள்.** பிறகு (கூட்டத்தில்) பத்து பேரை உள்ளே வர அனுமதிக்குமாறு கூறினார்கள்.

அவர்கள் உள்ளே வந்ததும் **பிஸ்மில்லாஹ் கூறி சாப்பிடுங்கள்** என நபி (ஸல்) கூறினார்கள். அவர்கள் வயிறார சாப்பிட்டு விட்டு எழுந்து சென்றார்கள். பின்னர் முன்பு போலவே தன் கையை அதன் மீது வைத்து (அல்லாஹ்வின்) பெயர்கூறினார்கள். பிறகு மேலும் பத்து பேருக்கு அனுமதி வழங்குமாறு கூறினார்கள். அவர்கள்

வந்ததும் **பிஸ்மில்லாஹ் கூறி சாப்பிடுங்கள்** என்றார்கள். அவர்களும் வயிறாரச் சாப்பிட்டு விட்டு எழுந்து சென்றார்கள்.

இவ்வாறு எண்பது பேர் சாப்பிட்டார்கள். அல்லாஹ்வின் தூதரும் சாப்பிட்டார்கள். (அபூதல்ஹாவின்) குடும்பத்தாரும் சாப்பிட்டார்கள் அதன் பிறகும் பாத்திரத்தில் மிச்சமிருந்தது

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் நூல்: முஸ்லிம்: *3802*

**பிஸ்மி சொல்லாத உணவில் ஷைத்தான் :**

தனது வீட்டில் நுழையும் ஒருவர், உள்ளே நுழையும் போதும், தனது (உணவை) உண்ணும் போதும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தால் ஷைத்தான் (தன் சகாக்களிடம் இன்று இரவு) உங்களுக்கு உணவும் இல்லை, தங்குமிடமும் இல்லை எனக் கூறுவான்.

ஒருவர் தன் வீட்டில் நுழையும் போதும் உண்ணும் போதும் அல்லாஹ்வை நினைவு கூறவில்லையென்றால் (இன்று இரவு) உங்களுக்கு உணவும் தங்குமிடமும் கிடைத்து விட்டது எனக் கூறுவான். என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி) நூல் : முஸ்லிம் - *3762* அபூதாவூது - *3273* இப்னுமாஜா - *3877* அஹ்மது - *14202 15576*

அல்லாஹ்வின் பெயர் கூறாமல் உண்ணும் போது அந்த உணவின் முழு பயனையும் நம்மால் அடைந்து கொள்ள முடியாது.ஏனெனில் அந்த உணவை நாம் மட்டும் உண்ணவில்லை.அதில் ஷைத்தானும் நம்மோடு பங்கு போட்டுக் கொள்கிறான்.மேலும் நம்மைக் கெடுக்கும் ஷைத்தானுக்கு நாமே உணவளிக்கும் மோசமான நிலையும் ஏற்பட்டு விடுகிறது.

**பிஸ்மில்லாஹ் கூற மறந்து விட்டால்**

உங்களில் ஒருவர் உணவு உண்ணும் போது பிஸ்மில்லாஹ் என்று சொல்லட்டும். ஆரம்பத்தில் (சொல்ல) மறந்து விட்டால்



பிஸ்மில்லாஹி ∴பீ அவ்வலிஹி வ ஆகிரிஹி என்று கூறட்டும் என நபி (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் ஆயிஷா(ரழி)நூல் : திர்மிதி, *1781* அபூதாவூது-*3275* இப்னுமாஜா - *3255* அஹ்மது - *23954 24551 24895 25089*

**வலது கரத்தால் சாப்பிடுதல் :**

உங்களில் ஒருவர் உண்ணும் போது தனது வலக்கரத்தால் உண்ணட்டும். குடிக்கும் போது வலக்கரத்தால் குடிக்கட்டும். ஏனெனில் ஷைத்தான் தனது இடது கரத்தால் சாப்பிடுகிறான் இடது கரத்தாலே குடிக்கிறான் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் இப்னு உமர் (ரழி) நூல்: முஸ்லிம், *3764*, *3765* திர்மிதி : *1721*, *1722*, அபூதாவூது : *3283* அஹ்மது : *4309*, *4654*, *5257*, *5583*, *5843*, *5908*, *6050*,

**அருகிலிருப்பதைச் சாப்பிடுதல் :**

உமர் பின் அபீஸலமா (ரழி) கூறுகிறார்கள் :

நான் நபி (ஸல்) அவர்களின் பொறுப்பில் வளர்ந்த சிறுவன். எனது கை உணவுத் தட்டின் நாலாபுறத்திலும் சுற்றிக் கொண்டிருந்தது. அப்போது சிறுவனே பிஸ்மில்லாஹ் கூறு உன் வலக் கரத்தால் சாப்பிடு உனக்கு அருகிலிருந்து சாப்பிடு என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதன் பிறகு இந்தப் பழக்கத்தை நான் கைவிடவே இல்லை.

அறிவிப்பவர் : உமர் பின் அபீ ஸலமா (ரழி) நூல் : புகாரி *5372*, *5377*, *5378* முஸ்லிம் : *3767*, *3768*, திர்மிதி : *1780*, அபூதாவூது *3284*, இப்னுமாஜா : *3258.*

**தேவைப்பட்டால் தூரத்தில் உள்ளதைச் சாப்பிடுதல் :**

பல தரப்பட்ட உணவுப் பொருட்களை கலந்து சாப்பிட நேர்ந்தால் நாலா பக்கத்திலும் எடுத்துச் சாப்பிடுவதில் தவறில்லை.

தையல்காரர் ஒருவர் தாம் தயாரித்த உணவை சாப்பிட வருமாறு நபி (ஸல்) அவர்களை விருந்துக்கு அழைத்தார். நானும் நபி(ஸல்) அவர்களுடன் அந்த விருந்துக்குச் சென்றேன். அவர் ரொட்டி, மற்றும் உலர்ந்த இறைச்சித்துண்டுடன், சுரைக்காய் கலந்த குழம்பை நபியின் முன் வைத்தார்.

நபி (ஸல்) அவர்கள் தட்டின் பல பாகங்களிலும் இருந்த சுரைக்காயைத் தேடித் தேடி (சாப்பிடுவதை) நான் பார்த்தேன். அன்று முதல் நானும் சுரைக்காயை விரும்பக் கூடியவனாகி விட்டேன்.

*அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் நூல் : புகாரி, 5379, 5435, 5436, 5439, 5379, முஸ்லிம் : 3803, அபூதாவூது : 3288 அஹ்மது : 12346, 12396*

### கீழே விழுந்ததை எடுத்துச் சாப்பிடுதல் :

உங்களில் ஒருவருக்கு ஒரு கவள உணவு (கீழே) விழுந்து விட்டால் அதை எடுத்து அதிலுள்ள அசுத்தத்தை நீக்கி விட்டு அதை அவர் சாப்பிடட்டும். ஷைத்தானுக்காக அதை விட்டு விட வேண்டாம். என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி) நூல்முஸ்லிம் 3793, 3794, அஹ்மது : 13869, 14025, 14101, 14410, 14701, திர்மிதி : 1725அபூதாவூது : 3347*

### தட்டையை வழித்து விரல்களை சூப்புதல் :

எந்த உணவில் பரகத் (இறையருள்) இருக்கிறது என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். எனவே தட்டையை வழித்தும் விரல்களைச் சூப்பியும் சாப்பிடுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

*அறிவிப்பவர் : ஜாபிர் (ரழி) நூல் : முஸ்லிம் : 3792,*

உங்களில் எவரும் தமது விரல்களைச் சூப்பும் வரை கைக்குட்டையால் தன் கையை துடைத்து விட வேண்டாம்.



ஏனெனில் அவரது எந்த உணவில் பரகத் இருக்கிறது என்பதை அவர் அறிய மாட்டார் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : ஜாபிர் (ரழி) நூல் : முஸ்லிம் : 3793, 3794, இப்னு மாஜா : 3261அஹ்மது : 13705, 13869, 14025, 14101, 14410, 14689, 14701.*

### சாப்பிட்ட பின் துஆ ஓதுதல் :

உணவு உண்ணும் ஓர் அடியான், அதற்காக அல்லாஹ்வைப் புகழ்ந்தால் அவனை அல்லாஹ் திருப்தி கொள்கிறான். அதுபோல நீரருந்தும் ஓர் அடியான், அந்த (நீருக்காக) அல்லாஹ்வைப் புகழ்ந்தால் (அவனையும் அல்லாஹ் திருப்தியடைகிறான்) என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரழி)நூல் : முஸ்லிம் : 4915, திர்மிதி : 1738, அஹ்மது : 11535, 11724.*

நபி (ஸல்) அவர்கள் (சாப்பிட்ட பின்) உணவு விரிப்பு உயர்த்தப்படும் போது **அல்ஹம்து லில்லாஹி கஸீரன் தய்யிபன் முபார(க்)கன் ஃபீஹி கைர மக்ஃபிய்யின் வலா முவத்தயின் வலா முஸ்தக்னன் அன்ஹு ரப்பனா** என்று கூறுவார்கள்

பொருள் : தூய்மையான, பாக்கியம் நிறைந்த அதிக அளவிலான புகழ் எங்கள் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தம். எங்கள் இறைவா உனது அருள் மறுக்கப்படத்தக்கதல்ல. நன்றி மறக்கப்படுவதுமன்று. அது தேவையற்றதுமல்ல.

*அறிவிப்பவர் : அபூ உமாமா (ரழி) நூல் : புகாரி : 5448, திர்மிதி : 3378, அபூதாவூது : 3351, இப்னு மாஜா : 3275, அஹ்மது : 21147, 21175, 21226, 21269*

நபி (ஸல்) அவர்கள் சில வேளைகளில் சாப்பிட்டு முடித்து விரிப்பைச் சுருட்டியதும் கீழ்காணும் துஆவையும் ஓதியிருக்கிறார்கள்.

**அல்ஹம்மது லில்லாஹில்லதீ க∴பானா வ அர்வானா கைர மக்∴பிய்யின் வலா மக்∴பூரின்**

பொருள் : உணவளித்து தாகம் தீர்த்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவனது அருள் மறுக்கப்படத்தக்கதல்ல. நன்றி மறக்கப்படுவதுமன்று.

அறிவிப்பவர் : அபூ உமாமா (ரழி)நூல் : புகாரி : 5459

**உணவைக் குறை கூறாதிருத்தல்**

நபி (ஸல்) அவர்கள் எந்த உணவையும் குறை கூறியதில்லை. பிடித்தால் அதைச் சாப்பிடுவார்கள், பிடிக்காவிட்டால் (சாப்பிடாமல்) இருந்து விடுவார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புகாரி, 3563, 5409, முஸ்லிம் : 3844, 3845 திர்மிதி : 1954, அபூதாவூது : 3271, இப்னுமாஜா : 3250, அஹ்மது : 9142, 9757, 9822, 9852, 10018

நமக்கு பிடிக்காத உணவு வைக்கப்பட்டால் இது எனக்குப் பிடிக்காது நான் இதைச் சாப்பிடமாட்டேன் என்று கூறி விலகிக் கொள்வது உணவைக் குறை கூறுவதாகாது. அதன் தரமும், ருசியும் குறைவாக இருக்கிறது என்று அதை விமர்சிப்பது தான் தவறாகும்.

நமது பார்வையில் ருசியற்றது, தரம் தாழ்ந்தது என உதாசீனப் படுத்தப்படும் உணவு, உலகில் பலருக்கு ருசிமிக்கதாகவும், தரமானதாகவும் இருக்கக் கூடும் என்பதை சிந்தித்தால் உணவை குறை கூறும் பழக்கம் நம்மிடமிருந்து அகன்று விடும்.

ஆட்டிறைச்சியில் சுவையற்றது எனக் கருதப்படும் கால் குளம்பைக் கூட நபி (ஸல்) அவர்கள் உயர்வாகக் கருதியிருக்கிறார்கள்



ஒரு ஆட்டின் கால் குளம்பையோ அல்லது விலா எலும்பையோ (சமைத்து வைத்துக் கொண்டு) நான் அழைக்கப்பட்டாலும் அந்த (விருந்திலும்) நான் கலந்து கொள்வேன். கால் குளம்போ அல்லது விலா எலும்போ அன்பளிப்பாக தரப்பட்டாலும் அதையும் நான் ஏற்றுக் கொள்வேன் என நபி (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் அபூஹுரைரா (ரழி) நூல் : புகாரி : 2568, 5178, அஹ்மது 9121, 9822, 9853, 10239

## குடிப்பதின் ஒழுங்குகள்

**நின்று கொண்டு குடித்தல் :**

நின்று கொண்டு அருந்துவது சம்பந்தமாக அருந்தலாம் என்றும் அருந்தக் கூடாது என்றும் இரண்டு விதமான ஹதீஸ்கள் கிடைக்கின்றன. இரண்டையும் இணைத்தே ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

நின்று கொண்டு அருந்துவதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் (ரழி) நூல் முஸ்லிம் : 3771, 3772, திர்மிதி : 1800, அபூதாவூது 3229, இப்னுமாஜா, 3415, அஹ்மது : 11740, 11888, 12033, 12406, 12589, 12754, 13127, 13433

அலீ(ரழி) அவர்கள் (கூ∴பா நகர் பள்ளிவாசலின்) விசாலாமான முற்றத்தில் மக்கள் பணிகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அசர் தொழுகையின் நேரம் வந்தது. (உளு செய்வதற்காக) தண்ணீர் கொண்டு வரப்பட்டது. அதில் (சிறிதளவு) குடித்து விட்டு முகம், கைகளைக் கழுவி உளு செய்தார்கள். பிறகு எழுந்து நின்று கொண்டு மீதத்தைப் பருகினார்கள்.

மக்களில் சிலர் நின்று கொண்டு குடிப்பதை வெறுக்கிறார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்களோ நான்

செய்ததைப் போன்றே செய்தார்கள் என்று அலீ (ரழி) கூறினார்கள்.

*அறிவிப்பவர் : நஸ்ஸால் பின் சப்ரா (ரஹ்) நூல் : புகாரி : 5615, 5616, நஸாயீ : 130, அபுதாவூது 3230 அஹ்மது : 550, 756, 872, 923, 1070, 1084, 1114, 1136, 1160, 1279, 1296.*

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (சிலநேரம்) நின்றவாறும் (சிலநேரம்) அமர்ந்தவாறும் பருகுவதை நான் பார்த்திருக்கிறேன்

*அறிவிப்பவர் : ஆயி'ா(ரழி)நூல் : நஸாயீ : 1344, அஹ்மது : 23428*

இவ்விரண்டு செய்திகளையும் வைத்துப் பார்க்கும் போது அமர்ந்து குடிப்பது சிறந்ததென்றும், நின்று குடிப்பது சிறப்பற்றது என்றும் புரிந்து கொள்ளலாம்.

பின்வரும் ஹதீஸை வைத்து நின்று குடிப்பது கூடவே கூடாது என்று சிலர் வாதிடுகின்றனர்

உங்களில் யாரும் நின்று கொண்டு பருக வேண்டாம் மறந்து பருகி விட்டல் (அதை) வாந்தி எடுத்து விட்டும் என்று நபி (ஸல்) கூறியதாக ஒரு செய்தி முஸ்லிமில் 3775வது ஹதீஸாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களில் ஒருவரான அம்ரு பின் ஹம்ஸா என்பவர் பலவீனமானவர். இவர் வழியாக அறிவிக்கப்படும் இந்தச் செய்தியை ஆதாரமாக எடுத்துக் கொள்ள முடியாது.

நின்று குடிப்பதை தடுத்தார்கள் என்ற செய்தியை மட்டும் வைத்துக் கொண்டு அதை பாவம் எனக் கருதினால் நபி (ஸல்) அவர்களும் அவர்கள் காலத்தில் சஹாபாக்களும் நின்று கொண்டு பருகிய பல ஹதீஸ்களின் நிலை என்ன? என்ற கேள்வி எழும்.



எனவே நின்று கொண்டு பருகுவதில் தவறில்லை.ஆயினும் அமர்ந்து பருகுவது அதை விட மேலானது என்ற முடிவுக்குத் தான் வர வேண்டும்.

### சிறு சிறு மடக்காக குடித்தல்

உங்களில் எவரும் சிறுநீர் கழிக்கும் போது தனது உறுப்பை வலது கரத்தால் தொட வேண்டாம். கழிவறைக்குச் சென்றால் வலக் கரத்தால் சுத்தம் செய்ய வேண்டாம். (எதையேனும்) குடித்தால் ஒரே மூச்சில் குடிக்க வேண்டாம் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அல்ஹாரிஸ் பின் ரபீ : (ரழி) நூல் : அபூதாவூது, 29*

### அருந்தும் பானத்தில் மூச்சு விடுதல்/ஊதிக் குடித்தல்

உங்களில் எவரும் தாம் அருந்தும் பாத்திரத்தில் மூச்சு விட வேண்டாம். என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : ஹாரிஸ் பின் ரபீ:. (ரழி) நூல் : புகாரி : 153, 154, 5630, முஸ்லிம் : 392, 3780, அஹ்மது : 21495, 21603, 21595, 21522, 21584, இப்னு மாஜா : 3418, 3419.*

மூக்கினால் மூச்சு விடுவது மட்டுமின்றி வாயால் ஊதிக் குடிப்பதையும் நபியவர்கள் தடை செய்துள்ளார்கள்.

மர்வானின் சபைக்கு வந்த அபூஸயீத் அல்குத்ரி(ரழி) அவர்களிடம் நீரருந்தும் பாத்திரத்தில் மூச்சு விடக் கூடாது என நபி (ஸல்) அவர்கள் தடை செய்ததை நீங்கள் செவியுற்றிருக்கிறீர்களா? என மர்வான் கேட்டார். அதற்கு அபூஸயீதுல் குத்ரி (ரழி) அவர்கள் ஆம் என பதிலளித்து விட்டுச் சொன்னார்கள்.

ஒரு மனிதர் நபி (ஸல்) (அவர்களிடம் வந்து) அல்லாஹ்வின் தூதரே ஒரே மூச்சில் குடிப்பதால் எனக்கு தாகம் தீருவதில்லை (நான் என்ன செய்வது? எனக் கேட்டார். தண்ணீர் (பாத்திரத்தை விட்டும்) உன் முகத்தை திருப்பிக் கொண்டு மூச்சு விடு என்றார்கள். அதில் தூசிகளைக்

காண்கிறேன் அதற்காக ஊதி விடலாமா? எனக் கேட்டார். அதில் (தூசியைக்) கண்டால் (கொஞ்சத்தை) கொட்டி விடு (அதில் ஊதி விடாதே) என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என அபூஸயீதுல் குத்ரி (ரழி) கூறினார்கள்.

*அறிவிப்பவர்: அபுல் முஸன்னா நூல் : அஹ்மது 11116 திர்மதி : 1809*

நாம் சுவாசிக்கும் மூச்சுக் காற்றில் ஆக்ஸிஜன் எனும் உயிர்ச் சத்தை நமது உடல் பயன்படுத்திக் கொண்டு கரியமில வாயு (கார்பன்-டை-ஆக்ஸைடு) எனும் கழிவுப் பொருளை வெளியேற்றுகிறது அருந்தும் பாத்திரத்தில் மூச்சுவிட்டால் அந்தக் கழிவு உடலுக்குள் சென்று ஏதேனும் ஒரு வகையில் கேடு செய்யத் துவங்கிவிடும்.

அதே நேரம் நீர்ம நிலையில் உள்ள பொருட்களைத் தவிர்த்து ஏனைய உணவுப் பொருட்களை வாயால் ஊதிச் சாப்பிடுவதில் தவறில்லை.

ஸஹ்ல் பின் ஸ:.து அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் காலத்தில் சலிக்கப்படாத கோதுமையை எவ்வாறு சாப்பிடுவீர்கள்? எனக் கேட்டேன். அதற்கு நாங்கள் அதை (திருகையிலிட்டு) அரைப்போம், பிறகு (வாயால்) அதை ஊதுவோம். பறக்க வேண்டிய (தவிடு, உமி போன்ற) வை பறந்து விடும் எஞ்சியதை நாங்கள் தண்ணீர் கலந்து சாப்பிடுவோம் என்று பதிலளித்தார்கள்.

*அறிவிப்பவர் : சலமா பின் தீனார் (ரஹ்) நூல் : புகாரி, 5413, 5410, திர்மிதி : 2287, அஹ்மது 21748, இப்னு மாஜா : 3326.*

### பால் குடித்ததும் வாய் கொப்பளித்தல்

நபி (ஸல்) அவர்கள் பால் குடித்தார்கள். தண்ணீர் கொண்டு வரச் செய்து வாய் கொப்பளித்தார்கள். அதிலே கொழுப்பு இருக்கிறது (எனவே தான் வாய்க் கொப்பளித்தேன்) என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி) நூல் : முஸ்லிம் 537, புகாரி : 211, திர்மிதி : 82, நஸாயீ : 187 அபூதாவூது : 168, இப்னு மாஜா : 491, அஹ்மது : 1850, 1903, 2893.*



பாலில் கொழுப்பு இருப்பதால் அதை அருந்திய பின் நபியவர்கள் வாய்கொப்பளித்துள்ளார்கள். இது போன்ற கொழுப்புள்ள பண்டங்கள் எதை சாப்பிட்டாலும் அதற்காக வாய் கொப்பளிப்பது நல்லது என்பதை இதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

## உணவுப் பாத்திரங்கள்

### தங்கம் வெள்ளிப் பாத்திரத்தில் சாப்பிடுதல் :

தங்கம் மற்றும் வெள்ளிப் பாத்திரத்தில் குடிப்பதையும் அதில் சாப்பிடுவதையும் விட்டு நபி (ஸல்) அவர்கள் எங்களை தடுத்தார்கள்.

*அறிவிப்பவர் : ஹுதை:.பா பின் அல்யமான் (ரழி) நூல் : புகாரி : 5837, 5633, முஸ்லிம் : 3846, 3839, இப்னுமாஜா : 3405, 3580, அஹ்மது : 22182, 22225, 22340.*

யார் தங்கம் வெள்ளிப் பாத்திரத்தில் அருந்துகிறாரோ அவர் தன் வயிற்றில் நரக நெருப்பையே ஊற்றிக் கொள்கிறார்.

*அறிவிப்பவர் : உம்மு ஸலமா (ரழி) நூல் : புகாரி : 5634, முஸ்லிம் : 3847, இப்னுமாஜா : 3404, அஹ்மது : 25370, 25381, 25395*

### ஹராமான உணவுக்குப் பயன்படுத்தப்படும் பாத்திரம்

மதுபானம், பன்றி போன்றவை தடுக்கப்பட்டவுடன் அதற்காக பயன்படுத்தப்படும் பாத்திரத்தில் சாப்பிடுவதையும் நபி (ஸல்) அவர்கள் தடை செய்திருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அப்துல் கைஸ் தூதுக் குழுவினரிடம் (மதுபானத்திற்கு பயன்படுத்தப்படும்) சுரைக்காய் குடுவை, மண்சாடி, பேரீச்ச மரத்தின் அடிபாகத்தை குடைந்து தயாரிக்கப்பட்ட பாத்திரம், தார் பூசப்பட்ட பாத்திரம் ஆகியவற்றை உங்களுக்கு நான் தடை விதிக்கிறேன். வேண்டுமானால் தோல் பைகளில் (அனுமதிக்கப்பட்ட

பானங்களை) அருந்திக் கொள்க. அதன் வாய்ப் பகுதியில் சுருட்டிக் கொள்க என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி)நூல்: முஸ்லிம் : 3692, 3696, 3697, 3698, 3717 புகாரி : 53, 87, 523, 1398, 3095, 3492, 3510, 4368, 4369, 5587, 5594, 5595, 6176, 7266, 7556, முஸ்லிம் : 23, 25, 3688, 3689, 3690.*

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் அபூஸ.:.லபா அல்ஹுஸனிய்யி (ரழி) அவர்கள் கேட்டார்கள் நாங்கள் வேதக்காரர்களை கடந்து செல்கிறோம் அவர்கள் தங்களுடைய பாத்திரத்தில் பன்றி இறைச்சியை சமைக்கிறார்கள் தங்களது பாத்திரத்தில் மதுவையும் குடிக்கிறார்கள். (நாங்கள் என்ன செய்வது? எனக் கேட்டார்கள்) அது தவிர வேறு பாத்திரம் உங்களுக்குக் கிடைத்தால் அதில் நீங்கள் சாப்பிடுங்கள் குடியுங்கள் வேறு பாத்திரம் இல்லாவிட்டால் அதைத் தண்ணீரால் கழுவி விட்டு அதில் சாப்பிடுங்கள் குடியுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூ ஸ.:.லபா நூல் : அபூதாவூது : 3342, புகாரி : 5478, 5488, 5496, முஸ்லிம் : 3567, திர்மிதி : 1719. இப்னுமாஜா 3198.*

தடுக்கப்பட்ட உணவிற்காக பயன்படுத்தப்பட்ட பாத்திரத்தில் சாப்பிடக் கூடாது எனும் இந்தத் தடை ஆரம்பகாலச் சட்டமாகும் பிறகு அது மாற்றப்பட்டு விட்டது.

தோல் பாத்திரங்களில் ஊற்றி வைக்கப்பட்ட பானங்களைத் தவிர (பாத்திரங்களில் உள்ள வேறெந்த பானத்தையும்) அருந்த வேண்டாமென உங்களுக்கு நான் தடை விதித்திருந்தேன். இனி எல்லாப் பாத்திரங்களிலும் அருந்திக் கொள்ளுங்கள். எனினும் போதை தரக் கூடியதை அருந்தாதீர்கள் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : புரைதா (ரழி) நூல் : முஸ்லிம் : 3723, 1623, 3651, நஸாயீ : 2005 4353, 5558, அஹ்மது : 21880, 21925, 21937, 21960.*



(சில குறிப்பிட்ட) பாத்திரங்களைப் பயன்படுத்த வேண்டாமென உங்களுக்கு நான் தடை விதித்திருந்தேன். (இப்போது கூறுகிறேன்) பாத்திரங்கள் (அ) பாத்திரம் எந்த ஒன்றையும் அனுமதிக்கப்பட்டதாக ஆக்குவதுமில்லை எந்த ஒன்றையும் தடை செய்யப்பட்டதாக ஆக்குவதும் இல்லை. எனவே போதை தரும் அனைத்தும் தடை செய்யப்பட்டதாகும். என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : புரைதா (ரழி)நூல் : முஸ்லிம் : 3724,*

**நாய் வாய் வைத்த பாத்திரம்.**

பாத்திரத்தில் நாய் வாய் வைத்து விட்டால் அதை நன்கு சுத்தம் செய்த பின்பே பயன்படுத்த வேண்டும். ஏனெனில் அதனுடைய எச்சிலில் உள்ள கிருமிகள் வேறெந்த பிராணிகளை விடவும் மனிதனுக்கு அதிகக் கேடு செய்கின்றன. அதன் வழியாகத் தான் ரேபிஸ் எனும் நோய் பரவுவதாக மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள்.

எனவே தான் நாய்க் கடி பட்டவர்களுக்கு வீரியம் நிறைந்த ஊசி மருந்துகளை தொடர்ச்சியாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

மேலும் நாய் வாய் வைத்த பாத்திரத்தைச் சுத்தப்படுத்தும் முறை குறித்து நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள்.

உங்களில் ஒருவருடைய பாத்திரத்தில் நாய் வாய் வைத்து விட்டால் அதை தூய்மை செய்யும் முறையானது ஏழு முறை அதை அவர் கழுவுவதாகும். முதல் முறை மண்ணால் அதைக் கழுவ வேண்டும்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம் : 471, 418, 419, 420, 421, புகாரி : 172. நஸாயி : 63, 64, 333, 336, 337, இப்னுமாஜா : 357, 360, அஹ்மது : 70, 43, 7135, 7286, 7348, 9146, 9948.*

பாத்திரத்தைச் சுத்தப்படுத்தும் போது ஏழுமுறை கழுவ வேண்டும், மண்ணையும் பயன்படுத்த வேண்டும் என்ற

இவ்விரண்டு விதிகளும் நாய் வாய் வைத்த பாத்திரத்திற்கு மட்டுமே உரிய சட்டமாகும்.

வேறு பொருட்களிலோ, அல்லது வேறு வழிகளிலோ அசுத்தம் ஏற்பட்டால் இதைப் பின்பற்றத் தேவையில்லை.

பூனை, கோழி, குருவி, காகம் போன்ற நம்மை சுற்றி வாழும் பிராணிகள் பாத்திரத்தில் வாய் வைத்து விட்டால் பாத்திரமோ அதிலுள்ள உணவுப் பொருட்களோ அசுத்தமாகி விடுவதில்லை அவற்றிற்கு இந்த வழிமுறையைப் பயன்படுத்தி சுத்தப்படுத்தவும் தேவையில்லை.

அபூகதாதா (ரழி) அவர்கள் உளுச் செய்வதற்காக நான் தண்ணீர் எடுத்து வைத்தேன். உடனே ஒரு பூனை வந்து அதைக் குடிக்க ஆரம்பித்தது. அவர் பூனை குடிப்பதற்கு ஏற்றவாறு பாத்திரத்தைச் சாய்த்தார். என் சகோதரர் மகளே! இதில் ஆச்சர்யப்படுகிறாயா? என்று கேட்டார். நான் ஆம் என்றேன் இவை அசுத்தமில்லை. இவை உங்களை சுற்றி வரக் கூடியவை என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாகக் குறிப்பிட்டார்.

*அறிவிப்பவர் : கப்ஷாபின்த் கஅப் (ரழி) நூல் : திர்மிதி : 85, நஸாயீ 67, அபூதாவூது : 68, இப்னு மாஜா : 361, அஹ்மது : 61490, 21535, 21586.*



## தடுக்கப்பட்டவையும் அதன் கேடுகளும்

### தடுக்கப்பட்டவை கெட்டவையே

மனிதனின் உடல், உயிர், அறிவார்ந்த நம்பிக்கை, மானம் மரியாதை என வாழ்வின் ஏதேனும் ஒரு கட்டத்தில் மனிதனுக்குத் தீங்கு தருவதைத் தான் இறைவன் தடைசெய்துள்ளான்.

இதைப் பற்றி இறைவன் கூறும் போது...

எழுதப் படிக்கத் தெரியாத இத்தூதரை இந்த நபியை அவர்கள் பின்பற்றுகின்றனர் தங்களிடம் உள்ள தவ்ராத்திலும் இன்ஜீலிலும் இவரைப் பற்றி எழுதப் பட்டிருப்பதை அவர்கள் காண்கின்றனர். இவர் நன்மையை அவர்களுக்கு ஏவுகிறார். தீமையை விட்டும் அவர்களை தடுக்கிறார். தூய்மையானவற்றை அவர்களுக்கு அனுமதிக்கிறார். அசுத்தமானவைகளை அவர்களுக்கு தடை செய்கிறார்.

*அல்குர்ஆன் : 7 : 157*

தடுக்கப்பட்ட உணவை உண்பதால் உடலுக்கு ஆரோக்கியம் பெருகும், வலிமை கூடும் எனக் கூறப் பட்டால் அது பெரும்பாலும் மறுக்கப்பட வேண்டிய ஷைத்தானியக் கூற்றாகத் தான் இருக்கும்

ஏனெனில் ஷைத்தான் நமது ஆதிப் பெற்றோர் ஆதம், ஹவ்வா இருவரிடமும் சென்று இறைவன் உங்களுக்கு தடை செய்திருக்கும் மரத்திலிருந்து நீங்கள் சாப்பிட்டால் உங்களுக்கு நன்மை விளையும் என்ற ஆசை வார்த்தையின் மூலம் தான் வழி கொடுத்தான்.

ஆதமே நீயும் உமது மனைவியும் இந்தச் சொர்க்கத்தில் தங்குங்கள்! விரும்பியவாறு இருவரும் உண்ணுங்கள் இந்த மரத்தை நெருங்காதீர்கள். (நெருங்கினால்) இருவரும் அநீதி இழைத்தவர்களாகி விடுவீர்கள் (என இறைவன் கூறினான்)

அவ்விருவருக்கும் மறைக்கப்பட்டிருந்த வெட்கத் தலங்களைப் பற்றி புரிய வைப்பதற்காக ஷைத்தான் அவ்விருவருக்கும் தீய எண்ணத்தை ஏற்படுத்தினான். இருவரும் வானவர்களாக ஆகி விடுவீர்கள் நிரந்தரமாக இங்கேயே தங்கி விடுவீர்கள் என்பதற்காகவே தவிர உங்கள் இறைவன் இந்த மரத்தை உங்களுக்குத் தடை செய்யவில்லை என்று கூறினான். நான் உங்கள் இருவருக்கும் நலம் நாடுபவனே என்று அவர்களிடம் சத்தியம் செய்தான்.

அவ்விருவரையும் ஏமாற்றி (தரம்) தாழ்த்தினான். அவ்விருவரும் அம் மரத்தைச் சுவைத்த போது அவர்களின் வெட்கத் தலங்கள் பற்றி அவர்களுக்குப் புரிந்தது. அவ்விருவரும் சொர்க்கத்தின் இலையினால் தம்மை மூடிக் கொள்ள முயன்றார்கள். அவர்களை அவர்களின் இறைவன் அழைத்து இம்மரத்தை உங்களுக்கு நான் தடை செய்யவில்லையா? ஷைத்தான் உங்கள் இருவருக்கும் பகிரங்க எதிரி என்று உங்களிடம் நான் கூறவில்லையா? எனக் கேட்டான்.

*அல்குர்ஆன் : 7:19-22,.20:120,121*

மதுபானம் மற்றும் சூதாட்டத்தைத் தடை செய்யும் வசனத்திலும் அவற்றால் மனிதனுக்கு அதிக கேடுகள் ஏற்படுகின்றன என்பதே தடை செய்வதற்கான முக்கிய காரணமாகச் சொல்லப்படுகிறது.

மது மற்றும் சூதாட்டம் பற்றி உம்மிடம் கேட்கின்றனர் அவ்விரண்டிலும் பெரும் கேடும் மக்களுக்குச் சில பயன்களும் உள்ளன. அவ்விரண்டில் பயனை விட கேடு மிகப் பெரியது எனக் கூறுவீராக!

*அல்குர் ஆன் : 2: 219*

மது மற்றும் சூதாட்டம் மூலம் உங்களுக்கிடையே பகைமை மற்றும் வெறுப்பை ஏற்படுத்தவும், அல்லாஹ்வின் நினைவை விட்டும், தொழுகையை விட்டும் உங்களைத் தடுக்கவும்



ஷைத்தான் விரும்புகிறான் எனவே (அவற்றிலிருந்து) விலகிக் கொள்ள மாட்டீர்களா? *அல்குர் ஆன் : 5:90,91*

இறைவன் விதித்துள்ள தடைகள் அனைத்துமே மனிதனைக் காக்கும் கேடயங்கள் தான். அவனது சுதந்திரத்தைப் பறிப்பதற்காக போடப்பட்ட வெற்றுச் சட்டங்கள் இல்லை. உயரமான மலைப் பாதைகளிலும், மேம்பாலங்களிலும் அமைக்கப்பட்டுள்ள வேலிகள் மனிதச் சுதந்திரத்தை எப்படி முறைப்படுத்துகின்றனவோ அது போல கட்டுப்பாடற்ற சுதந்திரத்தால் பெரும் இடர்களில் போய் மனிதன் சிக்கிக் கொள்ளக் கூடாது என்பது தான் இறைச் சட்டத்தின் நோக்கம் என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

**தாமாகச் செத்தவை**

தாமாகச் செத்தவை, இரத்தம், பன்றியின் இறைச்சி, அல்லாஹ் அல்லாதோருக்காக சப்தமிடப்பட்டவை ஆகியவற்றையே அவன் உங்களுக்குத் தடை செய்துள்ளான். வரம்பு மீறாமலும், வலியச் செல்லாமலும் நிர்பந்திக்கப்படுவோர் மீது எந்தக் குற்றமும் இல்லை. அல்லாஹ் மன்னிப்பவன் நிகரற்ற அன்புடையோன்.

*அல்குர் ஆன் : 2:173, 5:3, 16:115.*

இவ்வசனம் நான்கு பொருட்களை உண்ணக் கூடாதவை என தடை செய்கிறது. அதில் முதலாவதாக தாமாகச் செத்தவற்றை சாப்பிடக்கூடாது என்கிறான் இறைவன்.

தாமாகச் செத்தவை என்றால் யாராலும் கொல்லப்படாதது என்பதை எளிதாக விளங்கிக் கொள்வோம். அது போல கடல் வாழ் உயிரிகளைத் தவிர்த்து கால்நடை மற்றும் பறவைகளில் இஸ்லாம் கூறும் முறைப்படி அறுக்கப்படாமல் மனிதனாலோ, விலங்குகளாலோ முறைதவறி கொல்லப்பட்டவையும் தாமாகச் செத்தவையாக கருதப்படும்.

கீழ்காணும் வசனம் அதைத் தெளிவுப்படுத்துகிறது.

கழுத்து நெறிக்கப்பட்டவை, அடிப்பட்டவை (மேட்டிலிருந்து) உருண்டு விழுந்தவை. (தமக்கிடையே) மோதிக் கொண்டவை மற்றும் வனவிலங்குகள் சாப்பிட்ட பிராணிகள் ஆகியவற்றில் (உயிர் இருந்து) நீங்கள் முறையாக அறுத்தவை தவிர (மற்றவை தடைசெய்யப்பட்டுள்ளன)

அல்குர்ஆன் : 5:3.

பெரும்பாலும் ஏதேனும் ஒரு நோய்த் தொற்றின் காரணமாகவோ அல்லது விஷத் தன்மையுள்ள பொருட்களைச் சாப்பிடுவதனாலோ பிராணிகள் தாமாக இறக்கின்றன.

அந்த இறைச்சியை நாம் சாப்பிட்டால் அதில் உள்ள நோய்க் கிருமியும், விஷமும் நமது உடலுக்குள் சென்று நமது ஆரோக்கியத்தைக் கெடுத்து விடும்.

மேலும், தாமாகவும் முறைப்படி அறுக்காமலும் சாகின்ற பிராணிகளின் உடலில் உள்ள இரத்தம் வெளியேறாமல் உடலிலே தங்கிவிடும். அந்த இரத்தத்தில் உணவிலிருந்து பெறப்படும் சத்துக்கள் மட்டுமல்லாது அதன் கழிவுகளும் பல்வேறு கிருமிகளும் ஓடிக்கொண்டிருக்கும் பிராணிகள் உயிருடன் இருக்கும் போது உடனுக்குடன் இரத்தம் சுத்திகரிக்கப்பட்டுக் கொண்டே இருப்பதால் அந்தக் கிருமிகள் எந்தக் கேட்டையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் அவை இறந்தவுடன் அதில் உள்ள கிருமிகள் பல்கிப்பெருக ஆரம்பிக்கும். பிறகு சுற்றியிருக்கும் இறைச்சிக்கும் பரவி அதையும் உண்பதற்குத் தகுதியற்றதாக ஆக்கிவிடும்.

அவைகள் இறந்து ஓரிரு நாட்கள் ஆகிவிட்டால் எந்த அளவுக்கு அவை கெட்டுப் போய் இருக்கின்றன என்பதை ஆராய்ச்சி ஏதுமின்றி அதில் உள்ள கிருமிகளையும், புழுக்களையும் பார்த்தே தெரிந்து கொள்ளலாம்.



**இரத்தம்**

மேற்கூறப்பட்ட அல்குர் ஆன் : 2:173, 5:3, 16:115. வசனத்தின் படி இரத்தமும் உண்பதற்கு தடுக்கப்பட்டதாகும்.

உணவில் உள்ள சத்துக்களைப் பிரித்தெடுத்து உடலின் எல்லா பாகங்களுக்கும் கொண்டு சேர்ப்பதும் அவற்றின் கழிவுகளை சுமந்து வந்து சுத்திகரிப்பு நிலையமான சிறுநீரகத்தில் தள்ளி சுத்தப்படுத்துவதும் இரத்தத்தின் மிக முக்கியப் பணியாகும்.

நுரையீரல் வழியாக நாம் சுவாசிக்கும் காற்றில் உள்ள ஆக்ஸிஜனை எல்லாத் திசுக்களுக்கும் கொண்டு சேர்த்து விட்டு அவற்றின் கழிவுப் பொருளான கார்பன்-டை-ஆக்ஸைடைச் சுமந்து வந்து மூக்கின் வழியாக வெளியேற்றுவதும் இரத்தத்தின் வேலையே! கழிவுகளைச் சுமந்து கொண்டே ஓடிக் கொண்டிருக்கும் இரத்தத்தை சுத்திகரித்து தூய்மைப்படுத்தும் பணியை சிறுநீரகம் ஒவ்வொரு வினாடியும் செய்து கொண்டே இருக்கும்.

நிமிடம் ஒன்றுக்கு 1.2 லிட்டர் வீதம் நாள் ஒன்றுக்கு 1700 லிட்டர் இரத்தம் சிறுநீரகத்தில் பாய்ச்சப்பட்டு சுத்தம் செய்யப்படுகிறது.

தொடர்ச்சியாக நடைபெறும் இப்பணி ஒரு நிமிடம் நிறுத்தப்பட்டாலும் இரத்தம் என்பது அசுத்தம் நிறைந்த கழிவு நீராகி விடும்.

உடலில் உள்ள நோய்களின் பாதிப்பை அறிய மல ஜலத்தைப் பரிசோதனை செய்யும் மருத்துவர்கள் இரத்தத்தையும் சோதனைக்கு உட்படுத்துவது மல ஜலத்தைப் போல் இரத்தத்திலும் கிருமிகள் நிறைந்துள்ளன என்பதற்கு வெளிப்படையான ஓர் சான்றாகும்.

சிறுநீரகம் பழுதாகி சுத்திகரிப்பு பணியில் தொய்வு ஏற்பட்டால் அதில் உள்ள கிருமிகள் வளர்ந்து சோர்வு, வாந்தி,

மூச்சுத் திணறல் நிறம் கருத்தல் என உடல் உறுப்புகள் ஒவ்வொன்றாய் தளர்ச்சியடைந்து இறுதியில் உயிரிழப்பில் போய் முடிந்து விடும்.

இரத்தத்தில் உள்ள அசுத்தம் அதற்குரிய உடலையே செல்லரிக்கச் செய்து விடுகிறதென்றால் அதை எடுத்து நாம் சாப்பிட்டால் நமக்கு ஏற்படும் கேடுகளை விவரிக்கத் தேவையில்லை.

கை விரல்களில் காயம்பட்டு வடியும் இரத்தத்தை வாயில் வைத்து உறிஞ்சும் பழக்கம் பரவலாகக் காணப்படுகிறது. இதுவும் தடைசெய்யப்பட்டது தான்.

**பன்றி**

மேற்கூறப்பட்ட அல்குர் ஆன் : *2:173, 5:3, 16:115.* வசனத்தின் படி பன்றியும் உண்பதற்குத் தடுக்கப்பட்டதாகும்.

பன்றியை உணவாக உட்கொள்வதால் 70 வகை நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என மருத்துவ உலகம் கண்டறிந்துள்ளது. வட்டப் புழு, கொக்கிப் புழு, நாடாப் புழு, ஊசிப் புழு போன்ற நுண்கிருமிகள் அதில் நிறைந்துள்ளன.

இதில் உள்ள நாடாப் புழு மூளைக்காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், இதய வீக்கம் போன்ற நோய்களுக்கு காரணமாக அமைந்து விடுவதும் உண்டு.

அதிகபட்ச வெப்பத்திலும் அழிந்து விடாத திரிகூரா திச்சுராஸிஸ் எனும் ஆபத்தான குடற்புழுவும் பன்றியில் உள்ளது.

இதய நோயாளிகளுக்கு கொழுப்பு நிறைந்த பண்டங்கள் தான் முதல் நிலை எதிரிஎன்பதை நாம் அறிவோம்100 சதவீதம் கொழுப்பு (கொலஸ்டிரால்) நீக்கப்பட்ட எண்ணெய், என்ற விளம்பரமெல்லாம் இவர்களை குறி வைத்து தான் வலம் வருகின்றன.



இவர்களை ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி சாப்பிடக் கூடாது என மருத்துவர்கள் எச்சரிப்பதும் அவற்றில் உள்ள கொழுப்பின் காரணமாகத் தான்.

பன்றியை எடுத்துக் கொண்டால் ஒரு கிலோ இறைச்சியில் அரை கிலோ கொழுப்பாகவே இருக்கிறது.

இதோடு ஒப்பிடும் போது ஆடு, மாடுகளில் உள்ள கொழுப்பை ஒன்றுமே இல்லை என்று சொல்லி விடலாம்.

ஏனெனில் ஒரு கிலோ ஆட்டிறைச்சியில் கொழுப்பு என்பது வெறும் 170 கிராம் மட்டுமே அதுவே மாட்டிறைச்சியில் வெறும் 50 கிராம் தான்.

கிலோவுக்கு ஐம்பது கிராம் எங்கே? அரைக் கிலோ எங்கே? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பன்றியை உணவாக உட்கொள்கிற மேல்திசை நாடுகளை விட மற்ற நாடுகளில் இதய நோயாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பது கூட இதற்கு ஒரு சான்று.

**அல்லாஹ் அல்லாதோருக்காக உருவாக்கப்பட்டவை**

அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களுக்காக அறுக்கப்பட்டது, படையல் செய்யப்பட்டது, நேர்ச்சை செய்யப்பட்டது ஆகியவையும் மேற்கூறப்பட்ட அல்குர் ஆன் : *2:173, 5:3, 16:115.* வசனத்தின் படி உண்பதற்கு தடுக்கப்பட்டதாகும்.

இவை மனித உடலுக்கு நேரடியாக எந்தக் கேடும் செய்வதில்லை. ஆனால் உடலை விட உயர்வான பகுத்தறிவுக்கு கேடு செய்கிறது. அதன் கூர்மையையும், சிந்தனைத் திறனையும் மழுங்கடித்து விடுகிறது.

சாதாரண உணவில் இல்லாத ஆற்றலும் சக்தியும் படையல் உணவில் இருப்பதாக நம்பப்படுகிறது.

அதனால் தான் குறைந்த அளவுள்ள பொருளைக் கூட(படையல் அல்லது தப்ரூக்) கூட்டத்திலிருக்கும் அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள்.

சாதாரண நேரத்தில் ஒரு வாழைப் பழத்தை பல துண்டுகளாகப் பங்கிட்டுக் கொடுத்தால் முகம் சுளித்து வாங்க மறுப்போர் கூட படையலிடப்பட்டது என்றதும் பக்தி சிரத்தையோடு வாங்கிக் கொள்வதற்கும் இதுவே காரணமாகும்.

இந்த நம்பிக்கையை பகுத்தறிவின் துணை கொண்டு ஆய்வுக்கு உட்படுத்தினால் இது அர்த்தமற்ற மூட நம்பிக்கை என்பது தெளிவாகும்.

படையிலிடும் பொருளை படைப்பதற்கு முன் ஆய்வுக் கூடத்திற்க்கு அனுப்பி அதில் என்னென்ன பொருட்கள், சத்துக்கள் அடங்கியுள்ளன என ஆய்வு செய்வோம். அதே பொருளை படையலுக்குப் பின் மீண்டும் பழையபடி சோதனைக்கு உட்படுத்துவோம்.

இரண்டு முடிவுகளுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இருக்கப் போவதில்லை. எந்தச் சத்தும் அதிகரிக்கப் போவதுமில்லை.

அழுகும் பொருளாக இருந்தால் முன்பிருந்ததை விட மேலும் கெட்டுப் போக வாய்ப்புண்டு

எந்தச் சத்தும் அதிகமாகவில்லை என்பது அறிவியல் பூர்வமாக சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நிரூபிக்கப் பட்ட பின்னரும் இல்லை இல்லை அதில் ஏதோ இருக்கத் தான் செய்கிறது. அது எங்கள் நம்பிக்கை என வாதிட்டால் அது அறிவார்ந்த நம்பிக்கையாக இருக்க முடியுமா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



யாருமில்லாத வெட்ட வெளியை நோக்கி வெகு ஆக்ரோஷத்துடன் பேசிக் கொண்டிருப்போரைப் பார்த்து மன நோயாளிகள் என பரிதாபப் பட்டிருப்போம்.

அது போலத் தானே படையிலிடப்பட்ட உணவில் இல்லாத ஒன்றை இருப்பதாக நம்புவதும்

மவ்லூது, கத்தம், பாத்திஹா. கந்தூரி, உரூஸ் போன்ற நிகழ்ச்சிகளை முன்னிட்டு வழங்கப்படும். உணவுகளும் இதே நிலையில் உள்ளவை தான். ஏனெனில் அங்கும் இதே நம்பிக்கைத் தான் வெளிப்படுகிறது.

பாத்திஹாவுக்காக தயாரிக்கப்படும் உணவைப் பொறுத்த வரை மொத்த உணவும் பாத்திஹாவின் போது எடுத்து வைக்கப்படுவதில்லை. கொஞ்ச உணவு தான் பாத்திஹாவின் போது முன்னால் இருக்கும். அந்த கொஞ்சத்தை மட்டும் தவிர்த்துக் கொண்டால் போதுமானது ஒட்டு மொத்தமாக ∴ பாத்திஹா உணவையே ஒதுக்கத் தேவையில்லை என சிலர் கூறி வருகின்றனர்.

முன்னால் வைக்கப்பட்டது கொஞ்சமாக இருந்தாலும் வைக்கப்படாத உணவிலும் பரகத் இறங்குவதாகத் தான் நம்பப்படுகிறது.

அதனால் தான் பாத்திஹா ஓதுவதற்கு முன்னால் அந்த உணவிலிருந்து எதையும் சாப்பிடக் கூடாது எனும் கட்டுப்பாடுகளும் கடைபிடிக்கப்படுகின்றன.

எனவே பாத்திஹா உணவில் இதைச் சாப்பிடலாம் அதைச் சாப்பிடக் கூடாது என வித்தியாசப்படுத்த வழியில்லை.

மேலும் அவர்கள்தான் தவறான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் நீங்கள் அந்த நம்பிக்கையில்லாமல் சாப்பிடலாமே என்று சிலர்கேட்கின்றனர்

இது போன்ற தவறான நம்பிக்கை வைக்கப்பட்ட உணவை நாம் சாப்பிட்டால் அவர்களின் மூட நம்பிக்கையை நாமும் ஆதாரித்த நிலை ஏற்படும்.

தவறுகளைக் கண்டால் எதிர்த்தல், தடுத்தல், தவிர்த்தல் எனும் உயர்பண்புகளை கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவிட்டு நாமும் அந்த தவறில் விழுந்து விடும் பேரபாயமும் ஏற்பட்டு விடக்கூடும்.

எனவே இது போன்ற உணவுகளை சாப்பிடுவதை விட்டும் முற்றாக விலகிக் கொள்ள வேண்டும்.

இது வரை கூறப்பட்டதைத் தவிர மேலும் சில உணவுகள் மார்க்கத்தில் தடுக்கப்பட்டுள்ளன.இவற்றால் ஏற்படும் கேடுகளைப் பற்றி நமக்கு முன் வாழ்ந்தவர்கள் எதையும் அறிந்திருக்கவில்லை.ஆயினும் பூரணமான இறை நம்பிக்கையோடு அதை தம் வாழ்வில் கடைபிடித்தார்கள்.அது போல நாமும் அறியாத பல விஷயங்கள் எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்படலாம் நாம் அறிந்திருப்பதை விட நமக்கு பின் வரக்கூடியவர்கள் அதைப் பற்றி அதிகம் அறிந்து கொள்வார்கள். அது வரை நாமும் முழுமையான இறையச்சத்தோடு அவற்றை நம்வாழ்வில் கடைபிடிக்க வேண்டும்.

### அல்லாஹ்வின் பெயர்கூறப்படாதவை

நீங்கள் அல்லாஹ்வின் வசனங்களை நம்பியவர்களாக இருந்தால் அவன் பெயர்கூறப்பட(்டு அறுக்கப்பட்)டதை உண்ணுங்கள்.

*அல்குர்ஆன் : 6:118*

அல்லாஹ்வின் பெயர்கூறப்படாததை உண்ணாதீர்கள். அது பாவமாகும்.

*அல்குர் ஆன் : 6:121*



### வேட்டை நகமுடைய பறவைகள்

மிக்லப் உடைய ஒவ்வொரு பறவையையும் உண்பதற்கு நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். (வேட்டையாடித் தின்பதற்கு பயன்படும் நகங்கள் மிக்லப் எனப்படும்.)

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி) நூல் : முஸ்லிம் : 3574, 3575 நஸயீ : 4273, அபூதாவூது : 3309, 3311 இப்னுமாஜா : 3225 அஹ்மது : 2083, 2488, 2611, 2867, 2910, 2974 3363*

### கோரைப் பல்லுடைய விலங்குகள்

விலங்கினங்களில் கோரைப் பற்கள் உள்ளவற்றை சாப்பிடக் கூடாது என நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்

*அறிவிப்பவர் : அபூஸ∴லபா (ரழி) நூல் புகாரி : 5530, 5781 முஸ்லிம் : 3570, 3571, 3572, திர்மிதி : 1397, நஸயீ 4251, 4252, 4267, அபூதாவூது 3308, இப்னு மாஜா : 3223 அஹ்மது : 17072*

கோரைப்பல் என்பது தாடையின் முன் பகுதியில் இருக்கும் நான்கு பற்களை அடுத்திருக்கும் கூர்மையான நீண்ட பற்களைக் குறிக்கும்.

### கழுதை

கைபர் போரின் போது நாட்டுக் கழுதையின் இறைச்சியை சாப்பிடுவதை விட்டும் நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்

*அறிவிப்பவர் : இப்னு உமர் (ரழி) நூல்: புகாரி 4217, 4215, 4218, 5522,*

### மதுபானம் மற்றும் போதை தருபவை

நம்பிக்கை கொண்டோரே! மது, சூதாட்டம், பலிபீடங்கள் குறி கேட்பதற்கான அம்புகள் ஆகியவை அருவருப்பானதும், ஷைத்தானின் நடவடிக்கையுமாகும். எனவே இதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள் வெற்றி பெறுவீர்கள்.

மது மற்றும் சூதாட்டத்தின் மூலம் உங்களுக்கிடையே பகைமையை, வெறுப்பை ஏற்படுத்தவும், அல்லாஹ்வின்

நினைவை விட்டும், தொழுகையை விட்டும் உங்களைத் தடுக்கவுமே ஷைத்தான் விரும்புகிறான் எனவே விலகிக் கொள்ள மாட்டீர்களா?

*அல்குர்ஆன் : 5:90, 91*

எதை அதிகம் (சாப்பிடும் போது) போதை தருகிறதோ அதில் குறைவானதும் ஹராமாகும்.

*அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி) நூல் : திர்மிதி : 1788, அபூதாவூது : 3196, இப்னுமாஜா : 3384, அஹ்மது : 14176.*

விபச்சாரகன் விபச்சாரம் செய்யும் போது இறைநம்பிக்கையாளனாக இருப்பதில்லை. குடிகாரன் குடிக்கும் போது மு..மினாக இருப்பதில்லை. திருடன் திருடும் போது மு..மினாக இருப்பதில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புகாரி : 5578, 2475, 7672, 6810, முஸ்லிம் : 86, 87, நஸயீ : 4787, 4788, 4789, 5565, 5566, அபூதாவூது : 4069, இப்னுமாஜா : 3926 அஹ்மது : 7017, 7855, 8646*

**மதுவின் தீமைகள்**

நமது மூளையின் செயல்பாடுகள் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாக பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட ஒரு பிரிவில் கோளாறு ஏற்பட்டால் அதற்குரிய பணிகள் யாவும் முடங்கிப் போகும். பேசுதல், கேட்டல், சிந்தித்தல், பார்த்தல், சிரித்தல், அழுதல், இயங்குதல் என அனைத்து செயல்களுக்கும் தனித் தனி பிரிவுகள் உள்ளன.

கண்ட்ரோல் ரூம் (கட்டுப்பாட்டு அறை) என்பது அதில் ஒரு பிரிவு. மனிதன் செய்யத் தகாத காரியத்தை செய்ய விடாமல் தடுத்து கட்டுப் படுத்துவது இந்தப் பிரிவின் பணியாகும்.



உதாரணமாக நான்கு பேர் கூடியிருக்கும் பொது இடத்தில் இருக்கும் போது மல ஜலம் கழிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டால் உடனே கண்ட்ரோல் ரூம் தனது பணியை துவக்கும். இந்த இடம் அதற்குரிய இடமில்லை என்பதை உணர்த்தி சம்பந்தப்பட்ட உறுப்பை கட்டுக்குள் வைக்கும். கழிவறைக்கு சென்று உரிய இடத்தில் அமரும் வரை இந்தப் பணி தொடரும். உரிய இடத்தில் அமர்ந்ததும் தனது கட்டுப்பாட்டை நீக்கிக் கொண்டு கழிவு வெளியேற உதவும்.

இவ்வாறே கோபம், பாசம், அழுகை சிரிப்பு, பாலுணர்வு என அனைத்து உணர்ச்சிகளையும், செயல்பாடுகளையும் அது வெளிப்படக் கூடாத இடங்களில் வெளிப்படாமல் தடுத்து வைக்கும்

மதுபானங்கள் இந்த கண்ட்ரோல் ரூமை தாக்கி அதை செயல்படவிடாமல் முடக்கி விடும்.

அதனால் தான் பொது இடங்களில் நாகரீகமுள்ள எந்த மனிதனும் செய்யத் தயங்குகிற கேவலமான பல காரியங்களை குடிகாரர்கள் சர்வசாதாரணமாக செய்து மானமிழந்து நிற்பதை பார்க்கிறோம்.

கொலை, கற்பழிப்பு, வீண் சண்டை போன்ற ஏராளமான குற்றச் செயல்களுக்கு பின்ணணியில் போதைப் பொருட்களே உள்ளன.

மனித உயிர்களை மொத்தமாக அள்ளிச் செல்லும் வாகன விபத்துகளுக்கு குடிகார வாகன ஓட்டிகளே, முதன்மை காரணமாக இருக்கின்றனர்

குடும்பப் பிரச்சனைகள் பலவற்றுக்கும் போதையில் தட்டழியும் கணவன்மார்களே காரணமாய்த் திகழ்கின்றனர்

குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் பயன்பட வேண்டிய பொருளாதாரம் குடியின் மூலம் பாழாய்ப் போகிறது. .

தொடர்ச்சியாக மது அருந்தும் போது உடலில் ஆல்கஹாலின் அளவு அதிகரிக்கும். அதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி குறையும். சிறு சிறு நோய்களைக் கூட எதிர்த்து நிற்க முடியாமல் உடல் பலஹீனமடையும்.

கை, கால் பதற்றம், உடல் நடுக்கம், நரம்புத் தளர்ச்சி, குடல் அழற்சி, இதய நோய் என உடல் உறுப்புகள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக பாதிக்கப்பட்டு இறுதியில் படுத்த படுக்கையாகி விடுவார். அவர் மூலம் வரவேண்டிய வருமானம் தடைபடும்! படிக்க வேண்டிய வயதில் அவரது பிள்ளைகள் பணிக்குச் செல்லும் அவலம் ஏற்படும்.

பிள்ளைகளின் வருமானமும் குடும்பத் தேவைக்குப் பயன்படாமல் அவரின் மருத்துவத்திற்கே செலவிட்டு அழ வேண்டியிருக்கும்.

தந்தையின் குடிப் பழக்கம் சிறு வயதிலே பிள்ளைகளையும் தொற்றிக் கொண்டு எதிர்கால சந்ததியும் கெட்டுப் போகும் வாய்ப்புகளும் அதிகம்.

இவ்வாறு மது பல எண்ணற்ற தீமைகளின் கூடாரமாக திகழ்கிறது.

### தீங்கு தருபவை

மேற்கூறப்பட்டவற்றைத் தவிர உயிரினங்கள், தாவரங்கள், தானியங்கள் என எந்தவொன்றிலும் மனிதனுக்கு தீங்கு இருக்கிறது என ஊர்ஜிதமாக கண்டறியப்பட்டால் அதுவும் தடுக்கப்பட்டவையே!

உங்களை நீங்களே கொன்று விடாதீர்கள்

*அல்குர்ஆன் : 4:29*

உங்கள் கைகளால் நாசத்தை தேடிக் கொள்ளாதீர்கள்.

*அல்குர்ஆன் : 2:195*



## அனுமதிக்கப்பட்ட உணவுகள்

### அனைத்தும் அனுமதியே

உண்பதற்கு அனுமதிக்கப்பட்டவை எவை? என்பதற்கு தனியாக எந்த பட்டியலும் இல்லை அவ்வாறு பட்டியலிட நினைத்தால் அதைப் படித்து பின்பற்றுவது சாத்தியமும் இல்லை ஏனெனில் அவற்றின் எண்ணிக்கை மில்லியன் ட்ரில்லியன்களைத் தாண்டும் அதே நேரத்தில் தடுக்கப்பட்டவற்றின் எண்ணிக்கையோ மிகவும் குறைவு .எனவே தடுக்கப்பட்ட்தை அறிந்து கொண்டால் மீதியுள்ள அனைத்தும் அனுமதிக்கப்பட்டவையே என்பதை எளிதாக புரிந்து கொள்ளலாம்.

அவனே பூமியில் உள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான் *அல்குர் ஆன் 2:29*

தடுக்கப்பட்டவை தவிர உலகில் உள்ள ஏனைய அனைத்தும் நாம் உண்பதற்கும் பயன்படுத்துவதற்கும் உரியவையே அதில் நாம் விரும்பியதை சாப்பிடலாம் என்பதை இவ்வசனம் தெளிவுபடுத்துகிறது

எனவே எந்தவொன்றையும் சாப்பிட அனுமதி இருக்கிறதா? என ஆய்வு செய்வதை விட அது தடுக்கப்பட்டிருக்கிறதா? என்று பார்த்து முடிவெடுத்துக் கொள்ளலாம்.

மேலும் தடுக்கப்பட்டவை கூட சில நேரங்களில் சில இடங்களில் சில மனிதர்களை கவனித்து அனுமதிக்கப்பட்டவை யாகலாம் அவை என்னென்ன? என்பதை இப்போது பார்ப்போம்.

### நிர்பந்தத்தில் உள்ளவர் ஹராமைச் சாப்பிடுதல்

உண்பதற்கு அனுமதிக்கப்பட்ட எந்த உணவும் கிடைக்கப் பெறாத ஒருவர் தடுக்கப்பட்டதைச் சாப்பிடலாம்.

தாமாகச் செத்தவை, இரத்தம், பன்றியின் இறைச்சி, அல்லாஹ் அல்லாதோருக்காக அறுக்கப்பட்டவை ஆகியவற்றை அவன் உங்களுக்கு தடை செய்துள்ளான். வரம்பு மீறாமலும் வலியச் செல்லாமலும் நிர்பந்திக்கப் படுவோர் மீது எந்தக் குற்றமும் இல்லை. அல்லாஹ் மன்னிப்பவன் நிகரற்ற அன்புடையோன்.

*அல்குர்ஆன்: 2:173, 5:3 6: 145, 16:115*

ஹலாலான உணவு இருக்கிறது.ஆனால் அதை வாங்கிச் சாப்பிட வசதி இல்லாத வறிய நிலையில் ஒருவர் இருந்தால் அவரும் தடுக்கப் பட்டதை சாப்பிடலாம்.

பாவம் செய்யும் நாட்டமில்லாமல், வறுமையின் காரணமாக நிர்பந்தத்துக்கு ஆளானோரை, அல்லாஹ் மன்னிப்பான், அவன் நிகரற்ற அன்புடையோன்.

*அல்குர் ஆன் : 5:3*

ஒரு மனிதர் தம் மனைவி மக்களுடன் ஹர்ரா எனும் இடத்தில் தங்கியிருந்தார். அவரிடம், ஒருவர் வந்து எனது ஒட்டகம் காணாமல் போய்விட்டது. அதைப் பார்த்தால் பிடித்து வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறிச் (சென்றார்.அவரது ஒட்டகம் கிடைத்து விட்டது.) உரிமையாளர் வரவில்லை. அது நோயுற்றது அதை அறுத்து விடுங்கள் என அவரது மனைவி கூறினார். அவர் மறுத்து விட்டார். ஒட்டகம் இறந்து விட்டது. இப்போதாவது இதன் தோலை உறியுங்கள் கொஞ்சத்தை சாப்பிட்டு விட்டு இறைச்சியையும் கொழுப்பையும் காய வைத்து பயன்படுத்திக் கொள்வோம் என்றார். நபியவர்களிடம் கேட்காமல் எதுவும் செய்யமாட்டேன் என்று கூறிவிட்டு நபியிடம் வந்து இதைப் பற்றி முறையிட்டார்.

அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறரிடம் தேவையாகாத அளவு உம்மிடம் வசதி இருக்கிறதா? எனக் கேட்டார்கள் இல்லை என பதிலளித்தார். அப்படியானால் சாப்பிடுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : ஜாபிர் பின் ஸமுரா (ரழி) நூல் : அபூதாவூது : 3320, அஹ்மது : 19902, 19908, 19998, 20013, 20086.*



இந்தச் செய்தியில் வறிய நிலையில் உள்ளவருக்கு செத்த ஒட்டகத்தைச் சாப்பிட நபியவர்கள் அனுமதியளித்துள்ளார்கள்.

### பசியோடிருப்பவர் பிறர் தோட்டத்தில் சாப்பிடுதல்

உண்ண உணவின்றி பசியில் வாடும் ஒருவர் பிறருக்குச் சொந்தமான தோட்டத்தில் விளைந்து நிற்கும் விளை பொருட்களை சாப்பிட்டுக் கொள்ளலாம்.

முஸ்லிம் ஒருவர் ஒரு மரத்தை நட்டு வைக்கிறார் (அ) விதை விதைத்து விவசாயம் செய்கிறார். அதிலிருந்து மனிதனோ, விலங்கோ (அ) பறவையோ சாப்பிட்டால் அது அவருக்கு தர்மத்திற்குரிய நன்மையைப் பெற்றுத் தரும் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரழி) நூல் : புகாரி : 2320, 6012, முஸ்லிம் : 2904, திர்மிதி : 1303, அஹ்மது : 12938, 12529, 12910, 13064.*

இங்கே நபி (ஸல்) அவர்கள் விலை கொடுத்து வாங்கிச் சாப்பிடுவதைப் பற்றிப் பேசவில்லை. அப்படியிருந்தால் அது வியாபாரமாகிப் போகும் அதை தர்மமாகக் கருத முடியாது.விலங்கு மற்றும் பறவைகளோடு சேர்த்துச் சொல்லியிருப்பதை வைத்துப் பார்க்கும் போது அவைகள் எப்படி பசிக்கும் போது யாரிடமும் அனுமதி பெறாமல் சாப்பிடுகின்றனவோ அது போல பசியில் வாடும் ஒரு மனிதன் உரிமையாளரின் அனுமதி பெறாமல் விளைந்து நிற்கும் தானியங்களை,பழங்களைப் பசி போக்குவதற்காகப் பறித்துத் தின்னலாம் என்பது விளங்குகிறது.

முஸைனா குலத்தைச் சேர்ந்த ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் மரத்திலிருந்து பறிக்கப்படா (மல் அதிலே தொங்கிக் கொண்டிருக்கும்) பழங்களைப் பற்றிக் கேட்டார்.

அதற்கு சேகரித்துக் கொள்ளாமல் வாயால் (வயிற்றுக்கு) சாப்பிட்டவர் மீது எந்தக் குற்றமும் இல்லை என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி)நூல் : அஹ்மது : 6641, 6396, 6458, 6597, 6797திர்மிதி : 1210, நஸயீ : 4872, அபூதாவூது : 1455, 3816, இப்னுமாஜா : 6586.*

## பறித்துத் தின்னவே அனுமதி

தோட்டத்தில் சாப்பிடலாம் எனும் அனுமதி மரம் செடி, கொடிகளில் பறிக்கப்படாமல் இருப்பவைகளுக்கு மட்டும் தான் பொருந்தும்.

பறித்து வைக்கப்பட்டுள்ள பொருட்களில் தோட்டக்காரரின் அனுமதியின்றி கை வைத்திடக் கூடாது. அவ்வாறு செய்தால் அது திருட்டுக் குற்றமாகக் கருதப்படும்.

பழங்களை (மரத்தை விட்டு விட்டு அதன்) பாதுகாப்பு இடங்களிலிருந்து எடுத்தால் (எடுக்கப்பட்ட பொருளின் விலை) ஒரு கேடயத்தின் விலைக்கு சமமாக இருப்பின் அவரது கைகள் வெட்டப்படும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) நூல் : அஹ்மது 6641, 6396, 6458, 6597, நஸயீ: 4872, அபூதாவூது : 1455, 3816 இப்னுமாஜா : 2586*

## பசி போக்கவே அனுமதி

மேலும் இந்த அனுமதி பசியைப் போக்கிக் கொள்வதற்கு மட்டும் தான் அங்கிருந்து எதையும் எடுத்துச் செல்வதற்கு அல்ல. எடுத்துச் சென்றால் அபராதம் விதிக்கப்பட்டு தண்டனையும் வழங்கப்படும்.

தோட்டத்திலிருந்து அனுமதியின்றி பழங்களை எடுத்துச் செல்பவரிடம் அதே போல இரு மடங்கு தொகையை அபராதமாக பெற்றுக் கொண்டு தண்டனைக்காக அடிக்கவும்



வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) நூல் : அஹ்மது : 6641, 6396, 6597, நஸயீ : 4872 அபூதாவூது : 1455, 3816, இப்னுமாஜா : 2586*

## தோட்டக்காரர் விரட்டியடிக்கக் கூடாது :

வயிற்றுக்கு வழியில்லாமல் வறிய நிலையில் இருப்போர் நம் தோட்டத்தில் நுழைந்து எதையேனும் பறித்து தின்பதைக் கண்டால் அவர்களிடம் கடுமையாக நடந்து கொள்ளக் கூடாது. இயன்றவரை மென்மையைக் கடைபிடிக்க வேண்டும்.

ஓராண்டு எங்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது நான் என் சிறிய தந்தையுடன் மதீனா வந்தேன். (வரும் வழியில்) எல்லையோரத்தில் இருந்த தோட்டம் ஒன்றிற்குள் நுழைந்து கதிர்களைப் பறித்துச் சாப்பிட்டேன். கொஞ்சத்தை என் ஆடையிலும் எடுத்துக் கொண்டேன்.

அங்கு வந்த தோட்டக்காரர் என்னை அடித்து என் ஆடையையும் பிடுங்கிக் கொண்டார். நான் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அவரைப் பற்றி முறையிட்டேன்.

நபியவர்கள் அவரை அழைத்து வர ஆளனுப்பினார்கள். அவர் வந்ததும் இவ்வாறு உம்மை செய்யத் தூண்டியது எது? எனக் கேட்டார்கள். அதற்கு அவர் அல்லாஹ்வின் தூதரே! இவர் என் தோட்டத்தில் நுழைந்து கதிர்களைப் பறித்து எடுத்துக் கொண்டார் எனக் கூறினார்.

அவரிடம் நபி (ஸல்) அவர்கள் இவர் அறியாமையில் இருந்தார். இவருக்கு நீ சொல்லிக் கொடுக்கவில்லை. பசியுடன் இருந்தார் இவருக்கு நீ உணவளிக்கவும் இல்லை. எனவே இவரது ஆடையை திருப்பிக் கொடுத்து விடும் என்று கூறி விட்டு எனக்கு ஒரு மரக்காலோ (அ) அரை மரக்காலோ உணவு (தானியம்) வழங்கி (உதவுமாறு) கட்டளையிட்டார்கள்.

*அறிவிப்பவர் : அப்பாத் பின் ஷரஹ்பீல் (ரழி) நூல் : நஸாயீ : 5314*

*அபூதாவூது : 2252, இப்னுமாஜா 2289 அஹ்மது 16865*

இந்த நிகழ்ச்சியில் பசிக்காக சாப்பிட்டது போக மேலும் கொஞ்சத்தை அவர் எடுத்துக் கொள்ளவும் செய்திருக்கிறார். அவருக்கு தண்டனை தராமல் உதவி செய்திருக்கிறார்கள்.இதை வைத்துக் கொண்டு சேகரித்துக் கொள்வதை குற்றமில்லை என கருதிவிடக் கூடாது.

ஏனெனில் சேகரித்துக் கொள்ளக் கூடாது என்றும் அவ்வாறு செய்பவருக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்றும் நபி (ஸல்) அவர்கள் மிகத் தெளிவாக கட்டளையிட்டிருப்பதால் அதைத் தான் நாம் பின்பற்ற் வேண்டும்

இந்த நிகழ்ச்சியை அவரது அறியாமை மற்றும் சூழ்நிலையை கவனத்தில் கொண்டு நபியவர்கள் வழங்கிய விதி விலக்காக எடுத்துக் கொள்ள வேண்டும்

### வழி தவறி வந்து விட்ட ஆடு, கோழிகளைச் சாப்பிடுதல்

தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள முடியாத சின்னஞ்சிறு பிராணிகள் வழி தவறி வந்து விட்டால் அதன் உரிமையாளர் யாரென்று தெரியாத போது அவற்றை அப்படியே வீதியில் விட்டு விட்டால் வேறு விலங்குகள் கவ்விச் சென்று விடும். அவற்றை நாம் சாப்பிடுவதில் தவறில்லை.

ஒரு கிராமவாசி நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! வழி தவறி வந்து விட்ட ஆட்டை என்ன செய்வது? எனக் கேட்டார். அது உனக்குரியது (அ) உன் சகோதரனுக்குரியது (அ) ஓநாய்க்குரியது எனக் கூறினார்கள்.

வழி தவறி வந்து விட்ட ஒட்டகத்தைப் பற்றிக் கேட்டார். அதைக் கேட்டதும் நபியவர்களின் முகம் (கோபத்தில்) சிவந்து விட்டது. உனக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? அதனுடன் அதன் குளம்பும் தண்ணீர்ப் பையும் உள்ளது. நீர்



நிலைகளுக்குச் செல்கிறது. மரத்திலிருந்து தின்கிறது. (பிறகென்ன பயம்?) என அவரை நோக்கி நபி (ஸல்) அவர்கள் கேள்வியெழுப்பினார்கள்.

அறிவிப்பவர் : ஜைத் பின் காலித் (ரழி) நூல் : புகாரி : *2427, 91, 2372, 2430, 2436, 2438, 5292, 6112.*

### அற்பமான, பொருளை அனுமதியின்றி சாப்பிடுதல்

பேரீத்தம் பழம் ஒன்று கீழே கிடந்தது. அதைக் கடந்து சென்ற நபி (ஸல்) அவர்கள் இது தர்மப் பொருளாக இருக்கலாம் (எனும் சந்தேகம்) இல்லாவிடில் இதை நான் சாப்பிட்டிருப்பேன் என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரழி) நூல் : புகாரி : 2055, 2431, 2433, முஸ்லிம் : 1781, 1782, 1783, அபூதாவது : 1408, 1409, அஹ்மது : 11893, 12447, 12535, 13044, 13210, 13596.*

நபி (ஸல்) அவர்களுக்கு தர்மப் பொருள் ஹராமாகும் அந்த சந்தேகத்தினால் அதை தவிர்த்துக் கொண்டார்கள். நமக்கு அந்த சிக்கல் இல்லை. எனவே பே.பழத்தைப் போல அற்பமான பொருட்கள் கிடைத்தால் உரியவரின் அனுமதியில்லையே என அச்சப்படத் தேவையில்லை. (மேலும் அற்பமானது எது என்பதை நம் மனசாட்சியின் படி முடிவெடுத்துக் கொள்ள வேண்டும்)

### வேட்டையாடிச் சாப்பிடுதல்

இஸ்லாம் கூறும் முறைப்படி அறுக்கப்படாத பிராணிகளை சாப்பிடக் கூடாது என்பதை நாம் அறிவோம். ஆனால் வேட்டையாடப்படும் பிராணிகள் இதிலிருந்து விதிவிலக்குப் பெறுகின்றன. வேட்டையாடப்படுபவை முறைப்படி அறுப்பதற்கு முன் செத்துப் போனாலும் அவற்றை சாப்பிடலாம்.

தமக்கு அனுமதிக்கப்பட்டவை எவை? என்று அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்.தூய்மையானவைகளும் வேட்டையாடும் பிராணிகளில் எவற்றுக்கு நீங்கள்

பயிற்சியளித்து அல்லாஹ் உங்களுக்கு கற்றுத் தந்ததைக் கற்றுக் கொடுக்கிறீர்களோ அவை (வேட்டையாடியவை)களும் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.எனக் கூறுவீராக!அவை உங்களுக்கு பிடித்துக் கொண்டு வந்ததை சாப்பிடுங்கள்.(அதை அனுப்பும் போது)அதன் மீது அல்லாஹ்வின் பெயரைக் கூறுங்கள்! அல்லாஹ்வை அஞ்சுங்கள்! அல்லாஹ் விரைந்து கணெக்கெடுப்பவன்.

*அல்குர்ஆன் 5:4*

நாங்கள் பயிற்றுவிக்கப்பட்ட நாயை (வேட்டைக்கு) அனுப்புகிறோம் என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்டேன் அதற்கவர்கள் (தான் சாப்பிடாமல்) உனக்காக அவை கொண்டு வருவதைச் சாப்பிடு என்றார்கள் அவை கொன்று விட்டாலுமா? என்று கேட்டேன் ஆம் கொன்று விட்டாலும் தான்.என்று விளக்கமளித்தார்கள். நாங்கள் அம்பால் வேட்டையாடுகிறோம் என்று கூறினேன்.அதற்கவர்கள்(அம்பின் முனை) கிழித்துச் சென்றால் சாப்பிடு!அதன் அகலவாக்கில் தாக்கியிருந்தால் சாப்பிடாதே என்றார்கள்.

*அறிவிப்பவர் :அதீ பின் ஹாதிம்(ரழி) நூல்:5477*

### பொது அனுமதி உள்ளதைச் சாப்பிடுதல்

யார் வேண்டுமானாலும் சாப்பிடலாம் எனும் நோக்கில் பொதுவில் வைக்கப்பட்ட உணவை உரிமையாளரின் தனிப்பட்ட அனுமதி பெறாமலே சாப்பிடலாம்.

நாங்கள் பேரீச்சை மரங்கள் உடையவர்களாக இருந்தோம். எங்களில் ஒவ்வொருவரும் தமது பேரீச்சையின் விளைச்சலுக்கு தகுந்தாற் போல ஒரு குலையோ (அ) இரண்டு குலைகளோ கொண்டு வந்து பள்ளிவாசலில் தொங்க விட்டு விடுவோம் அங்கே உணவுக்கு வழியில்லாத திண்ணைத் தோழர்கள் இருப்பார்கள். அவர்களில் எவருக்கும் பசித்தால் அந்த பேரீச்சங் குலையின் பக்கம் வந்து தமது கைத்தடியால்



அடிப்பார். கனிந்ததும் கனியாததுமாக பே.பழங்கள் கீழே விழும். அதை எடுத்துச் சாப்பிட்டுக் கொள்வார்.

*அறிவிப்பவர் : பர்ரா இப்னு ஆஸிப் (ரழி) நூல் : திர்மிதி : 2913, இப்னுமாஜா : 1812*

(பொது மக்களுக்காக) தொங்கவிடப்பட்ட பழங்களைப் பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதிலிருந்து சேகரித்து எடுத்துப் கொள்ளாமல் தேவைக்கு சாப்பிட்டால் அவர் மீது எந்தக் குற்றமும் இல்லை என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) நூல் : திர்மிதி : 1210, நஸயீ :4872, அபூதாவூது : 1455, 3816*

### நெருங்கிய உறவினர் வீடுகளில் சாப்பிடுதல் :

உங்கள் வீடுகளிலோ உங்கள் தந்தையர்வீடுகளிலோ, உங்கள் அன்னையர்வீடுகளிலோ, உங்கள் சகோதரர்கள் வீடுகளிலோ, உங்கள் சகோதரிகளின் வீடுகளிலோ, உங்கள் தந்தையின் சகோதரர்கள் வீடுகளிலோ, உங்கள் தந்தையின் சகோதரிகள் வீடுகளிலோ, உங்கள் தாயின் சகோதரர்கள் வீடுகளிலோ அல்லது எதன் சாவிகளை நீங்கள் உடமையாக வைத்துள்ளீர்களோ அங்கேயோ அல்லது உங்கள் நண்பரிடமோ நீங்கள் சாப்பிடுவது உங்கள் மீது குற்றமில்லை. நோயாளியின் மீதும் குற்றமில்லை. ஊனமுற்றோர் மீதும் குற்றமில்லை. குருடர் மீதும் குற்றமில்லை. நீங்கள் அனைவரும் சேர்ந்தோ, தனியாகவோ சாப்பிடுவது உங்கள் மீது குற்றமில்லை. *அல்குர் ஆன் : 24: 61*

### தவறான வழியில் பொருளீட்டியவரின் உணவைச் சாப்பிடுதல் :

மார்க்கத்தில் தடுக்கப்பட்ட வழிகளில் பொருளீட்டிய ஒருவர் தரும் உணவைச் சாப்பிடுவதில் தவறில்லை.ஏனெனில் அவர் செய்த குற்றத்துக்கு அவர் மட்டுமே பொறுப்பாளியாவார்.

ஒருவர் மற்றவரின் சுமையை சுமக்க மாட்டார். கனத்த சுமையுடன் வரும் ஒருவர் அதைச் சுமக்குமாறு யாரையேனும்

அழைத்தால் (அழைக்கப்படுபவன்) உறவினராக இருந்தாலும் அதிலிருந்து எதுவும் அவன் மீது சுமத்தப்படாது.

*அல்குர்ஆன் : 35:18, 39:17, 17:15, 6:164*

ஒரு பொருளை தருபவரும், பெறுபவரும் எந்த அடிப்படையில் பரஸ்பரம் பரிமாறிக் கொள்கிறார்கள் என்பதைத் தான் கவனிக்க வேண்டும். அந்தப் பொருள் கடந்து வந்த பாதையை ஆய்வு செய்யத் தேவையில்லை. அந்த ஆய்வுக்குள் நுழைந்தால் எந்த ஒன்றையும் சாப்பிடவோ (அ) பயன்படுத்தவோ இயலாத நிலை தான் மிஞ்சும்.

எனவே இதில் நம்முடைய சுய விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி வைத்து விட்டு அல்லாஹ்வும்,ரசூலும் என்ன சொல்கிறார்கள் என்பதைத் தான் பார்க்க வேண்டும்..

நபி ஸல் அவர்கள் காலத்தில் வாழ்ந்த யூதர்கள் அதற்கு முன்னும் பின்னும் வட்டி, மோசடி போன்ற தவறான வழிகளில் பொருளீட்டும் பொருளாதாரக் கொள்கையைக் கடை பிடித்து வந்தனர் குர் ஆனும் இந்தக் கருத்தைப் பறைசாற்றுகிறது.

யூதர்கள் செய்த அநீதியின் காரணமாகவும், அல்லாஹ்வின் பாதையை விட்டு அதிகமானோரை அவர்கள் தடுத்ததன் காரணமாகவும், வட்டியை விட்டும் அவர்கள் தடுக்கப்பட்டிருந்தும் வட்டி வாங்கியதாலும் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த தூய்மையானவற்றை அவர்களுக்கு தடை செய்தோம் அவர்களில் (நம்மை) மறுப்போருக்குத் துன்புறுத்தும் வேதனையைத் தயாரித்துள்ளோம்.

*அல்குர்ஆன் : 4:160, 161*

யூதர்களை அல்லாஹ் சபிப்பானாக! கொழுப்பு அவர்களுக்கு தடுக்கப்பட்ட போது அதை விற்று அதன் கிரயத்தைச் சாப்பிட்டார்கள் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புகாரி : 2224, முஸ்லிம் : *2962, 2963* அஹ்மது : *8390*



யூதர்களின் கேடு கெட்டப் பொருளாதாரக் கொள்கையை விளக்கும் ஆதாரங்கள் இவை, இப்படிப்பட்டவர்களின் உணவைத் தின்பதில் தவறில்லை என்கிறான் இறைவன்.

வேதம் கொடுக்கப்பட்டோரின் உணவு உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. உங்கள் உணவு அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

*அல்குர்ஆன் : 5:5*

இந்தக் கட்டளைக்கு நபி (ஸல்) அவர்கள் செயல் வடிவமும் கொடுத்திருக்கிறார்கள். யூதப் பெண்ணொருத்தி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் விஷம் தடவிய ஆட்டை கொடுத்தாள். (விஷம் இருப்பது தெரியாமல்) அதிலிருந்து கொஞ்சத்தை சாப்பிட்டார்கள். (பிறகு) அவள் பிடித்து வரப்பட்டாள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இதைப் பற்றி அவளிடம் கேட்டார்கள். உங்களை கொல்வதற்காகத் தான் (இவ்வாறு) செய்தேன் என்றாள். என்னைக் கொல்வதற்கு அல்லாஹ் உன்னை நியமிக்கவில்லை என நபி (ஸல்) அவர்கள் அவளிடம் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரழி)நூல் : புகாரி : *2617*, முஸ்லிம் : *4060*, அபூதாவூது : *3909* அஹ்மது : *12808*

வட்டிக்காரர்களாகிய யூதர்களின் உணவை நபி(ஸல்) அவர்கள் சாப்பிட்டிருக்கிறார்கள். என்பதை வைத்துக் கொண்டு நபி (ஸல்) அவர்கள் ஹராமானதை சாப்பிட்டு விட்டார்கள் என்று சொல்ல முடியுமா? முடியாது என்றால் அது தரும் பாடம் என்ன?

ஒருவர் நமக்குத் தரும் பொருள் அவருக்கு எந்த வழியில் கிடைத்திருந்தாலும் அது குறித்து நாம் அச்சப்படவோ, ஆய்வு செய்யவோ தேவையில்லை என்பதைத் தானே கற்றுத் தருகிறது.

மார்க்கத்தில் அன்பளிப்பு, தர்மம், விருந்தோம்பல் போன்றவை அனுமதிக்கப் பட்டிருக்கும் போது அதை யார் தந்தாலும் பெற்றுக் கொள்வதில் தவறில்லை.

இன்னாரிடத்தில் (அ) இன்ன வழியில் பொருளீட்டுபவரிடத்தில் எதையும் வாங்கக் கூடாது என நேரடியாகவோ, (அ) மறைமுகமாகவோ தடை இருப்பின் அதைப் புறக்கணிக்கத்தான் வேண்டும்.

அவ்வாறு எந்த தடையும் இல்லாத பட்சத்தில் வட்டிக் காரன் சாப்பாட்டை சாப்பிடாதே! வழி தவறியவன் உணவை உண்ணாதே! என்று தடுத்தால் அல்லாஹ்வின் மார்க்கத்தில் நமது மன இச்சையை நுழைத்த குற்றவாளியாகி விடுவோம்.

நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்த தூயவற்றை தடுக்கப்பட்டவையாக ஆக்காதீர்கள் வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறுவோரை அல்லாஹ் நேசிக்க மாட்டான். *அல்குர்ஆன் : 5:87 6:138, 139, 6:150, 7:32, 10:59, 16:116*

**வேதக்காரர்களின் உணவைச் சாப்பிடுதல்**

வேதம் கொடுக்கப்பட்டோரின் உணவு உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. *அல்குர்ஆன் : 5:5*

குர்ஆனில் வேதக்காரர்கள் என குறிப்பிடப்படும் யூதர்களும், கிறித்தவர்களும், அல்லாஹ்வின் பெயர்கூறி முறைப்படி அறுத்து உண்ண வேண்டியவற்றை அவர்கள் அறுத்துத் தந்தால் அதை நாம் சாப்பிடலாம் என இவ்வசனம் கூறுகிறது.

இதில் கூறப்பட்டுள்ள வேதக்காரர்கள் எனும் சொல் இன்று உலகில் உள்ள அனைத்து யூத, கிறிஸ்தவர்களையும் குறிக்கும் பொதுச் சொல் என விளங்கிக் கொள்ளக் கூடாது. மாறாக இஸ்ரவேல் சமூகத்தைச் சார்ந்த வேதக்காரர்களை மட்டுமே குறிக்கும்

ஏனெனில் வேதக்காரர்கள் என்றழைக்கப்படும் யூத கிறிஸ்தவர்களுக்கு அனுப்பப்பட்ட இறைத்தூதர்கள்



அனைவருமே இஸ்ரவேல் எனும் சமூகத்திற்கு மட்டுமே அனுப்பப்பட்டார்கள். தவ்ராத், இன்ஜீல் ஆகிய வேதங்களும் இஸ்ரவேலர்களுக்காகவே வழங்கப்பட்டன.

மூஸாவுக்கு நாம் வேதத்தை வழங்கினோம். என்னைத் தவிர (யாரையும்) பொறுப்பாளர்களாக்கிக் கொள்ளக் கூடாது என்று (எடுத்துரைத்து) இஸ்ராயீலின் மக்களுக்கு நேர்வழி காட்டக் கூடியதாகவும் அதை ஆக்கினோம்.

*அல்குர்ஆன் : 17:2*

இஸ்ராயீலின் மக்களுக்கு அவரை (ஈஸாவை) முன்னுதாரணமாக்கினோம். *அல்குர்ஆன் : 43:59*

இஸ்ராயீலின் மக்களே! நான் உங்களுக்காக அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதர். எனக்கு முன் சென்ற தவ்ராத்தை உண்மைபடுத்துபவன். எனக்குப் பின் வரவுள்ள அஹ்மது எனும் பெயருடைய தூதரைப் பற்றி நற்செய்தி கூறுபவன் என்று மர்யமின் மகன் ஈஸா கூறியதை நினைவூட்டுவீராக!

*அல்குர்ஆன் : 61:6*

இந்த வசனங்கள் அனைத்தும் வேதக்காரர்கள் என்றால் இஸ்ரவேல் சமூகத்தை சார்ந்தவர்கள் தான் என்பதை சுட்டி காட்டுகின்றன.மற்ற சமூகங்களைச் சேர்ந்தவர்கள் யூத, கிறிஸ்தவ மதங்களை ஏற்றுக் கொண்டாலும் இஸ்லாத்தின் பார்வையில் அவர்கள் வேதக்காரர்கள் ஆக முடியாது.

மேலும் இஸ்ரவேலன் என்பது கொள்கை அடிப்படையில் கூறப்படுவது அல்ல. பிறப்பின் அடிப்படையில் உள்ளதாகும். ய.்.கூப் (அலை) அவர்களுக்கு இஸ்ராயீல் என்றொரு பெயர் உண்டு. எனவே அவர்களின் வாரிசுகள் பனூ இஸ்ராயீல் (இஸ்ராயீலின் சந்ததிகள்) என்று அழைக்கப்படுவர். எனவே, மற்றவர்கள் யூத மற்றும் கிறிஸ்துவத்தை ஏற்றுக் கொண்டாலும் இஸ்ரவேலராக ஆக முடியாது

யார் இஸ்ரவேலராக இல்லையோ அவர் வேதக்காரராக ஆகவும் முடியாது.

எனவே யார் இஸ்ரவேலராகவும் இருந்து வேதக்காரராகவும் இருக்கிறாரோ அவர் அறுத்துத் தருவதைச் சாப்பிடலாம். இஸ்ரவேல் அல்லாத யூத, கிறிஸ்தவர்கள் அறுத்துத் தரும் பிராணிகளை சாப்பிடக் கூடாது.

அவர்கள் அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்கின்றனர் எனவே இஸ்ரவேலர்கள் தருவதையும் சாப்பிடக் கூடாது என்று சிலர்கூறி வருகின்றனர். இது தவறான வாதமாகும்.

ஏனெனில் அவர்கள் நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் இணை வைத்துக் கொண்டுதான் இருந்தார்கள். அவர்களிடம் இணை கற்பித்தல் நடைமுறையில் இருக்கும் போது தான் இந்த சட்டம் அருளப்பட்டுள்ளது. எனவே அவர்களிடமுள்ள ஷிர்க்கைக் காரணம் காட்டி இறைவன் வழங்கியுள்ள சலுகையை மறுக்கத் தேவையில்லை.

வேதக்காரர்களைத் தவிர்த்து மற்றவர்களிடம் ஷிர்க் இருந்தால் அவர்கள் அறுத்ததை ஏற்கக் கூடாது. ஏனென்றால் இவர்கள் விஷயத்தில் வழங்கப்பட்ட அனுமதி வேறு எவருக்கும் வழங்கப்படவில்லை

## இஹ்ராமிலிருப்பவர் வேட்டையாடப்பட்டதை சாப்பிடுதல்

இஹ்ராமுடன் இருக்கும் போது நீங்கள் தரையில் வேட்டையாடுதல் தடுக்கப்பட்டுள்ளது. *அல்குர்ஆன்: 5:96*

இவ்வசனத்தின் மூலம் இஹ்ராமிலிருப்பவர் வேட்டையாடி உண்பதை இறைவன் தடை செய்கிறான். ஆனால் பிறரால் வேட்டையாடித் தரப்படும் உணவு தடுக்கப்படவில்லை. அதை நபி (ஸல்) அவர்கள் நமக்கு தெளிவுபடுத்துகிறார்கள்.

நான் நபி (ஸல்) அவர்களுடன் மக்காவிற்கும், மதீனாவிற்குமிடையில் (அல்காஹா என்னுமிடத்தில்) இருந்தேன். அப்போது மக்கள் (உம்ராவுக்காக) இஹ்ராம் கட்டியிருந்தார்கள். நான் இஹ்ராம் கட்டாமல் குதிரை மீது



இருந்தேன். நான் அதிகமாக மலையேறுபவனாக இருந்தேன். இந்நிலையில் மக்கள் ஆவலுடன் எதையோ பார்ப்பதைக் கண்டேன்.அங்கொரு காட்டுக் கழுதை தென்பட்டது. இது என்ன? என்று மக்களிடம் கேட்டேன். அவர்கள் எங்களுக்கு தெரியாது என்றனர். நான் இது காட்டுக் கழுதை என்றேன். நான் மறந்துவிட்ட என் சாட்டையை என்னிடம் எடுத்துத் தாருங்கள் எனக் கேட்டேன். அதற்கவர்கள் இந்த விஷயத்தில் உமக்கு நாங்கள் உதவமாட்டோம் என்று கூறிவிட்டனர். எனவே நானே இறங்கி அதை எடுத்தேன். பிறகு காட்டுக் கழுதையை விரட்டிச் சென்று தாக்கினேன். அதன் கால் நரம்புகளை வெட்டி வீழ்த்தினேன். பிறகு மக்களிடம் சென்று (இப்போது) எழுந்து கழுதையை எடுத்துக் கொள்ளுங்கள் என்றேன். அவர்கள் அதைத் தொட மறுத்தனர். நானே அதை அவர்களிடம் சுமந்து சென்றேன். சிலர் அதை சாப்பிட்டனர். சிலர் மறுத்து விட்டனர். உடனே நான் உங்களுக்காக நபி(ஸல்) அவர்களிடம் (இதைப் பற்றி) கேட்டுத் தெரிந்து வருகிறேன் என்று கூறி விட்டு நபியிடம் வந்து செய்தியைத் தெரிவித்தேன். அவர்கள் என்னிடம் அதில் ஏதும் மிச்சம் உள்ளதா? எனக் கேட்டார்கள். நான் ஆம் என்றேன் அப்படியானால் உண்ணுங்கள். அது அல்லாஹ் உங்களுக்கு உண்ணக் கொடுத்த உணவாகும் என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

*அறிவிப்பவர்: அபூகதாதா (ரழி) நூல்:புகாரி 5492*

## சந்தேகங்கள்

### ரொட்டி சாப்பிடுவது சுன்னத்தா?

நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் அனைத்துமே சுன்னத் என்று பொதுவாக சொல்லப்பட்டாலும் சுன்னத் எனும் வரையறைக்குள் அடங்காத சில செயல்களும் நபி(ஸல்) அவர்களின் வாழ்வில் உண்டு.

அவர்களின் வாழ்வில் நடந்த நிகழ்வுகள் வஹீயின்

அடிப்படையில் அமைந்தவை. வஹீ இல்லாமல் சாதாரண மனிதர் எனும் அடிப்படையில் அமைந்தவை என இருவிதமாக இருக்கின்றன.

வஹீயின் அடிப்படையில் அமைந்தவை அனைத்தும் சுன்னத் எனும் அந்தஸ்தை பெறும். அவர்களின் உணவு. உடை, இருப்பிடம், வாகனம், மருத்துவம், விவசாயம், வியாபாரம், குடும்ப வாழ்வு போன்ற நடைமுறை வாழ்வின் செயல்பாடுகள் அனைத்தும் முழுக்க முழுக்க வஹீயின் அடிப்படையில் அமைந்தவை என சொல்லி விட முடியாது. வஹீயும் இருக்கும் வஹீ அல்லாததுமிருக்கும்.

இவற்றில் பெரும்பாலானவை அவர்கள் காலத்து வசதி, பழக்க வழக்கம், கண்டுபிடிப்பு ஆகியவைகளுக்கு ஏற்ப செய்து கொண்ட காரியங்கள் தான்.

தூதராக இருக்கும் போது செய்ததைப் போல் நபியாவதற்கு முன்னரும் செய்திருப்பார்கள். அவர்கள் காலத்து எதிரிகள் கூட நபி ஸல் அவர்கள் செய்ததைப் போன்றே செய்திருப்பார்கள்.

இதுபோன்ற வஹீ இல்லாத காரியங்களில் நபி (ஸல்) அவர்களை முன்மாதிரியாகக் கொள்ளத் தேவையில்லை. இதை நபியவர்களே பல நேரங்களில் நமக்கு தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

ஒரு தடவை பெரும் இரைச்சல் சப்தம் ஒன்று கேட்டது. நபி (ஸல்) அவர்கள் இது என்ன சப்தம்? எனக் கேட்டார்கள். (நல்ல விளைச்சலுக்காக) ஆண் பெண் பேரீச்சை மரங்களை ஒட்டுச் சேர்க்கை செய்து கொண்டிருக்கிறார்கள் என பதில் வந்தது. நபி (ஸல்) அவர்கள் இதைச் செய்யாமல் இருந்தால் நன்றாயிருக்குமே! என்றார்கள்.

உடனே ஸஹாபாக்கள் அதை நிறுத்திக் கொண்டார்கள். அந்த ஆண்டு மகசூல் மிகவும் குறைந்து விட்டது. அதைப் பார்த்த நபி (ஸல்) அவர்கள் உங்கள் பேரீச்ச மரங்களுக்கு



என்ன ஆயிற்று? எனக் கேட்டார்கள். நீங்கள் தானே இன்னின்னவாறு (செய்ய வேண்டாம்) என்றீர்கள். (அதனால் தான் இந்த நிலை) என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் உங்கள் உலக காரியங்களில் நீங்கள் தான் அதிகம் அறிந்தவர்கள் என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அனஸ்பின் மாலிக் (ரழி) நூல் : முஸ்லிம் : 4358, இப்னுமாஜா : 2462, அஹ்மது : 23773*

நான் எனக்கு தோன்றியதைக் கூறினேன். அதற்காக என்னை பிடித்து விடாதீர்கள். எனினும் அல்லாஹ்வின் சார்பாக நான் ஒரு கருத்தை சொன்னால் அதைக் கடைபிடியுங்கள். ஏனெனில் அல்லாஹ்வின் பெயரால் நான் பொய் சொல்லமாட்டேன் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரழி) நூல் : முஸ்லிம் 4356*

ஒரு தடவை நபி (ஸல்) அவர்களுக்கு முன் உடும்பு கறி வைக்கப்படுகிறது. அதை வேண்டாம் என தவிர்க்கிறார்கள். அருகிலிருந்த காலித் பின் வலீத் (ரழி) அவர்கள் இது ஹராமா? எனக் கேட்கிறார்கள். இல்லை இதை சாப்பிட்டு பழக்கமில்லை என நபியவர்கள் பதில் கூறினார்கள்உடனே நபியின் பங்கையும் சேர்த்து வைத்து காலித் (ரழி) சாப்பிட்டார்கள்.

*அறிவிப்பவர்: காலித் பின் வலீத் (ரழி) நூல் : புகாரி: 5391, 5400, 5537, முஸ்லீம் : 3603, இப்னுமாஜா : 3232, நஸாயீ : 4242, 4243, அபூதாவூது : 3300, அஹ்மது : 2552, 2852, 3050, 16209, 16212, 25586.*

உணவு விஷயத்தில் வஹீயின் அடிப்படையில் பல சட்டங்கள் இருந்தாலும் சில விஷயங்களில் நபி (ஸல்) அவர்கள் வஹீ இல்லாமல் தமது சொந்த விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதற்கும் அதை நாம் கடைபிடிக்கத் தேவையில்லை என்பதற்கும் இந்த நிகழ்ச்சி ஓர் சான்றாகும்.

ஒரு தடவை (வெங்காய) வாடையுள்ள உணவுப்பண்டம் ஒன்று நபியவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அதை தமது தோழர் ஒருவருக்கு, கொடுக்கச் சொன்னார்கள். அவரும் அதைச் சாப்பிட மறுத்துவிட்டார். அதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் "நீங்கள் சாப்பிடுங்கள் ஏனெனில் நீங்கள் உரையாடாத (வான) வர்களுடன் நான் உரையாட வேண்டியுள்ளது" என்று கூறினார்கள். மற்றொரு அறிவிப்பில் அந்தச் செடியின் வாடையை நான் வெறுக்கிறேன்" என்றார்கள்.

*அறிவிப்பாளர்: அபூஸயீத் (ரழி) நூல் : 275, 877 அபூதாவூது : 3326, 3327*

அப்படியானால் வழிபாடுகள் அல்லாத மனித வாழ்வின் நடைமுறைகளில் நபி (ஸல்) அவர்கள் எந்தவொரு முன்மாதிரியையும் காட்டித் தரவில்லையா? எனும் கேள்வி எழும். நடைமுறை வாழ்விலும் ஏராளமான சுன்னத்துகள் இருக்கின்றன.

அவற்றை நபி(ஸல்) அவர்கள் தமது வார்த்தைகளின் மூலம் இவைகள் சுன்னத்துகள் தான் என புரிய வைத்து விடுவார்கள்.

ஒரு காரியத்தை செய்து விட்டு நீங்களும், செய்யுங்கள் என்று நம்மைப் பார்த்து கட்டளையிட்டு விடுவார்கள். அவ்வாறு கட்டளையிடப்பட்ட காரியம் நபியிடமிருந்து பின்பற்றப் படவேண்டிய சுன்னத்துகள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக தலையில் முடி வளர்கின்றது. முகத்தில் தாடியும் வளர்கிறது. நபி (ஸல்) அவர்கள் தலையில் முடி வைத்திருந்தார்கள் அதை பல விதங்களில் அழகுப்படுத்திக் கொண்டும் இருந்தார்கள். ஆனால், அதைப் பற்றி எந்த கட்டளையும் பிறப்பிக்காத காரணத்தால் அதில் நாம் பின்பற்றி நடக்கவேண்டிய சுன்னத்துகள் எதுவுமில்லை எனலாம்.



அதே நேரத்தில் தாடி வளர்த்த நபியவர்கள் தாம் வைத்த தோடு நிறுத்திக் கொள்ளாமல் நீங்களும் வையுங்கள் என நமக்கு கட்டளையிடுகிறார்கள்.

இணைகற்பிப்பவர்களுக்கு மாறு செய்யுங்கள் தாடியை வளருங்கள் மீசையைத் கத்தரியுங்கள்

*அறிவிப்பவர் : இப்னு உமர் (ரழி) நூல் : புகாரி 5892, முஸ்லீம் : 382, 380, 381. திர்மிதி : 2687, 268, நஸயீ : 15, 4959, 4960, 5131, அஹ்மது : 4889, 6167*

இந்தக் கட்டளையின் மூலம் தாடி வைப்பது சுன்னத் என்பதை விளங்கலாம்.

நபியவர்களின் பயணம் முழுவதும் ஒட்டகம், கழுதை மற்றும் குதிரையில் தான். ஆனால் அது குறித்து எந்த கட்டளையும் பிறப்பிக்காத காரணத்தால் ஒட்டகப் பயணம் சுன்னத் ஆகாது!

அதேபோல தம் வாழ்வின் பெரும்பாலான நாட்களில் கோதுமை மாவு, கோதுமை ரொட்டி, இறைச்சி, பே.பழம் ஆகியவற்றையே பிரதான உணவாக உட்கொண்டுள்ளார்கள் ஆனால் அதுகுறித்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) நமக்கு எந்தவிதத்திலும் வலியுறுத்தவில்லை. எனவே, ரொட்டி சாப்பிடுவது சுன்னத் ஆகாது.

**சாப்பிடும் போது பேசலாமா?**

சாப்பிடும் போது எதுவும் பேசக்கூடாது என்று சிலர் நினைக்கின்றனர்

மார்க்கத்தில் அவ்வாறு எந்த தடையும் விதிக்கப்படவில்லை இதற்கு மாற்றமாக நபி (ஸல்) அவர்கள் சாப்பிடும் போது பேசியிருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கின்றன.

ஒருநாள் நபி (ஸல்) அவர்களின் முன் ரொட்டி வைக்கப்பட்டது. குழம்பு ஏதும் இருக்கிறதா? எனக் கேட்டார்கள்.

வினிகர்- சமையல்காடியைத் தவிர வேறொன்றுமில்லை என பதில் வந்தது. அதை கொண்டு வரச் செய்து (தொட்டு சாப்பிட்டார்கள்) இந்த வினிகர் குழம்பு சுவையாக இருக்கிறதே, இந்த வினிகர்குழம்பு சுவையாக இருக்கிறதே என்று சொல்லிக் கொண்டே சாப்பிட்டார்கள்.

*அறிவிப்பவர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி) நூல் : முஸ்லீம் : 3824, 3825, 3826 திர்மிதி : 1763, 1765, 13708, 13742, 14279, 14397, 14653, 14658, 14755*

ஸலாமுக்கு பதில் சொல்லுதல், விருந்தினர்களை வரவேற்றல், வீட்டுக்கு வந்தவர்களை சாப்பிட அழைத்தல், உணவுப் பண்டங்களை கேட்டு வாங்கிச் சாப்பிடுதல் போன்ற பயனுள்ள பேச்சுக்களை பேசுவதில் தவறேதுமில்லை.

வீண் பேச்சுக் கூடாது என்று சொல்லலாம் அது சாப்பாட்டுக்காக அல்ல. எப்போதுமே கூடாது என்ற அடிப்படையில்.

**பாங்கு சொல்லும் போது சாப்பிடலாமா?**

தமிழக முஸ்லீம்களில் சிலர் பாங்கு சொல்லும் போது சாப்பிடக் கூடாது எனக் கூறி வருகின்றனர் குர்ஆன் ஹதீஸில் இதற்கு எந்தச் சான்றும் இல்லை. ஆனால் பாங்கு சப்தத்தை கேட்பவர் மீது அதற்கு பதில் சொல்ல வேண்டிய கடமையிருக்கிறது.

பாங்கு (சப்தத்தை) செவியுற்றால் முஅத்தின் சொல்வதைப் போல நீங்களும் சொல்லுங்கள். என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: அபூஸயீதுல் குத்ரி (ரழி)நூல் : புகாரி : 611, முஸ்லீம் : 576, திர்மிதி : 192, நஸயீ : 667, அபூதாவூது : 438, இப்னுமாஜா : 712, அஹ்மது : 10597, 11078, 11318.*

சாப்பிடும் போது பாங்குக்கு பதில் சொல்ல சிரமம் ஏற்படும் என்பதற்காக ஒருவர் தாம் சாப்பிடுவதை நிறுத்திக் கொண்டால் தவறில்லை.



சாப்பிட்டுக் கொண்டே இடையிடையே பதில் சொல்லிக் கொள்கிறேன் என்று ஒருவர் கூறினால் அதிலும் தவறில்லை.

அதீத பசியில் இருக்கும் ஒருவர் பாங்கை சட்டை செய்யாமல் தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே இருந்தால் அதுவும் குற்றமில்லை.

ஏனெனில் பசியோடு இருப்பவருக்கு தொழுகையையே பிற்படுத்திக் கொள்ள மார்க்கம் அனுமதிக்கிறது.

உணவு வைக்கப்படும் போது இகாமத் சொல்லப்பட்டு விட்டால் முதலில் உண்ணுங்கள். (பிறகு தொழச் செல்லுங்கள்) என்று நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : ஆயிஷா(ரழி) நூல் : புகாரி : 671, 5465, முஸ்லீம் : 867, இப்னுமாஜா : 925 அஹ்மது : 2299, 24442, 23112*

எனவே இந்த ஹதீஸின் அடிப்படையில் பார்க்கும் போது பாங்கிற்காக சாப்பிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பது தெளிவாகிறது.

**மூன்று விரல்களால் மட்டுமே சாப்பிட வேண்டுமா?**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மூன்று விரல்களால் சாப்பிடுவார்கள். (சாப்பிட்டு) முடித்ததும் அதை சூப்புவார்கள்.

*அறிவிப்பவர் : கஅப் பின் மாலிக் (ரழி) நூல் : முஸ்லிம் : 3791, 3795, 3789 திர்மிதி : 1723 அபூதாவூத் : 3330 அஹ்மது : 12350, 13575, 15207, 25914, 25916.*

இந்த ஹதீஸின் அடிப்படையில் மூன்று விரல்களால் சாப்பிடுவது சுன்னத் என சிலர்கருதுகின்றனர்.

இந்த செயல் வஹியின் அடிப்படையில் அமைந்தது அல்ல. சிறு வயது முதலே அவர்கள் பழகிய பழக்கத்தின் அடிப்படையில் அமைந்ததாகும்.

எனவே, மனிதர் என்ற அடிப்படையில் அமைந்த இந்த செயலை மார்க்க காரியங்களில் ஒன்றாக கருதத் தேவையில்லை (சுன்னத்தைப் பற்றிய மேலும் அறிய ரொட்டி சாப்பிடுவது சுன்னத்தா? எனும் தலைப்பை காண்க)

**வயிறு முட்ட சாப்பிடலாமா?**

வயிறு நிரம்ப சாப்பிடுவதை சிலர் குறை கூறி வருகின்றனர் வயிற்றை நான்கு பங்குகளாக்கி ஒரு பங்கில் உணவும் ஒரு பங்கில் நீரும், ஒரு பங்கில் காற்றையும் நிரப்பிக் கொண்டு ஒரு பங்கை காலியாக விட்டு விட வேண்டுமென்றும் இதுவே நபிவழி எனவும் கூறுகின்றனர்

இது நடைமுறை சாத்தியமற்ற தத்துவமாகும். உடலின் உட்புறத்திலிருக்கும் வயிற்றை எவ்வாறு பங்கு போடுவது? ஒரு பங்கு தான் சாப்பிட்டிருக்கிறோம் ஒரு பங்கு தான் நீரருந்தியிருக்கிறோம் என உறுதி செய்வது எவ்வாறு? உணவையும், நீரையும் உள்ளே அனுப்பி வயிற்றை நிறைப்பது போல காற்றைக் கொண்டு அதன் பங்கை நிரப்புவது எப்படி? வாய் வழியாக சுவாசித்து காற்றை உள்ளே அனுப்பினாலும் மறு நிமிடமே வெளியேறி விடுமே அதை தடுத்து நிறுத்தி வயிற்றுக்குள் சிறை வைப்பது எப்படி? என்பன போன்ற ஏராளமான கேள்விகள் எழுகின்றன இவை எதற்கும் அவர்களிடம் பதில் இல்லை. மேலும், நபி (ஸல்) அவர்கள் இது போன்ற ஒரு வழிமுறையை நமக்கு காட்டித் தரவும் இல்லை.

இதற்கு மாற்றமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் பல நேரங்களில் வயிறு நிரம்ப சாப்பிட்டிருக்கிறார்கள். என்பதற்கு ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன.

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் ஓர் ஆட்டை வாங்கி அறுத்து அதன் ஈரலைப் பொறிக்கச் சொன்னார்கள். பிறகு



தம்மை சுற்றியிருந்த நூற்றி முப்பது தோழர்களுக்கும் அதிலிருந்து உண்ணக் கொடுத்தார்கள். அங்கே இல்லாதவர்களுக்கும் எடுத்து வைத்தார்கள். அதில் கலந்து கொண்ட அப்துர் ரஹ்மான் பின் அபூபக்கர்(ரழி) கூறுகிறார்கள்.

நாங்கள் அனைவரும் வயிறு நிரம்ப சாப்பிட்டோம். சாப்பிட்டது போக எஞ்சியதை ஒட்டகத்தில் ஏற்றிச் சென்றோம் என்கிறார்கள்.

*ஹதீஸின் சுருக்கம்:அறிவிப்பவர் : அப்துர் ரஹ்மான் பின் அபூபக்கர்(ரழி) நூல் : புகாரி : 2618, 5382, முஸ்லிம் : 3832, அஹ்மது : 1610 1618*

அபூதல்ஹா (ரழி). உம்மு சுலைம் (ரழி) இருவரும் நபி (ஸல்) அவர்களுக்காக உணவு தயாரித்து வைத்துக் கொண்டு அவர்களை அழைத்து வர ஆளனுப்பினார்கள். நபி (ஸல்) அவர்களோ தான் மட்டும் தனித்து வராமல் தன்னோடு பசியுடன் இருந்த ஸஹாபாக்களையும் அழைத்துக் கொண்டு வந்து விட்டார்கள்.

கணவன், மனைவி இருவரும் வந்தவர்களின் எண்ணிக்கையை பார்த்து கலக்கமடைய நபி (ஸல்) அவர்களோ எவ்விதப் பதட்டமுமின்றி சமைக்கப்பட்ட உணவை கொண்டு வரச் செய்து அதில் பரக்கத்திற்காக துஆ செய்தார்கள். பின்னர் உணவின் மீது தன் கையை வைத்துக் கொண்டு தம் தோழர்கள் பத்துப் பத்துப் பேராக வந்து சாப்பிடுமாறு அழைத்தார்கள்.

ஒவ்வொருவரும் வந்து வயிறு நிரம்ப சாப்பிட்டு விட்டு சென்றார்கள். இவ்வாறு எண்பது பேர் வயிறு நிரம்பிய பின் மேலும் உணவு மிச்சமிருந்தது. அதை நபி (ஸல்) அவர்கள் சாப்பிட்டார்கள் மேலும் அபூதல்ஹாவும், உம்மு சுலைமும் சாப்பிட்டு முடித்தார்கள்.

*ஹதீஸ் சுருக்கம் : அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரழி) நூல் : புகாரி: 5381, 3578, 6688 முஸ்லிம் : 3801, 3802 திர்மிதி : 3563, அஹ்மது : 12034, 12806, 12946,*

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் கடுமையான பசியால் வாடிப் போயிருந்த அபூஹுரைரா (ரழி) அவர்களை அழைத்துக் கொண்டு தமது இல்லம் நோக்கிச் சென்றார்கள். உண்பதற்கு உணவேதும் உள்ளதா? என வீட்டாரிடம் கேட்டார்கள். இன்னார் அன்பளிப்பாய் தந்த ஒரு கோப்பை பாலைத் தவிர ஏதுமில்லை என பதில் வந்தது.

உடனே நபி (ஸல்) அவர்கள் திண்ணைத் தோழர்களை அழைத்து வாரும் என அபூஹுரைராவுக்கு கட்டளையிட்டார்கள். அவரும் அழைத்து வந்தார். அனைவருக்கும் அந்த கோப்பையிலிருந்த பால் வழங்கப்பட்டது. ஒவ்வொருவரும் தாகம் தீரும் வரை குடித்து விட்டு கோப்பையை திரும்பத் தந்தனர்.

இறுதியில் நபி (ஸல்) அவர்கள் அபூஹுரைராவைப் பார்த்து நீங்கள் பருகுங்கள் என்றார்கள் அவரும் பருகினார் மேலும் பருகுங்கள் என்று கூற மீண்டும் பருகினார் இவ்வாறு நபியவர்கள் கூறிக் கொண்டே இருக்க இறுதியில் என் வயிறு உப்பி பாத்திரம் போல் ஆகி விட்டது. சத்தியத்தைக் கொண்டு உங்களை அனுப்பி வைத்த இறைவன் மீது ஆணையாக! இனி பருகுவதற்கு இடமே இல்லை என்று கூறி நபியிடம் கோப்பையைக் கொடுத்தார். நபி (ஸல்) அவர்கள் இறைவனைப் புகழ்ந்து அவன் பெயர்கூறி பாலைக் குடித்து முடித்தார்கள் ஹதீஸின் சுருக்கம்.:அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புகாரி : 6452, 5375 திர்மிதி : 2401.

நபி (ஸல்) அவர்களே வயிறு முட்ட முட்ட சாப்பிட வைத்துள்ளார்கள் எனும் போது நாமும் அவ்வாறு சாப்பிடுவதில் தவறேதுமில்லை என்பதை புரிந்து கொள்ளலாம்.

வயிறு நிரம்ப சாப்பிடக்கூடாது என்ற கருத்துப்பட சில அறிவிப்புகள் வருகின்றன. அவையனைத்தும் பலவீனமான அறிவிப்புகளாக உள்ளன.



நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்த ஒரு மனிதர் (வயிறு நிரம்பி) ஏப்பம் விட்டார். அப்போது நபியவர்கள் எங்களை விட்டும் உனது ஏப்பத்தை தடுத்துக் கொள்.

இவ்வுலகில் வயிறு நிரம்பியிருப்போரில் அதிகமானவர்கள் கியாமத் நாளில் நீண்ட பசியுடையவர்களாக இருப்பார்கள் என்று கூறினார்கள்.

திர்மிதி 2402 மற்றும் இப்னுமாஜா 3341 ஆகிய எண்களில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் அறிவிப்பாளர்களில் முஹம்மது பின் ஹுமைதி அர்ராஸி என்பவர் இடம் பெறுகிறார். இவர் பொய்யர் என ஹதீஸ் கலை அறிஞர்களால் விமர்சிக்கப்பட்டவராவார். இவரது ஹதீஸ்கள் மறுக்கப்படத்தக்கவை என்றும் விமர்சிக்கப்பட்டுள்ளார் மேலும் இதே அறிவிப்பில் யஹ்யா அல்பக்கா என்று ஒருவர் வருகிறார். இவர் பலஹீனமானவர் இவரது கூற்றை ஆதாரமாக ஏற்க முடியது என்றும் அறிஞர்கள் கூறியுள்ளனர் எனவே, பலவீனமான அறிவிப்பாளர்களை கொண்டுள்ள இந்த செய்தியை ஆதாரமாக ஏற்க முடியாது.

இப்னுமாஜாவில் மிக்தாம் இப்னு ம:.தீகரிப் (ரழி) வழியாக அறிவிக்கப்படும் செய்தி ஒன்று 3340வது ஹதீஸாகவும் திர்மிதியில் 2302வது ஹதீஸாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனிதன் நிரம்பும் பாத்திரங்களிலே மிகக் கெட்டது வயிறாகும். மனிதனின் முதுகெலும்பு நிற்பதற்கு சில கவள உணவுகளே போதுமானதாகும். மனிதனின் உள்ளம் அவனை மிகைத்தால் அவன் வயிற்றில் மூன்றில் ஒரு பாகம் உணவும், ஒரு பாகம் நீரும் ஒரு பாகம் காலியாகவும் விட்டுவிட வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக என்று வந்துள்ளது.

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் முஹம்மது பின் ஹர்ப் என்பவர் வருகிறார் அவர் தன் தாயின் வழியாகவும் அந்தத் தாய் அவரது தாயின் வழியாகவும் கேட்டு அறிவிப்பதாக உள்ளது.

இந்த மூவரைப் பற்றி எந்தவிபரமும் இல்லை. யாரென்றே தெரியாதவர்கள் வழியாக அறிவிக்கப்படும் இந்தச் செய்தியையும் ஆதாரபூர்வமானதாக எடுத்துக் கொள்ள முடியாது.

மேலும் வயிறு நிரம்புதல் என்றால் கணக்கு வழக்கின்றி அதிகமதிகம் தின்பது என்று புரிந்து கொள்ளக் கூடாது.

சிலருக்கு வயிறு நிரம்ப அதிக உணவு தேவைப்படும் சிலர்குறைந்த உணவிலே வயிறு நிரம்பி விடுவார்கள். குறைந்த உணவில் வயிறு நிறைவதற்கு உரிய வழிமுறைகளை நபி (ஸல்) அவர்கள் காட்டிக் தந்துள்ளார்கள் அது பரகத் நிறைந்த உணவு எனும் தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது. அதைப் பின்பற்றி குறைந்த உணவில் திருப்தியைப் பெற முயற்சிக்க வேண்டும்.



**உணவில் அஜினமோட்டோ சேர்க்கலாமா?**

அஜினமோட்டோ என்பது மோனோ சோடியம் குளூட்டமேட் எனும் வேதிப் பெயர்கொண்ட ஒருவகை உப்பு தயாரிக்கும் நிறுவனமாகும்.

முதன் முதலில் இந்த வேதிப்பொருளை இந்த நிறுவனம் தான் தயாரித்து விற்பனை செய்தது. நாளடைவில் அந்நிறுவனத்தின் பெயரே அதன் பெயராக நிலைத்துவிட்டது.

மரவள்ளிக் கிழங்கு, கடல்பாசி, கரும்பு போன்றவற்றின் ஊரல்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் இந்த உப்பு உணவில் சுவை கூட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

இதைப் பயன்படுத்துவதால் சுவை கூடுவதென்னவோ உண்மை தான். ஆனால், அந்தச் சுவையின் பின்னிணைப்பாக ஏராளமான நோய்களும் வந்து சேர்ந்து கொள்கின்றன.

78 சதவீதம் குளூட்டாமிக் அமிலமும், 22 சதவீதம் சோடியமும் கொண்டுள்ள அஜினமோட்டோ நமது மூளையில் உள்ள ஹைப்போதாலமஸ் எனும் முக்கிய பகுதியைத் தாக்குவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்

பாக்கெட்களில் அடைத்து விற்கப்படும் பெரும்பாலான நொறுக்குத் தீனிகளில் இது கலக்கப்படுகிறது. அஜினமோட்டோ கலந்திருப்பதை மறைப்பதற்காக **added flavour** என்று மக்களுக்கு புரியாத மொழியில் எழுதி ஏமாற்றுகின்றனர் .

இதை அதிகம் சாப்பிடும் குழந்தைகளுக்கு உடல் வளர்ச்சிக்குரிய ஹார்மோனின் சுரப்பு குறைந்து விடும். அதனால் உடல் வளர்ச்சிக் குறைவு நோய் ஏற்படும் என்கிறது ஓர் ஆய்வு.

விருந்துகளின் போது சமையல் பொருட்களின் பட்டியலில் டேஸ்ட் பவுடர் என்று சமையல்காரர்கள் எழுதிக் கொடுப்பதும் இந்த அஜினமோட்டோ தான்.

இது ஒரு இயற்கை தாவர உணவு. எனவே, இதில் ஆபத்து ஏதுமில்லை என அதன் விற்பனையாளர்கள் விளக்கம் தருகின்றனர்

தாவரங்களிலும், உயிரைப் பறிக்கும் நச்சுத் தன்மையுடையவை உண்டு என்பதை அவர்கள் வசதியாக மறந்து விடுகின்றனர். அஜினமோட்டோவின் கேடுகள் அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதால், பல நாடுகள் அதன் பயன்பாட்டுக்குத் தடை விதித்திருக்கின்றன.

நமக்கு கேடுகளை ஏற்படுத்தும் காரியங்களைச் செய்யக்கூடாது எனும் இறை வசனத்தின் படி அஜினமோட்டோவைச் சாப்பிடக்கூடாது

உங்களை நீங்களே கொன்று விடாதீர்கள்

*அல்குர்அன் 4:29*

உங்கள் கைகளால் நாசத்தை தேடிக் கொள்ளாதீர்கள்

*அல்குர்அன் 2:195*

### ஆல்கஹால் கலந்துள்ள மருந்தைச் சாப்பிடலாமா?

ஆல்கஹால் என்பது நீர்த்த நிலையில் உள்ள ஒருவித எரியும் சுவையுடைய திரவம். பலதரப்பட்ட காரியங்களுக்குப் பயன்படும் விதத்தில் ஆல்கஹாலில் பல வகைகள் உள்ளன.

வாசனைத் திரவியங்களை (ஸ்ப்ரே) பீய்ச்சியடிக்க, வெடிமருந்துகளை கட்ட, ரேடியேட்டரின் உறைநிலையைத் தடுக்க, ஊசி போட்ட இடத்தில் ஒத்தடம் கொடுக்க என பல்வேறு பணிகளுக்கும் வெவ்வேறு விதமான ஆல்கஹால்கள் பயன்பாட்டில் உள்ளன.

அந்த வகையில் உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் சிலவற்றிலும் இது சேர்க்கப்படுகிறது. குறிப்பாக சளி, இருமல், அலர்ஜி போன்ற நோய்களுக்கு வழங்கப்படும் அலோபதி மருந்துகளைக் குறிப்பிடலாம்.



மேலும் ஹோமியோபதி முறையில் தயாராகும் மருந்துகள் அனைத்தும் ஆல்கஹாலில் ஊற வைக்கப்பட்ட பின்னரே பயன்பாட்டுக்கு வருகின்றன.

இதனால் தான் சில மருந்துகளைச் சாப்பிட்ட பின் வாகனம் ஓட்டுதல், கனரக இயந்திரங்களை இயக்குதல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் என அவற்றிலே எழுதப்பட்டிருக்கிறது.

மருந்துப்பொருட்களில் சேர்க்கப்படுவது ஈத்தைல் எனும் ஆல்கஹால் ஆகும். இது போதையூட்டக் கூடியது. மதுபானங்கள் அனைத்திலும் இதை சேர்ப்பதன் மூலம் போதை தருவதாக மாற்றப்படுகிறது.

போதை தருபவை அனைத்தும் தடுக்கப்பட்டவையே என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : ஆயிஷா(ரழி) நூல் : புகாரி : 5585, 5586, முஸ்லீம் : 3727, 3728.*

இந்த நபிமொழியின் அடிப்படையில் போதையூட்டும் ஆல்கஹால் கலந்திருக்கும் எந்தவொன்றையும் சாப்பிடக் கூடாது.

மருந்துப் பொருட்களைப் பொறுத்தவரை ஆல்கஹால் கலக்காத மருந்துகளை எழுதித் தருமாறு மருத்துவர்களிடம் கேட்டு வாங்கிச் சாப்பிட வேண்டும்.

ஒருவேளை ஆல்கஹால் கலந்ததைத் தான் பயன்படுத்தியாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் அவற்றை சாப்பிடுவதில் தவறில்லை.

உக்ல் அல்லது உரைனா குலத்தாரில் சிலர்(மதீனாவிற்கு) வந்தனர். அவர்களுக்கு மதீனாவின் தட்பவெட்பநிலை ஒத்துக் கொள்ளவில்லை. எனவே, (அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க) பால் தரும் ஒட்டகங்களைப் பெற்றுக்கொண்டு

அவற்றின் சிறுநீரையும், பாலையும் பருகி நிவாரணம் பெற்றுக் கொள்ளுமாறு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அவ்வாறே அவர்களும் (ஒட்டகங்களை நோக்கி) நடந்தனர்(அவற்றின் சிறுநீரையும், பாலையும் பருகி) உடல் நலம் தேறினர்

அறிவிப்பவர் : அனஸ் (ரழி)

நூல் : புகாரி:233,1501,3018,4192,4610,5685,5686,5727,6802,6804,6805,689

தடை செய்யப்பட்ட ஒட்டகச் சிறுநீரை அவசியத்தின் நிமித்தம் நோய் தீர்க்கும் மருந்தாக நபி (ஸல்) அவர்கள் பயன்படுத்த அனுமதி வழங்கியுள்ளார்கள்.

பட்டாடை அணிவது ஆண்களுக்குத் தடை செய்யப்பட்டது. ஆயினும் நோய் நிவாரணத்திற்காக இதையும் அனுமதித்துள்ளார்கள்

அப்துர்ரஹ்மான் பின் அவ்∴ப் (ரழி), ஸுபைர் இப்னுல் அவ்வாம் (ரழி) ஆகியோருக்கு ஏற்பட்ட சிரங்கு நோய்க்காக பட்டுச்சட்டை அணிந்து கொள்ள நபி (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கினார்கள்.

அறிவிப்பாளர் : அனஸ் (ரழி)நூல் : முஸ்லிம் : 3829, 3870, 3871, திர்மிதி : 1644, நஸயீ : 5215, 5216 அபூதாவூது : 3534, இப்னுமாஜா : 358

எனவே, இதுபோன்ற தருணங்களில் அவசியத்தின் நிமித்தம் நாமும் பயன்படுத்திக் கொள்ளலாம்

வரம்பு மீறாமலும், வலியச் செல்லாமலும் நிர்பந்திக்கப் படுவோர் மீது எந்தக் குற்றமும் இல்லை. குர்ஆன் : 2:173, 5:3, 6:145, 16:115

நிர்ப்பந்த நிலையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்தைத் தரும் இந்த ஹதீஸ்களுக்கு மாற்றமாக ஆல்கஹால் கலந்துள்ளவற்றை மருந்தாகவும் பயன்படுத்தக்கூடாது என்று சிலர்கூறுகின்றனர்அவர்கள் பின்வரும் ஹதீஸை தமது கூற்றுக்கு ஆதாரமாக வைக்கின்றனர் .



சுவைத் பின் தாரிக் (ரழி) அவர்கள் நபியவர்களிடம் மதுவைப் பற்றிக் கேட்டார்கள். அதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். அதைக் கொண்டு நாங்கள் மருத்துவம் செய்கிறோமே எனக் கேட்டார்கள். அதற்கு அது மருந்து இல்லை நோய் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர் : வாயில் பின் ஹுஜ்ர் (ரழி)நூல் : திர்மிதி : 1969, முஸ்லீம் : 3670, அபூதாவூது : 3375, இப்னுமாஜா : 3491 அஹ்மது : 18036, 184104, 25978.

இந்தச் செய்தியை மேலோட்டமாகப் பார்த்தால் போதைபொருள் கலந்துள்ள மருந்தை பயன்படுத்தக் கூடாது என்பதைப் போன்று தெரிகிறது. இந்த முடிவுக்கு வந்தால் மேற்கூறிய ஹதீஸ்களையும், வசனத்தையும் மறுக்கும் நிலை தான் ஏற்படும்.ஏனெனில் அவையனைத்தும் அதை அனுமதிக்கின்றன.

நபி (ஸல்) அவர்களின் வார்த்தைகளில் முரண்பாடு இருக்காது என்ற அடிப்படையில் சற்று நிதானமாக சிந்தித்தால் இதில் நமக்கு தெளிவு கிடைக்கும்.

அது மருந்தில்லை நோய் என்று கூறும் ஹதீஸ் மதுவை அப்படியே எந்த மாற்றமுமின்றி மருந்தாக பயன்படுத்துவதைப் பற்றிப் பேசுகிறது. அவ்வாறு பயன்படுத்துவது கூடாது எனும் கருத்தை அந்த ஹதீஸிலிருந்து விளங்கலாம்..

அதே மதுபானத்தை ரசாயனக் கலவைகளின் மூலம் மருந்தாக மாற்றிவிட்டால் அதில் மது இருந்தாலும் மருந்து என்ற நிலைக்கு மாற்றப்பட்டு விட்டதால் அதைப் பயன்படுத்தி வலி நிவாரணம் பெறுவதில் தவறில்லை.

மது நோய்களுக்கு நிவாரணம் தராது. அவற்றின் கலவையால் தயாரிக்கப்பட்ட மருந்தில் நிவாரணம் உண்டு. அந்த மருந்தின் மூலம் நிவாரணம் பெறலாம்.

இவ்வாறு விளங்கிக் கொண்டால் இதில் முரண்பாடு இல்லை இரண்டும் இருவேறு கருத்தைத் தருகின்றன எனப் புரிந்து செயல்படலாம்.

**உண்ணக் கூடாததை விற்பனை செய்யலாமா?**

மார்க்கத்தில் உண்பதற்குத் தடை செய்யப்பட்ட எதையும் விற்பனை செய்வது கூடாது.

அல்லாஹ் ஒரு சமுதாயத்திற்கு ஒரு பொருளை தடை செய்துவிட்டால் அதை வியாபாரம் செய்வதையும், தடுத்துவிடுகிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) நூல் : அபூதாவூது 3026, அஹ்மது : 2111, 2546, 2809.*

பொதுவாகச் சொல்லப்பட்ட இந்த போதனையை நபி (ஸல்) அவர்கள் தனித்தனியாக குறிப்பிட்டும் விளக்கமளித்திருக்கிறார்கள்.

**நாய் விற்பனை**

நாய் விற்ற கிரயத்தையும், விபச்சாரத்தின் கூலியையும் சோதிடன் பெறுகிற தட்சணையையும், நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்.

(வேட்டையாடுதல், விளைநிலங்களை பாதுகாத்தல் போன்ற பணிகளுக்குப் பயன்படும் நாயை விற்பனை செய்வதில் தவறில்லை).

*அறிவிப்பவர் : உக்பா பின் அம்ரு (ரழி) நூல் : புகாரி : 2237, 2282, 5346, 5761, முஸ்லீம் : 2930, திர்மிதி : 1052, 1197, நஸயீ : 4218, 4587, அபூதாவூது : 2974, 3020, இப்னுமாஜா : 2150, அஹ்மது : 6453, 16457, 16468.*

**மதுபான விற்பனை**

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு ஒரு தோல் பையில் மதுவை அன்பளிப்பாக வழங்கினார். அவரிடம் அல்லாஹ் இதைத் தடை செய்திருப்பது உமக்கு



தெரியுமா? எனக் கேட்டார்கள். அவர் தெரியாது என்றார் (பிறகு தனது அடிமையிடம்) இரகசியமாக ஏதோசொன்னார். என்ன இரகசியம்? என நபியவர்கள் கேட்டார்கள். இதை விற்கச் சொன்னேன் என்றார்.

“இதைக் குடிப்பதற்கு தடை செய்தவன், விற்பதற்கும் தடை செய்துள்ளான்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். உடனே, தோல்பையின் வாயைத் திறந்துவிட்டார் அது வழிந்தோடியது.

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி) நூல் : முஸ்லீம் : 2957, நஸாயீ : 4585, அஹ்மது : 1937, 2081, 2821, 3201*

**பன்றி மற்றும் செத்த பிராணிகள் விற்பனை**

நபி (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் போது அல்லாஹ்வும், அவன் தூதரும் மதுபானம், தாமாகச் செத்தவை பன்றி, உருவச் சிலைகள் ஆகியவற்றின் விற்பனையை தடை செய்துள்ளார்கள் எனக் கூறினார்கள்.

உடனே அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே செத்தவற்றின் கொழுப்பு கப்பல்களில் பூசவும் தோல்களில் தடவவும், விளக்கு எரிக்கவும், பயன்படுகின்றதே! எனக் கேட்கப்பட்டது.

அதற்கு கூடாது. அதுவும் (ஹராம்) தடுக்கப்பட்டது தான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு மேலும், கூறினார்கள் யூதர்களை அல்லாஹ் அழிப்பானாக! அவர்கள் மீது கொழுப்பை அல்லாஹ் ஹராமாக்கினான். அதை விற்று அதன் கிரயத்தைச் சாப்பிட்டார்கள்.

*அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி) நூல் : புகாரி : 2236, 4633, முஸ்லீம் : 2960, திர்மிதி : 1218 நஸாயீ : 4183, 4590, அபூதாவூது : 3025, இப்னுமாஜா : 2158 அஹ்மது : 13948, 13971.*

**ஜம்ஜம் நீரை நின்று கொண்டுதான் குடிக்கவேண்டுமா?**

நபி(ஸல்) அவர்கள் ஜம் ஜம் நீரை நின்று கொண்டு பருகினார்கள்.

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னுஅப்பாஸ் (ரழி)நூல் : புகாரி : 5617, 1367 முஸ்லிம்: 3776, 3779, திர்மிதி: 1803, நஸயீ: 2915, 2916 அஹ்மது : 1741, 1804, 2074*

இந்த ஹதீஸின் படி ஜம் ஜம் நீரை நின்று கொண்டு தான் குடிக்க வேண்டும் என்று சிலர்கூறி வருகின்றனர்.

நபி (ஸல்) அவர்கள் தாம் அருந்தப் போவது ஜம் ஜம் நீர் என்பதற்காக எழுந்து நின்றிருந்தால் நாமும் அவ்வாறு தான் செய்ய வேண்டும். ஆனால் நபியவர்களோ ஜம்ஜம் அல்லாத நீரையும் நின்று கொண்டு அருந்தியிருக்கிறார்கள்.

(ஒரு தடவை) அலி (ரழி) அவர்கள் லுஹர் தொழுதார்கள். பின்னர் அசர் தொழுகையின் (நேரம்) வரை கூ்.பா பள்ளியின் முற்றத்தில் மக்களின் தேவைகளை (நிறைவேற்றுவதற்காக) அமர்ந்தார்கள். (தொழுகை நேரம் வந்ததும்) தண்ணீர் கொண்டு வரப்பட்டது (அதைக் கொண்டு) தமது முகம், மற்றும் கைகளைக் கழுவினார்கள். தலையை (மஸஹ்) தடவினார்கள். தம் இரு கால்களையும் கழுவி (உளூச் செய்தார்கள்) பின்பு எழுந்து மீதத் தண்ணீரை நின்ற நிலையிலே குடித்தார்கள்.

பிறகு சொன்னார்கள் மக்கள் நின்று கொண்டு குடிப்பதை வெறுக்கிறார்கள். (இப்போது) நான் செய்ததைப் போன்று நபி (ஸல்) அவர்கள் செய்தார்கள் (அதை நான் பார்த்திருக்கிறேன்) என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் நஸ்ஸால் இப்னு சப்ரா (ரஹ்)நூல் : புகாரி : 5616, 5615, நஸயீ : 130, அபுதாவூது : 3230 அஹ்மது : 55*

எனவே நபி ஸல் அவர்கள் ஜம்ஜம் நீருக்கென்று பிரத்தியேகமாக நிற்கவில்லை என்பது தெளிவாகிறது.

ஆகவே ஜம்ஜம் ஆக இருந்தாலும் அதுவல்லாத வேறு



பானமாக இருந்தாலும் அமர்ந்து குடிப்பது தான் சிறந்தது. தேவைப்பட்டால், நின்று குடிப்பதிலும் தவறில்லை. (மேலும் விபரத்துக்கு நின்று குடித்தல் என்ற தலைப்பை பார்க்கவும்).

**சமைத்த உணவு உளூவை நீக்குமா?**

சமைத்த உணவை உண்பதால் உளூ நீங்கும் என்றும். நீங்காது என்றும் மாறுபட்ட கருத்தைத் தரும் ஹதீஸ்கள் உள்ளன.

நெருப்பு தீண்டியவற்றின் (சமைக்கப்பட்ட உணவை உட்கொள்வதன்) காரணமாக உளூச் செய்யுங்கள் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டேன்.

*அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூல் : முஸ்லீம் : 528, 529, நஸயீ: 179, அஹ்மது: 20615, 20655, 20660.*

இப்னு அப்பாஸ் (ரழி) கூறுகிறார்கள். நபி (ஸல்) அவர்கள் ரொட்டியும் இறைச்சியும் சாப்பிட்டார்கள். பிறகு உளூச் செய்யாமலே தொழுகையில் நின்றதை நான் கண்டேன்.

*அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரழி) நூல் : நஸாயீ : 184, புகாரி : 207, 5405, முஸ்லீம் : 531 அபூதாவூது : 159, 162 இப்னுமாஜா : 481அஹ்மது : 1884, 2046, 2172, 2223, 2282, 2393*

நபி (ஸல்) அவர்கள் தமது ஆடையைச் சரி செய்து கொண்டு தொழுகைக்குத் தயாரானார்கள். அப்போது ரொட்டியும், இறைச்சியும் அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அதில் மூன்று கவளம் சாப்பிட்டு விட்டு தண்ணீரைத் தொடாமலே (உளூச் செய்யாமலே) மக்களுக்கு தொழுவித்தார்கள்.

*அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரழி) நூல் : முஸ்லிம் 538*

இவ்விரண்டு கருத்துகளில் உளூச் செய்ய வேண்டும் என்பது ஆரம்பக் காலச்சட்டமாக இருந்தது. பின்னர் நபி (ஸல்) அவர்களால் இச்சட்டம் ரத்து செய்யப்பட்டு விட்டது. உளூச் செய்யத் தேவையில்லை என்பதே இறுதிச் சட்டமானது. இதை பின்வரும் ஹதீஸிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

சமைத்த பொருட்களைச் சாப்பிட்ட பின் (உளூச் செய்தல், செய்யாதிருத்தல் ஆகிய) இரு காரியங்களில் உளூவை விட்டு விடுவதே அல்லாஹ்வின் தூதருடைய கடைசி நிலையாக இருந்தது.

*அறிவிப்பவர்: ஜாபிர் (ரழி) நூல் : நஸாயீ: 185, அபூதாவூது: 164.*

இதை வலுப்படுத்தும் விதமாக ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன.

நான் ஜாபிர் (வழி) அவர்களிடம் சமைத்த உணவை உண்பதால் உளூச் செய்ய வேண்டுமா? என்று கேட்டேன் அவர்கள் தேவையில்லை. நபி (ஸல்) அவர்கள் காலத்தில் அது போன்ற உணவு அரிதாகவே எங்களுக்குக் கிடைத்து வந்தது. அப்போது எங்கள் முன் கைகள், மேல் கைகள் மற்றும் பாதங்கள் தான் எங்கள் கைக்குட்டைகளாக இருந்தன. பிறகு நாங்கள் தொழுவோம். அதற்காக மீண்டும் நாங்கள் உளூச் செய்ய மாட்டோம். என பதிலளித்தார்கள்.

*அறிவிப்பாளர் : சயீத் பின் ஹாரிஸ் (ரஹ்) நூல் : புகாரி : 5457 இப்னுமாஜா : 3273 அஹ்மது : 14489.*

### ஒட்டக இறைச்சி உளூவை முறித்து விடும்

எந்தவொரு உணவை உண்பதும் உளூவை முறிப்பதில்லை. ஆனால் ஒட்டக இறைச்சியை உண்பது உளூவை முறித்து விடும்

ஒரு மனிதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து ஆட்டிறைச்சியை உண்பதால் உளூச் செய்ய வேண்டுமா? எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள் நீ விரும்பினால் உளூச் செய்து கொள். விரும்பினால் உளூச் செய்யாமல் இருந்து கொள் என்று கூறினார்கள்.

ஒட்டக இறைச்சியைச் சாப்பிடுவதால் நாங்கள் உளூச் செய்ய வேண்டுமா? என மீண்டும் கேட்டார். அதற்கு



நபியவர்கள் ஆம்! ஒட்டக இறைச்சியைச் சாப்பிட்டால் உளூச் செய் என்று கூறினார்கள்.

*அறிவிப்பாளர் : ஜாபிர் பின் சமுரா (ரழி)நூல் : முஸ்லிம் : 539, இப்னுமாஜா : 488, அஹ்மது : 19886, 19898, 19953, 19961.*

### தடுக்கப்பட்டதில் முரண்பாடா?

தாமாகச் செத்தது,ஓட்டப்பட்ட இரத்தம், அசுத்தமாகிய பன்றியின் இறைச்சி மற்றும் அல்லாஹ் அல்லாதோருக்காக அறுக்கப்பட்ட பாவமான(உண)வைத் தவிர வேறு எதுவும் மனிதர் உண்பதற்கு தடை செய்யப்பட்டதாக எனக்கு அறிவிக்கப்பட்ட செய்தியில் நான் காணவில்லை என்று கூறுவீராக!

*அல்குர்ஆன்:6:145*

இவ்வசனம் நான்கே நான்கு உணவுகள் மட்டும் தான் தடுக்கப்பட்டுள்ளதாக திட்டவட்டமாக அறிவிக்கிறது.ஆனால் வேறொரு இடத்தில் இதில் சொல்லப்படாத மேலும் சிலவற்றை தடுக்கப்பட்டதாக குர்ஆன் கூறுகிறது.

கழுத்து நெறிக்கப்பட்டவை, அடிபட்டவை, மேட்டிலிருந்து உருண்டு விழுந்தவை, (தமக்கிடையே) மோதிக்கொண்டவை, மற்றும் வனவிலங்குகள் சாப்பிட்ட பிராணிகள் ஆகியவற்றில்(உயிர் இருந்து) நீங்கள் அறுத்தவை தவிர(மற்றவை) பலி பீடங்களில் அறுக்கப்பட்டவை ஆகியன உங்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளன.

*அல்குர்ஆன் 5:3*

இதைத் தவிர நபி(ஸல்) அவர்களின் வாய்மொழியாக கழுதை,கோரைப் பல்லுடைய விலங்குகள்,வேட்டை நகமுடைய பறவைகள் ஆகியனவும் தடை செய்யப்பட்டுள்ளன.

இவற்றைப் பார்க்கும் போது இறைச் சட்டத்தில் முரண்பாடு இருப்பதைப் போன்று தோன்றலாம்.குர்ஆன் இறங்கிய

விதத்தை தெரிந்து கொண்டு இதைப் படித்தால் இதில் எந்த முரண்பாடும் இல்லை என்பதை அறியலாம்.

குர்ஆன் ஒரே நேரத்தில் மொத்தமாக அருளப்படவில்லை. 23 ஆண்டுகளாக தேவைக்கேற்ப கொஞ்சம் கொஞ்சமாக அருளப்பட்டது. தடுக்கப்பட்டவையும் சிறிது சிறிதாகத் தான் தடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்டிருந்ததில் பல விஷயங்கள் பின்னால் தடுக்கப்பட்டன.

அந்த அடிப்படையில் 6:145 வசனம் முதலில் இறங்கியது.அவ்வசனம் இறக்கப்பட்ட தருணத்தில் அதில் கூறப்பட்டுள்ள நான்கு உணவுகள் மட்டுமே தடுக்கப் பட்டிருந்தன. அதன் பின்னர் 5:3 வசனம் அருளப்பட்டு மேலும் சில உணவுகள் அந்த பட்டியலில் சேர்ந்தன. அதனைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்கள் வழியாக மேலும் சில உணவுகள் தடுக்கப்பட்டன.

எனவே இதில் எந்த முரண்பாடும் இல்லை என்பதை இதன் மூலம் அறியலாம்.

**அசைவம் அவசியமா?**

புலால், மாமிசம், இறைச்சி என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் அசைவ உணவை உண்பது அருவருப்பானது, உயிர்களை வேதனை செய்யும் பாவச் செயல் என சிலரால் விமர்சிக்கப்படுகிறது.

இதைப் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாட்டையும் அதைத் தவிர்ப்பதால் ஏற்படும் கேடுகளையும் இங்கே பார்ப்போம்.

நம்பிக்கை கொண்டோரே! ஒப்பந்தங்களை நிறைவேற்றுங்கள் உங்களுக்கு (பின்னர்) கூறப்படுவதை தவிர தாவரத்தை உண்ணும் கால்நடைகள் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

அல்குர்ஆன்: 5:1



கால்நடைகளை உங்களுக்காகவே படைத்தான். அவற்றில் குளிரைத் தடுப்பவை (கம்பளி) உண்டு. பல பயன்களும் உள்ளன. அவற்றிலிருந்து சாப்பிடுகிறீர்கள்.

அல்குர்ஆன்: 16:5

கால்நடைகளில் உங்களுக்குப் படிப்பினை உள்ளது. அதன் வயிற்றில் உள்ளதிலிருந்து உங்களுக்கு பருகத் தருகிறோம். அவற்றில் ஏராளமான பயன்களும் உள்ளன. அவற்றை உண்ணுகிறீர்கள். அல்குர்ஆன்: 23:21

மேலும் கீழ்காணும் வசங்களிலும் இக்கருத்தைக் காணலாம். 40:79, 39:6, 22:34, 22:30, 2:28, 16:80, 16:66, 10:24, 6:142.

மேற்கண்ட வசனங்கள் அனைத்தும் கால்நடைகளை அறுத்து உண்பதை அனுமதிக்கின்றன.

இறைவனின் படைப்பில் தாவர உண்ணிகள், மாமிச உண்ணிகள் என இரு வகைகள் உள்ளன.

தாவர உண்ணியின் உடல் அதை மட்டுமே ஏற்றுக் கொள்கிற விதத்தில் படைக்கப்பட்டுள்ளது. பற்களின் அமைப்பு தட்டையாகவும், ஜீரண உறுப்புகள் அதற்கேற்ற வாரும் அமைந்துள்ளது. அவற்றால் மாமிச உணவை உட்கொண்டு உயிர் வாழ முடியாது.

அதே போல மாமிச உண்ணிகளின் உடல் மரக்கறி உணவை ஜீரணித்துக் கொள்ள முடியாது.

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்பது நமது முன்னோர்கள் ஆய்ந்தறிந்த ஓர் உண்மை.

மனித உடல் மட்டுமே மரக்கறி, மாமிசம் ஆகிய இரண்டையும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் படைக்கப்பட்டுள்ளது.

இருவகை உணவையும் உண்பதற்கு ஏற்றவாறு தட்டையும், கூர்மையும் கலந்த பல்வரிசையையும், அதற்கேற்றவாறு ஜீரண மண்டலத்தையும் இறைவன் ஏன் வழங்கினான்? என்பதை சிந்தித்தால் இறைவனின் ஏற்பாட்டில் அசைவம் அனுமதிக்கப்பட்டதே என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

**உயிரைக் கொல்வது உறுத்துகிறதா?**

உயிரைக் கொன்று உயிர் வாழ்வதா? என சிலர் கேள்வியெழுப்புகின்றனர்.

இவர்கள் தாவரங்கள் (சைவம்) உட்பட எதையும் உண்ண முடியாது. ஏனெனில் மரம், செடி, கொடிகளுக்கும் உயிர் இருக்கிறது. எனவே தான் அவைகள் வளர்கின்றன என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதை மறுப்பவர்கள் ஒரு துளி நீரைக் கூட வாயில் வைத்து சுவைக்க முடியாது. ஏனெனில் ஒரு துளி நீரில் 50 மில்லியன் பாக்டீரியக்கள் புறக்கண்களுக்கு தெரியாமல் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என மருத்துவ உலகம் கூறுகிறது.

இட்லி, தயிர், பிரட், பன் என எல்லாம் உயிர் மயம். இவை எல்லாவற்றிலும் நொதித்தல் உண்டு. அவை எல்லாம் உயிர்களின் செயலே!

**கொழுப்புச் சத்து கூடுதலாக இருக்கிறதே!**

அசைவத்தில் மட்டுமல்ல சைவ உணவிலும் கொழுப்பு இருக்கிறது. நாம் அன்றாடம் பயன்படுத்தும் சமையல் எண்ணெய்கள், தேங்காய், வெண்ணெய், வேர்க்கடலை தயிர், பாதாம் என சைவமாக கருதப்படும் பொருட்களில் கொழுப்புடையவை குறித்து ஒரு பட்டியலே தயாரிக்கலாம்.

கொழுப்பு நீக்கப்பட்ட எண்ணை எனும் கவர்ச்சிகரமான விளம்பரமும், வியாபாரமும் இதை உண்மைப் படுத்துகிறது.



மேலும் கொழுப்பு என்பது உடல் இயக்கத்திற்கு உதவக் கூடியது. கொழுப்பின்றி மனிதனால் வாழவே முடியாது. அது அளவு கடந்து விடாமல் அணை போட வேண்டுமே தவிர கொழுப்பே கூடாது என்பது அறிவுடைமையாகாது.

இதய நோய், உடல் பருமன் போன்ற நோயாளிகள் மாமிசம் உண்ணக் கூடாது என மருத்துவர்கள் கூறுவதை வைத்துக் கொண்டு அசைவமே ஆபத்து என்பதை ஏற்க முடியாது.

சில நோயாளிகளுக்கு சர்க்கரை, வேறு சிலருக்கு உப்பு, கத்தரி, மீன், தயிர் என ஒவ்வொருவருக்கும் ஒத்துக்கொள்ளாத தடுக்கப்பட்ட உணவுப் பட்டியல் நீளுமே. அனைத்தையும் தவிர்க்க வேண்டுமென கூற முடியுமா?

கூறினால் உயிர்கள் யாவும் உண்டு, உயிர்த்து வாழமுடியமா? என்பதையும் சிந்திக்க வேண்டும்

**உணவுத் தட்டுப்பாடு.**

கால்நடைகளை உணவுக்கோ வேறு பயன்பாட்டிற்கோ கொல்லக் கூடாது என முடிவெடுத்து விட்டால் மனித வாழ்வே கேள்விக் குறியாகி விடும். .

நாமும் சைவ உணவைத் தேட ஆடு,மாடுகளும் நம்முடன் சைவத்தில் போட்டி போட பூமியில் கிடைக்கும் தாவரங்களையும், தானியங்களையம் பங்கிட்டுக் கொள்வதில் பெரும் சிக்கல் ஏற்பட்டு விடாதா?

ஒரு ஐந்தாண்டு காலம் மனிதனும் மிருகங்களும் போட்டி போட்டுச் சாப்பிட்டால் உலகின் பசுமை வனக் காடுகள் அனைத்தும் பாலைவனமாக மாறிப்போகாதா?

நாம் உயிர்வாழ சுத்தமான காற்று (ஆக்ஸிஜன்) அவசியம். அதை சுவாசித்து கார்பன்-டை-ஆக்ஸைடு எனும் அசுத்தக்

காற்றை வெளியிடுகிறோம். விலங்குகளும், கால்நடைகளும் இதுபோலவே ஆக்ஸிஜனை உள்ளிழுத்து கார்பனை வெளியிடுகின்றன. தாவரங்கள் தான் இதற்கு மாற்றமாக ஆக்ஸிஜனை தந்து கார்பனை உள்ளிழுத்துக் கொள்கின்றன.

கட்டுப்படுத்தப்படாத கால்நடைப் பெருக்கமும் அவற்றின் உணவுக்காக மரங்களின் அழிவும் உலகில் ஆக்ஸிஜன் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி மொத்த உயிர்களின் வாழ்வையும் கேள்விக்குறியாக்கி விடாதா?

மனித இனம் பெருகினால் தின்று அழிப்பதற்கும், சுவாசித்து கழிப்பதற்கும் தகுந்தாற் போல் புதிய புதிய முறையில் உணவு உற்பத்தி நடந்து கொண்டேயிருக்கும். ஏனெனில் மனிதன் வெறும் வயிற்றோடு மட்டும் பிறப்பதில்லை. உலகின் சிக்கலுக்குத் தீர்வு காணும் அறிவோடும் பிறக்கிறான். ஆனால் இங்கே பெருகுவது சிந்தனையற்ற விலங்கினம்.

இறுதியில் உணவின்றி உயிர்கள் அழியும் அல்லது தனது உணவைப் பெறுவதற்காக ஒன்றையொன்று தாக்கிக் கொண்டு அழியும். இந்த அழிவை விட மனிதனின் உணவுக்காகவும், பயன்பாட்டுக்காகவும் அறுப்பது அபாயகரமானாதா? என்பதை சிந்திக்க வேண்டும்.

**உயிரினப் பெருக்கம்**

தாவரங்கள், விலங்குகள் மனிதர்கள் என அனைத்து வகை ஜீவராசிகளும் உயிர் வாழ்வதற்காக ஒன்றையொன்று சார்ந்து நிற்கும் வகையில் உணவுச் சங்கிலியால் பிணைத்து வைத்திருக்கிறான், இறைவன்.

அந்தச் சங்கிலியின் ஒரு கண்ணியில் சிக்கல் வந்தால் அடுத்தடுத்த கண்ணிகளும் பாதிக்கப்படும். ஒரு விலங்கு அது உண்ண வேண்டிய உயிரினங்களை உண்ணாமல் விட்டு விட்டாலும் பெரும் குழப்பம் ஏற்படும்.



ஏனெனில் அவற்றின் வளர்ச்சியின் வேகம் அப்படி. அவற்றின் சினைக்காலம். இனப் பெருக்கத்திற்கு தயாராகும் காலம் ஆகியவை மிகவும் குறைவு. பெற்றெடுக்கும் குட்டிகளின் எண்ணிக்கையும் அதிகம்

**உதாரணத்திற்கு எலிகள் :**

- ☞ கருவுற்றிருக்கும் காலம் - 23 நாட்கள்
- ☞ சுண்டெலியின் சினைக்காலம் - 21 நாட்கள்
- ☞ ஒரு தடவை போடும் குட்டிகள் - 6 முதல் 10
- ☞ இரண்டு குட்டிகள் பிறந்தால் அவற்றின் பாலினம் - ஆண் ஒன்று, பெண் ஒன்று
- ☞ ஒரு பிரவசத்துக்கும் அடுத்த கருவுறுதலுக்கும் இடைப்பட்ட காலம் ஏதுமில்லை. மறுநாளே தயாராகிவிடும்
- ☞ பிறந்தது முதல் இனவிருத்திக்கு தயாராகும் கால இடைவெளி: (பருவமடையும் காலம்) பிறந்த மூன்றாம் மாதம்
- ☞ ஒரு ஜோடி எலிகள் ஓராண்டு முடிவில் பெருகியிருக்கும் எண்ணிக்கை: 1,000 முதல் 2500 வரை
- ☞ நாள் ஒன்றுக்கு 5 எலிகளின் உணவு: ஒரு நாளில் ஒரு மனிதனின் உணவுக்குச் சமம்
- ☞ உலக உணவு உற்பத்தியில் எலிகளால் ஏற்படும் சேதம் ஆண்டுக்கு: 10 சதவீதம் உணவு தானியங்கள்
- ☞ இந்தியாவில் மட்டும் ஏற்படும் சேதம் ஆண்டுக்கு:
- ☞ ரூ.2,500 - கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருட்கள்.

மனிதர்களால் பொறி வைத்து பிடிக்கப்பட்டு அழிக்கப்படும் எலிகளின் எண்ணிக்கையை விட பாம்பு, பூனை, ஆந்தை போன்ற விலங்குகளால் உண்ணப்படும் எலிகளின் எண்ணிக்கை பல நூறு மடங்கு அதிகம்.

எலிகளைத் தின்பதை அவை நிறுத்திக் கொண்டால் அவற்றின் பெருக்கமும் அதனால் ஏற்படும் சேதங்களும் அவற்றின் உணவுத் தேவையும் பல நூறு மடங்கு அதிகரிக்கும்.

பெருகி நிற்கும் எலிகளின் உணவுத் தேவை ஒருபுறம் இருந்தால் இதுவரை அந்த எலிகளை உட்கொண்ட பிராணிகளின் தேவை மறுபுறம் நெருக்கும். ஒன்று இவை மடியும் அல்லது வேறு விலங்குகளின் உணவில் கைவைத்து அதை உட்கொள்ள வேண்டிய விலங்கிற்கு உணவு கிடைக்காமல் மடியச் செய்யும்.

இப்படியே ஒன்றன்பின் ஒன்றாக ஒட்டுமொத்த உணவுச் சங்கிலியும் உடைந்து நொறுங்கும். அதுபோன்ற பேரழிவிலிருந்து உலகைக் காப்பதற்குத் தான் பேரறிவாளனாகிய இறைவன் பூனையைக் கொண்டு எலியைக் கட்டுப்படுத்துகிறான். பாம்பைக் கொண்டு பூனையைக் கட்டுப்படுத்துகிறான். கழுகைக் கொண்டு பாம்பு என ஒன்றைக் கொண்டு மற்றொன்றை வாழச் செய்துள்ளான். அந்த வழியில் மனிதனைக் கொண்டு ஆடு, மாடுகளைக் கட்டுப்படுத்துகிறான்.

**பொருளாதாரப் பிரச்சனை**

நமது அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்கள் பலவும் மிருகங்களைக் கொல்வதன் மூலமே கிடைக்கின்றன.

காலணி, பெல்ட், பேக், மத்தளம், மத்தள வார், குளிராடை இவையும் இவை போன்ற எண்ணற்ற பொருட்களுக்கும் மிருகத்தின் தோல்கள் தான் மூலதனம்.

மெழுகு, சோப்பு, களைக்கொல்லி, பூச்சி மருந்து, மெடிக்கல் கேப்சூல், ஆபரேஷன் நூல், களிம்பு, பெயிண்ட் இவை போன்ற ஏராளமான பொருட்களுக்கு மிருகக் கொழுப்பு தான் மூலதனம்.



பிராணிகளைக் கொல்லக் கூடாது என்போர் இதுபோன்ற ஆயிரக்கணக்கான பொருட்களின் பயன்பாட்டை தவிர்ப்பார்களா? இவற்றை தயாரிக்கும் தொழிற்சாலைகளை இழுத்து மூடுவார்களா? (அ) மூடத்தான் சம்மதிப்பார்களா? இதில் நேரடியாகவும், மறைமுகமாகவும் சம்பந்தப்பட்ட கோடானு கோடி தொழிலாளர்களுக்கு மாற்றுத் தொழிலை பரிந்துரைப்பார்களா? என்பன போன்ற ஆயிரமாயிரம் கேள்விகள் அணிவகுக்கின்றன.

இவை அனைத்திற்கும் பதில் ஒன்றே ஒன்றுதான் எந்தவித உறுத்தலுமின்றி அசைவத்தை அங்கீகரிப்போம்.

**நண்டு சாப்பிடலாமா?**

நண்டு, சுறா, திமிங்கலம், ஆகியவை உண்பதற்கு அனுமதிக்கப்படடதல்ல என சிலர்கூறி வருகின்றனர்

அல்லாஹ்வும், ரசூலும் இவ்வாறு எந்தத் தடையும் விதிக்கவில்லை. கடல்வாழ் உயிரினங்களில் கேடு தருபவை தவிர அனைத்தும் அனுமதிக்கப்பட்டது என குர்ஆன் கூறுகிறது.

உங்களுக்கும் ஏனைய பயணிகளுக்கும் பயன்படும் பொருட்டு கடலில் வேட்டையாடுவதும் அதன் உணவும் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. *அல்குர்ஆன் 5 : 96*

கடலிலிருந்து பசுமையான இறைச்சியை உண்பதற்காக அவனே உங்களுக்கு கடலை பயன்படச் செய்தான்.

*அல்குர் ஆன் 16 : 14*

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதரிடம் கேட்டார். யா ரசூலல்லாஹ் நாங்கள் கடலில் பயணிக்கும் போது கொஞ்சம் நீரை எடுத்துச் செல்கிறோம். அதைக் கொண்டு உளூச்

செய்துவிட்டால் தாகம் தணிக்க முடியாது. எனவே, கடல்நீரில் உளூச் செய்யலாமா? எனக் கேட்டார். அதற்கு அதன் தண்ணீர் தூய்மையானது அதில் செத்தவையும் அனுமதிக்கப்பட்டது என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : திர்மிதி : 64, நஸாயீ : 330, 4275, அபூதாவூது : 76, இப்னுமாஜா : 380, 3237, அஹ்மது : 6935, 8380, 8557, 8737, 14481, 22017*

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அபூஉபைதா (ரழி) அவர்களின் தலைமையில் 300 வீரர்கள் கொண்ட எங்கள் படையை அனுப்பினார்கள். குறைஷிகளின் வணிகக் கூட்டத்தை எதிர்பார்த்து கடற்கரையோரமாக அரை மாத காலம் நாங்கள் தங்கியிருந்தோம். (அப்போது) உண்ண உணவின்றி கருவேல மர இலையைச் சாப்பிட்டோம். (அதனாலே கருவேல இலைப்படை என பெயர்வந்துவிட்டது) கடல் எங்களுக்காக ஒரு திமிங்கலத்தை கரையில் ஒதுக்கியது. அதை அரை மாத காலமும் சாப்பிட்டோம்.

*அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி)நூல் : புகாரி : 2483, 2983, 4360, 4361, 4362, 5493, 5494, முஸ்லீம் : 3577 திர்மிதி : 2399, நஸயீ : 4276, 4277, 4278 இப்னுமாஜா : 4149 அஹ்மது : 13768, 13795.*

மதீனா வந்தவுடன் நபி(ஸல்) அவர்களிடம் இதைக் கூறினோம்.அல்லாஹ் வெளிப்படுத்திய இந்த உணவை உண்ணுங்கள். மிச்சமிருந்தால் நமக்கும் தாருங்கள் எனக் கேட்டார்கள். நபி(ஸல்) அவர்களிடம் (மிச்சமிருந்த) ஒரு துண்டை கொண்டு வந்து கொடுத்தார்கள். அதை நபி (ஸல்) அவர்கள் சாப்பிட்டார்கள்.

*அறிவிப்பவர்: ஜாபிர் (ரழி)நூல் : முஸ்லிம் : 3576, புகாரி : 4362, நஸாயீ : 4279, அஹ்மது : 13738, 13817, 14517*

மேற்கண்ட செய்திகள் யாவும் கடல் வாழிகள் அனைத்துமே உண்ணத் தகுந்தது என்ற கருத்தை தெளிவுபடுத்துகின்றன.



எனவே, அல்லாஹ் அனுமதித்ததை தடை செய்யும் அதிகாரம் யாருக்குமில்லை. யாரேனும் தடை செய்தால் அவர்களுக்கு கட்டுப்படவேண்டியத் தேவையுமில்லை.

**அல்லாஹ்வையன்றி நமக்காக அறுத்ததை சாப்பிடலாமா?**

திருக்குர்ஆனின் 2:173, 5:3, 6:145, 16:115 ஆகிய வசனங்களில் அல்லாஹ் அல்லாதோருக்காக அறுக்கப்பட்டவை ஹராம் என கூறப்பட்டுள்ளது.

அப்படியானால், நாம் நமக்காகவும், நம் விருந்தினருக்காகவும் அறுக்கும் ஆடு, மாடுகளை சாப்பிடக்கூடாதா? என்று சிலர்கேள்வி எழுப்புகின்றனர்

அல்லாஹ்வுக்காக அறுத்தல் என்றால் அவன் உண்பதற்காக அறுப்பது அல்ல. அவ்வாறு யாரும் புரிந்து கொள்வதும் இல்லை. மாறாக, அவன் தான் இந்தப் பிராணியைப் படைத்தான். அவனே அதை உண்பதற்குரிய அனுமதியையும் வழங்கியுள்ளான். எனவே, அந்தப் பிராணியின் மீது இறைவனுக்கு உள்ள அதிகாரத்தை நிலைநாட்டுவதும் அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவதும், அவனது அருளை எதிர்பார்ப்பதும் தான் அல்லாஹ்வுக்காக அறுத்தல் என்பதன் பொருளாகும்.

அவற்றின் மாமிசங்களோ, இரத்தங்களோ அல்லாஹ்வை சென்றடைவதில்லை. *அல்குர் ஆன் - 22:37*

நாம் நமக்காகவும், நம் விருந்தினருக்காகவும் அறுக்கும் போது இந்த நோக்கத்தில் அறுப்பதில்லை. உண்பதற்குத் தான் அறுக்கிறோம். எந்த உரிமையையும் நிலைநாட்டுவதற்காக அல்ல.

அல்லாஹ்வுக்கு அறுப்பதைப் போன்று பக்தி எங்கே வெளிப்படுகிறதோ அவற்றை உண்பது தான் ஹராமாகும்.

உதாரணமாக அவ்லியாக்கள், மகான்கள், இன்ன பிற கற்பனை தெய்வங்களுக்காகவும், பிராணிகள் அறுக்கப்படுகின்றன. அவற்றை அவர்கள் சாப்பிடுவதில்லை. அவர்கள் அதைச் சாப்பிடவேண்டும் என்ற எண்ணமும் அறுப்பவர்களிடம் இல்லை.

இறைவனுக்காக அறுக்கும் போது என்ன பக்தியும், நம்பிக்கையும் வைக்கப்படுகிறதோ அதுதான் இங்கும் வெளிப்படுகிறது.

அல்லாஹ்வுக்காக அறுத்து விட்டு அவன் அருளை எதிர்பார்ப்பதை போல் அவ்லியாக்களுக்காக அறுத்துவிட்டு அருள்கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோன்ற உணவுகள்தான் ஹராம் ஆகும்.

**சாப்பிடலாமா? கூடாதா? என சந்தேகம் வந்தால்?**

ஒரு பொருளை சாப்பிடுவது கூடுமா? கூடாதா என்ற சந்தேகம் வந்துவிட்டால் இயன்றவரை அதற்குரிய சான்றுகளைத் தேடி சந்தேகத்தை நீக்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

எந்த முடிவுக்கும் வரமுடியாமல் சந்தேகம் நீடித்துக் கொண்டேயிருந்தால் அதைச் சாப்பிடாமல் ஒதுங்கிக் கொள்ள வேண்டும்.

**உதாரணமாக :** அல்லாஹ்வின் பெயர்கூறி அனுப்பப்பட்ட வேட்டை நாய் நமக்காக கொண்டு வருவதைச் சாப்பிட மார்க்கத்தில் அனுமதியிருக்கிறது.

வேட்டைக்குச் சென்ற இடத்தில் நமது நாயுடன் பிஸ்மி சொல்லப்படாத வேறு நாயும் நின்று கொண்டிருந்தால். இதைப்பிடித்தது எது? நாம் அனுப்பிய நாயா? அருகிலிருக்கும் வேறு நாயா? என்று சந்தேகம் எழுவதைத் தவிர்க்க இயலாது.



இந்த தருணத்தில் அதைப்பிடித்தது எது? என்பதை அறிய முயற்சிக்க வேண்டும். அருகில் யாரும் இதைப் பார்த்துக் கொண்டிருந்தால் அவர்களிடம் விசாரித்துப் பார்க்கலாம். வேறு ஏதும் உறுதியான தடயம் கிடைக்கிறதா? என ஆய்வு செய்யலாம்.

எந்தச் சான்று கிடைக்காமல் இதுவும் பிடித்திருக்கலாம் அதுவும் பிடித்திருக்கலாம் என்ற இழுபறி நிலையே நீடித்தால் இந்த உணவே வேண்டாம் என விலகிக் கொள்ள வேண்டும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிஸ்மில்லாஹ் கூறி அனுப்பப்பட்ட உனது பிராணியுடன் பிஸ்மி கூறப்படாத வேறு நாய்கள் கலந்திருந்தால் அதை நீ சாப்பிடாதே ஏனெனில் எது அதைப் பிடித்தது? என்பதை நீ அறிய மாட்டாய் என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அதீய்யிப்னு ஹாதிம் (ரழி) நூல் : புகாரி : 175, 2054, 5483, 5487, 5475, 5476 முஸ்லீம் : 3560, 3565 திர்மிதி : 1385, 1390 நஸாயீ : 4190, 4200. ஆபூதாவூது, இப்னுமாஜா அஹ்மது.*

அதுபோல பிஸ்மில்லாஹ் கூறி எய்த அம்பினால், வேட்டையாடப்பட்ட பிராணியை சாப்பிடுவதும் அனுமதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு, “அம்பின் மூலம் வேட்டையாடப்பட்ட பிராணியை ஓரிரு நாட்களுக்குப் பின் தண்ணீரிலிருந்து கண்டெடுத்தால் அதை நீ சாப்பிடாதே” என நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்.

*அறிவிப்பாளர் : அதிய்யி பின் ஹாதிம் (ரழி)நூல் : புகாரி : 5485, முஸ்லீம் : 3566, திர்மிதி : 1389, அபூதாவூது : 2467, அஹ்மது : 18570.*

இந்தத் தடைக்கு காரணமும் சந்தேகம்தான். அதன் மரணம் அம்பினாலா? அல்லது நீரினாலா? எனும் கேள்விக்கு விடை தெரியாமல் போகும்போது அதைச்சாப்பிடாமல் விலகி விடுவதே நல்லது.

ஒருவேளை ஒருவர் இன்றைய நவீன அறிவியலை துணைக்கு அழைத்துக் கொண்டு செத்துவிட்ட அந்தப் பிராணியை ஆய்வுக்கு உட்படுத்தி அது தரும் உறுதியான தகவலின் அடிப்படையில் ஒரு முடிவுக்கு வந்தால் அது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று தான்.

நபி(ஸல்) அவர்களுக்கு தர்மப் பொருள் தடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் வீட்டில் கிடந்த பேரீத்தம் பழம் ஒன்றை தர்மப்பொருளா? அல்லது தனக்குரிய பொருளா? என்பதை அவர்களால் உறுதி செய்ய முடியவில்லை.

ஏனெனில், நபி(ஸல்) அவர்களின் வீடும், பள்ளிவாசலும் ஒன்றோடொன்று இணைந்தே இருந்தது. இடையில் ஒரு திரைச்சீலை மட்டுமே தடுப்பாக இருந்தது. மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் தர்மப்பொருட்கள் அனைத்தும் பள்ளிவாசலில் தான் பாதுகாக்கப்படும். அதில் ஒன்றிரண்டு வீட்டிற்குள்ளே உருண்டு வர வாய்ப்புகளும் உண்டு.

ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரமுடியாத இந்தச் சூழலில் அதைச் சாப்பிட வேண்டாம் என்ற முடிவுக்கே வந்திருக்கிறார்கள். அதை தமது வாய்மொழியாக இவ்வாறு தெளிவுபடுத்துகிறார்கள்.

நான் என் வீட்டுக்கு திரும்புகிறேன். என் விரிப்பில் பேரீத்தம் பழம் ஒன்று விழுந்து கிடப்பதைக் காண்கிறேன். அதை சாப்பிடுவதற்காக (என் வாயருகே) அதை உயர்த்துகிறேன். பின்னர்அது தர்மப்பொருளாக இருக்குமோ என்ற அச்சம் எனக்கு வந்து விடுகிறது. அதை நான் (சாப்பிடாமல்) போட்டுவிடுகிறேன் என்று நபி(ஸல்) கூறுகிறார்கள்.

*அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரழி) நூல் : புகாரி : 2433, 2431, 2055, முஸ்லீம் : 1781, 1782, 1783 அபூதாவூது : 1408, 1409 அஹ்மது : 11893, 12447, 13535.*



இதுபோன்ற சந்தேகத்திற்குரியதை தவிர்ப்பதில் வேறொரு நன்மையும் உண்டு சந்தேகத்திற்குரியதிலே இவ்வளவு கண்டிப்பு காட்டுகிறவர் ஹராமானதின் அருகில் கூட நெருங்கக் கூடாது எனும் பக்குவத்தையும் அடைந்து கொள்வார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹலால் தெளிவானது. ஹராம் தெளிவானது. இரண்டுக்கும், இடையில் சந்தேகத்திற்குரியவையும் உண்டு. யார் சந்தேகமானதை விட்டு விலகிக் கொள்கிறாரோ அவர் தன் மானத்தையும், மார்க்கத்தையும் காப்பாற்றிக் கொண்டவராகிறார்.

யார் சந்தேகத்திற்குரியதை செய்து விடுகிறாரோ அவர் வேலி ஓரத்தில் (கால்நடைகளை) மேய்ப்பவரைப் போன்றாவார். (ஓரத்தில் மேய்ப்பது) வேலிக்குள்ளே மேய்ந்து விட வழி வகுக்கும். அறிந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு மன்னனுக்கும் ஓர் எல்லை உண்டு. அல்லாஹ்வின் பூமியில் அவனது எல்லை அவனால் தடுக்கப்பட்டவையே என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : நு."மான் இப்னு பஷீர் (ரழி) நூல் : புகாரி : 52, 2051, முஸ்லீம் : 2996, திர்மதி : 1126 நஸாயீ : 2377, 5614 அபூதாவூது : 2892 இப்னுமாஜா : 3974, அஹ்மது : 17624, 17645, 17649.*

சந்தேகத்திற்குரியதை தவிர்ப்பது எந்த அளவுக்கு அவசியமானதோ அதே அளவுக்கு அதில் சந்தேகத்திற்கு இடமிருக்கிறதா? என்பதை உறுதி செய்வதும் அவசியமானதாகும். நமது கற்பனையையும், மன இச்சையையும் அடிப்படையாக வைத்துக் கொண்டு சந்தேகம் என்ற முடிவுக்கு வந்து விடவும் கூடாது.

ஹலால் என்று கூறுவதற்கும் ஹராம் என்று கூறுவதற்கும் சம அளவில் வாய்ப்புகள் இருந்து இறுதி முடிவெடுக்க முடியாத நிலை ஏற்படும் போது தான் சந்தேகத்திற்குரியவை என்ற முடிவுக்கு வரவேண்டும்.

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து சில உணவுகளைச் சாப்பிட்டால் பாவமாகி விடுமோ (என்று சந்தேகம் வருகிறது) நான் என்ன செய்வது? எனக் கேட்டார். அதற்கு உன் உள்ளத்தில் எந்த தடுமாற்றமும் வர வேண்டாம் (அடிப்படையின்றி சந்தேகப்பட்டால்) அதில் நீ கிறிஸ்தவர்களுக்கு ஒப்பாகி விடுவாய் என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

*அறிவிப்பவர்: ஹுல்ப் (ரழி) நூல்: அபூதாவூது: 3290, திர்மிதி: 1490, இப்னுமாஜா: 2820, அஹ்மது: 20959.*

## உணவுக்கு இறைவன் பொறுப்பு எனில் பசியும், பட்டினியும் ஏன்?

உலகில் உள்ள அனைத்து உயிர்களின் உணவுக்கும் இறைவன் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் போது பசி, பட்டினி, உணவுப்பற்றாக்குறை போன்றவை ஏற்படுவதற்கு காரணம் மனிதனின் அரசியல், பொருளாதார நிர்வாக சீர்கேடுகள் தான்.

அனைத்து உயிர்களின் உணவுக்கும் இறைவன் பொறுப்பேற்கிறான் என்றால், அனைத்து உயிர்களுக்கும் தேவையான உணவை உலகில் இறைவன் வைத்துள்ளான் ஒவ்வொரு ஜீவனும் அதைத்தேடி முயற்சித்து தனக்குரிய பங்கை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பொருள். அந்தத் தேடலில் பலருக்கு கிடைக்கிறது. சிலருக்கு கிடைக்காமல் போகிறது.

கிடைக்காமைக்கு காரணம் உலகில் உற்பத்தியாகும் உணவுப்பொருளை பங்கிடுவதில் மனிதன் செய்யும் முறைகேடும் தேவையற்ற குறுக்கீடும் தான்.

உணவுப் பொருட்கள் ஒவ்வொன்றும் பூமியின் பல்வேறு பகுதிகளில் விளைவிக்கப்படுகிறது. சில பகுதியில் விளையும் பொருள் வேறு சில பகுதியில் விளைவதில்லை. அது



அந்தந்தப் பகுதியின் மண்வளம், நீர்வளம், தட்பவெப்பம் ஆகியவற்றைப் பொருத்து அமையும்.

ஒரு பகுதியில் தேவைக்கு அதிகமாக விளையும் உணவு தானியங்களை தேவையுடைய பகுதிக்கு பகிர்ந்தளித்தால் பட்டினிச் சாவையும், பற்றாக்குறையையும் தவிர்க்கலாம்.

திமிர்பிடித்த பணக்கார நாடுகள் தனது தேவை போக எஞ்சியிருக்கும் பால், கோதுமை போன்ற உணவுப் பண்டங்களை கடலில் கொட்டுகின்றன பாழாய்ப் போகும் இந்தப் பண்டங்களை முறையாகப் பகிர்ந்தளித்தால் பலரின் பசி நீங்கும்.

உணவுப்பொருள் சேமிப்புக்கிடங்குகள் முறையான பராமரிப்பின்றி ஒவ்வொரு ஆண்டும் பல லட்சம் டன் உணவு தானியங்கள் உளுத்துப் போய் வீணாகின்றன. அவைகள் முறையாகப் பராமரிக்கப்பட்டால் பலரின் பசி நீங்க வாய்ப்புண்டு.

விலையேற்றத்தை எதிர்பார்த்து பெரும் பெரும் பண முதலைகளின் குடோன்களில் லடசக்கணக்கான டன் உணவுப் பொருட்கள் பதுக்கி வைக்கப்படுகின்றன. அதன் மூலமும் செயற்கையான உணவுப் பற்றாக்குறை உண்டாகிறது.

தாராளமாகச் சந்தையில் கிடைத்தாலும் கடுமையான விலையேற்றத்தின் காரணமாக ஏழைகள் அதன் பக்கம் எட்டிக்கூட பார்க்க முடியாத சூழல் ஏற்படுகிறது.

வளர்ந்த ஏகாதிபத்திய நாடுகள் தமது எரிபொருள் தேவைக்காக இனி மத்திய கிழக்கு நாடுகளைச் சார்ந்திருக்கக் கூடாது என்று மாற்று எரிபொருளை கண்டறியும் விதமாக உணவு தானியங்களைப் பயன்படுத்தி பயோ டீசல் தயாரிக்கும் வேளையில் இறங்கியுள்ளன. 2008ம் ஆண்டு அமெரிக்கா தனது நாட்டின் 40 சதவீத தானியத்தை இதற்காக

செலவளித்துள்ளது. அதுவே 2009-ல் 50 சதவீதமாகவும் 2010-ல் 60 சதவீதமாகவும் அதிகரித்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

விளைவிக்கப்படும் உணவுப்பொருளில் 60 சதவீதத்தை உண்ணக் கொடுக்காமல் வேறு வேலைகளுக்கு பயன்படுத்துவது என்பது பட்டினியால் சாவும் ஏழைநாட்டு மக்களைப் பற்றி எந்த கவலையும் கொள்ளாத சுயநல சிந்தனையின் வெளிப்பாடன்றி வேறென்னவாக இருக்க முடியும்? இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி என பல நாடுகளில் துவங்கியுள்ள இந்த பயோ டீசல் பயணம் செயற்கை பற்றாக்குறை உண்டாக ஓர் நேரடிக் காரணமாக உள்ளது.

தேவை அதிகரித்து விலைவாசி உயர்ந்து மண்ணை மலடாக்கும் ரசாயனக் கழிவுகளால் ஆயிரக்கணக்கான ஹெக்டர் நிலங்கள் பயரிட முடியாத தரிசாக மாறிக் கொண்டிருக்கிறது. அந்தக் கழிவுகளை சுத்திகரித்து முறைப்படுத்தினால் இன்றிருப்பதை விட பல மடங்கு உற்பத்தி பெருகும், சாப்பிட்டது போக எஞ்சியதை வேறு தேவைக்கு பயன்படுத்தவும் முடியும்.

விளைபொருட்களின் ஆதாரமாகத் திகழும் நீர் நிலைகளான குளங்கள், குட்டைகள், ஏரிகள் ஆக்கிரமிக்கப்பட்டு அடுக்குமாடி குடியிருப்புகளாக மாறுகின்றன.

அவற்றை நம்பி பயிர் செய்த விவசாயிகள் நீர் ஆதாரமற்ற வயல் வெளிகளை கிடைத்த விலைக்கு விற்று விடுகின்றனர் நாளடைவில் அங்கே கட்டிடங்கள் முளைத்து களைகட்டத் துவங்கி விடுகின்றன.

இதனைத் தாண்டி எஞ்சியிருக்கும் விவசாய பூமியும் மழை நேரத்தில் வெள்ளம் செல்ல வழியில்லாமல் அருகில் விளைந்திருக்கும் விவசாய பூமியை ஒரு கைபார்த்து கைக்கு எட்டியதை வாய்க்கு எட்டாமல் செய்து விடுகின்றன.



இதுபோன்ற மனிதச் சிந்தனையின் நிர்வாகக் குறுக்கீடு தான் உலகில் சிலருக்கு உணவு கிடைக்காமைக்கு காரணம்.

மனிதர்களின் கைகள் செய்தவற்றின் காரணமாக கடலிலும், தரையிலும் சீரழிவு மேலோங்கி விட்டது. அவர்கள் திருந்துவதற்காக அவர்கள் செய்ததில் சிலவற்றை அவர்களுக்கு சுவைக்க செய்வான்.

அல்குர் ஆன் 30:41

உணவு கிடைப்பதில் இவ்வளவு சிக்கல்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் உணவு உற்பத்தியை பொறுத்தவரை உலகமக்கள் தொகையின் தேவையை விட பலநூறு மடங்கு அதிகமாகத்தான் உற்பத்தியாகிறது.

இந்தியாவில் 2010-2011ம் பயிர் பருவத்தில் நெல், கோதுமை ஆகிய உணவு தானியங்களின் கையிருப்பு நிர்ணயிக்கப்பட்ட அளவை விட இரண்டு மடங்கு அதிகம் உள்ளது. என இந்திய உணவுக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

இது ஒருபுறம் என்றால், மறுபுறம் பட்டினிச்சாவின் பட்டியலும் வாசிக்கப்படத்தான் செய்கிறது.

இவ்விரண்டையும் ஒப்பு நோக்கினால் பட்டினிச்சாவுக்கும், பற்றாக்குறைக்கும் பங்கீட்டு முறையில் உள்ள கோளாறு தான் முக்கியக் காரணம் என்பது தெளிவாகப் புரியும்.

**இணை வைப்பவர் அறுத்ததை சாப்பிடலாமா?**

அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்கும் ஒருவர் பிஸ்மில்லாஹ் கூறி அறுத்துத் தந்தால் அதை நாம் சாப்பிடக்கூடாது.

ஏனெனில் பிஸ்மில்லாஹ் கூறுதல் என்றால் அல்லாஹ்வை உள்ளத்தால் நம்பி நாவால் மொழிய வேண்டும்.

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்பதை அறிந்து கொள்வீராக!

அல்குர் ஆன் 47:19

சொல்வதற்கு முன்பு அறிதல் அவசியம் என்கிறது இவ்வசனம். வெறும் வாய் வார்த்தையாக அல்லாஹ்வைப் பற்றி கூறுவதை இறைவன் ஏற்றுக் கொள்ளமாட்டான்.

பிஸ்மில்லாஹ் என்பதை உளப்பூர்வமாக நம்பி சொல்ல வேண்டும். அந்த நம்பிக்கையை வெளிப்படையான செயல்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

ஓரிறைக் கொள்கைக்கு எதிரான இணை கற்பிக்கும் காரியத்தை வெளிப்படையாகச் செய்யும் ஒருவர் தன்னை அல்லாஹ்வை நம்பியிருக்கும் முஸ்லிம் என அறிவித்துக் கொண்டாலும் இவர் கூறும் பிஸ்மில்லாஹ் பொருள் புரியாமல் சொல்லப்பட்ட வெறும் வாய் வார்ததையாகத் தான் இருக்கும்..

ஏனெனில் லாயிலாஹ இல்லல்லாஹ்வை கூறும் ஒருவர் அதற்கு எதிரானவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும். அப்போது தான் அதைப் புரிந்து ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம்.

யார் அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுவற்றை நிராகரித்து விட்டு லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுகிறாரோ அவருடைய உயிரும், உடமையும் புனிதமானதாகும். அவரைப் பற்றிய விசாரணை அல்லாஹ்விடம் உள்ளது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பாளர் : தாரிக் பின் அஷ்ரிம் (ரழி) நூல் : முஸ்லீம் : 34 அஹ்மது : 15313, 25954.*

லாயிலாஹ இல்லல்லாஹ்வை கூறிவிட்டு வாழ்வில் அதற்கு முரண்பட்டால் அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுபவற்றை அவர் நிராகரிக்கவில்லை. எனவே, அவர் நாவால் கலிமா சொன்னாலும் சொல்லவில்லை என்று தான் அர்த்தம்.

தர்ஹாவுக்குச் செல்லுதல், அவ்லியாக்களிடம் பிரார்த்தித்தல், தாயத்து தகடுகளை தொங்கவிடுதல் போன்ற



ஷிர்க்கான காரியங்களில் ஈடுபடும் ஒருவர் பிஸ்மில்லாஹ் கூறி அறுத்துத் தந்தால் அது பிஸ்மி சொல்லப்படாதது என்று கூறி அதைப் புறக்கணித்து விட வேண்டும்.

**பொதுவானவை**

**குழந்தையின் முதல் உணவு**

குழந்தைக்காக இறைவனால் வழங்கப்படும் தன்னிகரற்ற கலப்படம் ஏதுமற்ற உணவு தாய்ப்பாலாகும்.

தாய்ப்பால் அருந்துவது குழந்தையின் பிறப்புரிமை.ஆனால் சில தாய்மார்கள் இவ்வுரிமையை குழந்தைகளிடமிருந்து தட்டிப் பறித்து விடுகின்றனர்

தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு முழுமையாக இரண்டு ஆண்டுகள் பாலூட்ட வேண்டும். *அல்குர்ஆன்: 2:233*

மனிதனுக்கு அவனது பெற்றோரைக் குறித்து வலியுறுத்தியுள்ளோம். அவனை அவனது தாய் பலவீனத்திற்கு மேல் பலவீனப்பட்டவளாகச் சுமந்தாள்.

அவன் (மனிதன்) பாலருந்தும் பருவம் இரண்டு ஆண்டுகள். எனக்கும், உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக. என்னிடமே திரும்பி வருதல் உண்டு. *(அல்குர்ஆன்: 31:14)*

கணவன் மனைவிக்கிடையில் பிரச்சனை ஏற்பட்டு பிரிந்து செல்லும் நிலை ஏற்பட்டாலும் குழந்தைக்கு பாலூட்டுதல் மட்டும் தடைபடக் கூடாது என்கிறான் இறைவன். அதற்கு கூலி கொடுத்தேனும் பாலூட்டச் செய்யுங்கள் ஒருவேளை அதற்கு அறவே வாய்ப்பில்லாத போது செவிலித் தாயை ஏற்பாடு செய்தாவது பால் கொடுத்து விடுங்கள் எனக் கட்டளையிடுகிறான்.

உங்களுக்காக அவர்கள் பாலூட்டினால் அவர்களுக்குரிய கூலிகளை அவர்களுக்கு வழங்கி விடுங்கள்.

உங்களுக்கிடையில் நல்ல முறையில் (இதுபற்றி) முடிவு செய்து கொள்ளுங்கள். ஒருவருக்கொருவர் (இதைச்) சிரமமாகக் கருதினால் அவருக்காக இன்னொருத்தி பாலூட்டட்டும்.

*அல்குர்ஆன் 65 : 6*

போதுமான அளவு பால் சுரக்கவில்லை என்பதெல்லாம் வெறும் கற்பனை தான். ஒவ்வொரு தாயிடமும் அவளது குழந்தைக்குத் தேவையான அளவு பால் சுரக்கிறது. பால் கொடுப்பது குறையும் போது தான் அதன் சுரப்பும் குறையும்.

பால் கொடுப்பதால் உடலின் அழகு குறைந்து போகும் என சிலர் எண்ணுகின்றனர் உடலின் வனப்பும், வசீகரமும், ஆரோக்கியமும் பால் கொடுப்பதால் மேம்படுமே தவிர குறைவதில்லை என பல்வேறு ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தாய்ப்பாலூட்டுவது குழந்தை, பிறந்த பல மாதங்களுக்கு மீண்டும் கருவுறாமல் தடுக்கும் இயற்கையான, பாதுகாப்பான இடையூறு ஏதுமில்லாத கருத்தடை சாதனம் என்கின்றனர் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள்.

பெரும்பாலும் பால் கொடுப்பதை தவிர்ப்பவர்களில் பலர் குழந்தையின் பசி போக்குவதற்குத் தானே பால் கொடுக்கிறோம் அந்தப் பசியை எப்படி போக்கினால் என்ன? என நினைக்கின்றனர்.

உண்மையில் தாய்ப் பாலூட்டுவது பசிபோக்குவதைத் தாண்டி ஏராளமான பயன்களை குழந்தைக்கு வழங்குகிறது.

அக்குழந்தை பாலருந்தும் நிமிடம் முதல் பல்லாண்டுகள் வாழ்ந்து மரணிக்கும் கடைசி நிமிடம் வரை உடலுக்கு தேவைப்படும் அனைத்து வகை ஆற்றலும் தாய்ப்பாலில் நிறைந்துள்ளது.



- ❑ முதல் இரண்டு வருடத்தில் வேகமாக வளரும் மூளை மற்றும் நரம்பு மண்டல வளர்ச்சிக்குரிய சத்துக்கள்.
- ❑ 40 வகைப் புற்று நோய் செல்களை அழிக்கும் ஆற்றல்.
- ❑ அந்தச் செல்கள் உடலுக்குள் நுழையும் போதே தடுத்து நிறுத்தும் மூலக்கூறுகள்
- ❑ சிறுசிறு விபத்துகளின் போது எலும்பு முறிவதை தடுத்து நிறுத்தத் தேவையான கால்சியம் சத்துக்கள்.
- ❑ வலிகளைத் தாங்கும் வலிமை, ஆஸ்துமா, நீரிழிவு, செரிமானக் கோளாறு போன்ற நோய்களை எதிர்த்து நிற்கும் நோய் எதிர்ப்பு சக்தி.
- ❑ தேவையற்ற உடல் பருமனை உருக்கிக் கரைக்கும் உயிரணுக்கள்

என எண்ணற்ற நன்மைகளும் மனித வாழ்வின் ஆரோக்கியத்திற்கு உத்தரவாதம் தரும் ஊக்க மருந்துகளும் தாய்ப்பாலில் நிறைந்துள்ளதால் அதைக் குழந்தையின் பிறப்புரிமையாகவே இஸ்லாம் கருதுகிறது.

**நபி (ஸல்) அவர்களின் உணவு:**

உணவின்றி பசியில் வாடுவோருக்கும், உயர்தரமான உணவுகளை அன்றாடம் உண்டு மகிழ்வோருக்கும் ஓர் அருமையான வரலாற்றுப் பாடம் நபி (ஸல்) அவர்கள் உண்ட உணவு.

பசியில் வாடுவோர் நபியவர்களுக்கு எற்பட்ட பட்டினி நிலையை சிந்தித்தால் நமது நிலை அப்படியொன்றும் மோசமில்லை என தன்னிலை உணர்வதற்கும், உயர்தர உணவுகளை உண்டு களிப்போர் இறைவன் வழங்கிய பேற்றுக்கு நன்றி செலுத்திடவும் இது வழி வகுக்கும்.

எங்கள் வீடுகளில் மூன்று மாதங்கள் அடுப்பு பற்ற வைக்கப்படாமலே கழிந்திருக்கிறது என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா(ரழி) கூறினார் என் சிறிய தாயாரே! அப்படியானால் உயிர் வாழ எதை உண்பீர்கள்? என்று நான் கேட்டேன். அதற்கு ஆயிஷா (ரழி) பேரீச்சம் பழமும் தண்ணீரும் எங்கள் உணவாக இருந்தது. சில நேரங்களில் பக்கத்து வீட்டை சேர்ந்த தோழர்கள் கறந்த பாலை அன்பளிப்பாகத் தருவார்கள் அதை அருந்துவோம் என விடையளித்தார்கள்.

*அறிவிப்பவர்: உர்வா (ரழி) நூல்: புகாரி: 2567, 6459, முஸ்லிம் 5282, அஹ்மது: 23422.*

ஹஜ்ஜுப் பெருநாளின் போது கறிக் குழம்பில் மீதமாகக் கிடக்கும் ஆட்டுக் காலை பதினைந்து நாட்களுக்குப் பிறகு எடுத்து வைப்போம். அதை நபியவர்கள் சாப்பிடுவார்கள் என ஆயிஷா(ரழி) கூறினார்கள். இதற்கு என்ன அவசியம் நேர்ந்தது? என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. அவர்கள் சிரித்து விட்டு குழம்புடன் கூடிய ரொட்டியை நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினராகிய நாங்கள் மூன்று நாட்கள் வயிறார உண்டதில்லையே! என பதிலளித்தார்கள்.

*அறிவிப்பவர்: ஆபிஸ் பின் ரபீஆ (ரஹ்) நூல்: புகாரி 5438, நஸாயீ:4356, இப்னுமாஜா: 3304 அஹ்மது: 23814, 24364.*

நபி (ஸல்) அவர்கள் பசியோடு இருந்ததை அறிந்து எனது வீட்டிலிருந்து கோதுமை ரொட்டியையும், வாசனை கெட்ட கொழுப்பையும் கொண்டு சென்றேன். நபி (ஸல்) அவர்கள் தமது கவசத்தை மதீனாவில் உள்ள யூதரிடம் அடமானமாக வைத்து தமது குடும்பத்தாருக்காகத் தீட்டபடாத கோதுமையை வாங்கியிருந்தார்கள். அவர்களின் வீட்டில் ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு மரக்கால் கோதுமையோ அல்லது வேறு ஏதேனும் தானியமோ இருந்ததில்லை.

*அறிவிப்பவர்: அனஸ் (ரழி) நூல்: புகாரி 2069, 2508, திர்மிதி: 1136, நஸாயீ: 4531, அஹ்மது: 11910, 12692, 12954, 13010.*



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது குடும்பத்தினரிடம் குழம்பு ஏதும் உள்ளதா? எனக் கேட்டார்கள். வினிகரை (சமையல் காடி)த் தவிர ஏதுமில்லை என்று குடும்பத்தினர் கூறினார்கள். அதைக் கொண்டு வரச் செய்து அதைத் தொட்டு சாப்பிட்டார்கள். வினிகர் சிறந்த குழம்பாக உள்ளதே என இருமுறை கூறினார்கள்.

*அறிவிப்பவர்: ஜாபிர் (ரழி)நூல்: முஸ்லிம்: 3824, 3825, 3826. திர்மிதி: 1762, 1765, அபுதாவூது: 3325, இப்னுமாஜா: 3308, அஹ்மது: 13708, 13742, 14397, 14457, 14527, 14653, 14658, 14755*

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் (வீட்டை விட்டு) வெளியே வந்தார்கள். அங்கே அபூபக்கர்(ரழி) உமர் (ரழி) ஆகியோரைக் கண்டார்கள். இந்த நேரத்தில் வீட்டை விட்டு வெளியே வரக் காரணம் என்ன? என்று அவர்களிடம் நபி (ஸல்) கேட்டார்கள், அதற்கு அவ்விருவரும் அல்லாஹ்வின் தூதரே பசி என்றனர் என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக உங்களிருவரையும் எது வெளியேற்றியதோ அது தான் என்னையும் வெளியேற்றியது என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம்: 3799, திர்மிதி: 2292*

ஸஹ்ல் பின் ஸஃது (ரழி) அவர்களிடம் தோல் நீக்கப்பட்ட கோதுமையில் தயாரான ரொட்டியை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சாப்பிட்டதுண்டா? எனக் கேட்டேன். அவர்களை இறைவன் தன் தூதராக்கியது முதல் அவர்கள் மரணிக்கும் வரை சலிக்கப்பட்ட மாவினாலான ரொட்டியை சாப்பிட்டதேயில்லை என்றார்கள்.

ரசூல் (ஸல்) அவர்கள் அவர்கள் காலத்தில் உங்களிடம் சல்லடைகள் இருந்தனவா? எனக் கேட்டேன். நபியவர்களை அல்லாஹ் தன் தூதராக அனுப்பியது முதல் அவர்களை கைப்பற்றி கொள்ளும் வரை சல்லடையைப் பார்த்ததேயில்லை என்றார்கள்.

தோல் நீக்கப்படாத கோதுமை மாவை சலிக்காமல் எப்படிச் சாப்பிடுவீர்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர்கள் தீட்டப்படாத கோதுமையை திருகையில் அரைப்போம். பின்னர்(வாயால்) ஊதுவோம் உமிகள் பறந்து விடும் எஞ்சியதைத் தண்ணீரில் குழைத்து சாப்பிடுவோம் என்று பதிலளித்தார்கள்.

*அறிவிப்பவர்: அபூஹாஸிம் (ரஹ்) நூல்: புகாரி: 5413, 5410, திர்மிதி: 2287, இப்னுமாஜா: 3326, அஹ்மது: 2178.*

**பரகத் நிறைந்த உணவு**

பரகத் என்பதை அபிவிருத்தி என தமிழில் மொழி பெயர்க்கிறோம். உண்மையில் அதன் பொருளை ஒற்றை வார்த்தையில் மொழி பெயர்ப்பது சற்று கடினமே.

ஒரு பொருளிலிருந்து இயற்கையாக அடையும் பயனை விட அதிக அளவு பலன் கிடைத்தால் அது இறையருளால் நடந்ததாகும்.இந்த மறைமுக இறையருளுக்குத் தான் பரகத் என்று சொல்லப்படுகிறது.

ஒரு மணி நேரத்தில் எல்லோரும் செய்யும் வேலையை விட பத்து மடங்கு வேலையை ஒருவர் செய்தால் அந்த நேரத்தை பரகத் நிறைந்த நேரம் என்று கூறலாம்.

இருவருக்கு மட்டுமே போதுமானது என நாம் கருதுகிற உணவை நான்கைந்து பேர் சாப்பிட்டு வயிறு நிறைந்தால் அதை பரகத் நிறைந்த உணவு என்று கூறலாம்.

நம்மிடம் உணவு குறைவாக இருந்தாலும் நிறைவாக வாழ முடியும் அதில் பரகத் இருந்தால். அதனால் தான் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் எதைக் கேட்டாலும் அதில் பரக்கத்தையும் சேர்த்துக் கேட்பார்கள்.

என் தந்தை நபி (ஸல்) அவர்களின் வாகனக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு எங்களுக்காக பிரார்த்தனை செய்யுங்கள்



என்று கேட்டார்கள். உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறைவா! இவர்களுக்கு நீ வழங்கியதில் பரகத் செய்வாயாக! இவர்களை மன்னித்து அருள் புரிவாயாக! (என்று பிரார்த்தித்தார்கள்)

*அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு புஸ்ர் (ரழி) நூல்: முஸ்லிம்: 3805, திர்மிதி: 3500, அபூதாவூது: 3241, அஹ்மது: 17013, 17015, 17035.*

அபூதல்ஹா (ரழி) அவர்கள் தமது வீட்டில் நபி (ஸல்) அவர்களுக்கு உணவளிப்பதற்காக உணவு தயாரித்து வைத்துக்கொண்டு நபியவர்களை அழைத்து வரச் சொன்னார்கள்.

நபியவர்களோ தம்முடனிருந்த தோழர்களையும் அழைத்துக் கொண்டு வந்து விட்டார்கள். இத்தனை பேர் வந்துவிட்டார்களே உணவுக்கு என்ன செய்வது? என அபூதல்ஹாவும், அவரது மனைவியும் கவலை கொள்ள வீட்டிற்குள் அனுமதி கேட்டு உள்ளே நுழைந்த நபி (ஸல்) அவர்கள் இருக்கிற உணவை எடுத்து வைக்கச் சென்னார்கள். அதன் மீது கைவைத்து பரகத்திற்காக துஆச் செய்தார்கள்.

பின்பு வந்திருந்த தோழர்களைப் பத்துப் பத்துப் பேராக உள்ளே அழைத்து பிஸ்மில்லாஹ் கூறி சாப்பிடுமாறு கட்டளையிட்டார்கள். வந்திருந்த எழுபது எண்பது பேரும் வயிறு நிரம்ப சாப்பிட்டார்கள், நபியவர்களும் சாப்பிட்டார்கள். மீதமிருந்ததை வீட்டிலிருந்தோரும் சாப்பிட்டு முடித்தார்கள்.

ஹதீஸின் சுருக்கம் அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரழி)நூல்: முஸ்லிம்: 3802, 3801, புகாரி: 3578, 5381, 5450, 6688, திர்மிதி: 3563, அஹ்மது: 1280, 12946, 13058.

இந்த நிகழ்ச்சியில் நபி (ஸல்) அவர்கள் பரகத்திற்காக பிரார்த்தனை செய்கிறார்கள். உடனடியாக அந்த இறையற்புதத்தைக் கண்டு அனுபவிக்கவும் செய்கிறார்கள்.

**உணவில் பரகத்தை பெறும் வழிகள்:**

நமது உணவை பரகத் நிறைந்ததாக ஆக்கிக் கொள்வதற்கு கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகளை நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள். நம்பிக்கையோடு அவற்றை கடைபிடித்தால் நமது உணவும், இறையருள் நிறைந்ததாக மாறிப் போகும்.

1. அளந்து சமைக்க வேண்டும்:

உங்கள் உணவை (தேவைக்கேற்ப) அளந்து கொள்ளுங்கள். உங்களுக்கு பரகத் செய்யப்படும்.

*அறிவிப்பாளர்: மிக்தாம் (ரழி) நூல்: புகாரி: 2128, அஹ்மது: 16548.*

2. நடுவில் உள்ளதை சாப்பிடக் கூடாது:

உணவின் நடுப்பகுதியில் பரகத் இறங்குகிறது. எனவே அதன் ஓரத்திலிருந்து சாப்பிடுங்கள். நடுவிலிருந்து சாப்பிடாதீர்கள்.

*அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரழி) நூல்: திர்மிதி: 1727, அபூதாவூது: 3280, இப்னு மாஜா: 3268, 3045, 3261, 17018.*

3. பிஸ்மில்லாஹ் கூற வேண்டும்:

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தோழர்கள் ஆறு பேருடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கே வந்த கிராமவாசி ஒருவர் அதிலிருந்து இரண்டு கவள உணவைச் சாப்பிட்டார்.

இவர் பிஸ்மில்லாஹ் கூறியிருந்தால் ஒரு கவளமே இவருக்குப் போதுமானதாக இருந்திருக்கும் என நபியவர்கள் கூறினார்கள். *அறிவிப்பாளர் ஆயிஷா(ரழிநூல்: திர்மிதி: 1781, இப்னு மாஜா: 3255, அஹ்மது: 23954, 24895, 25089.*

4. மீதமின்றிச் சாப்பிட வேண்டும்:

விரல்களை சூப்பியும், தட்டையை வழித்தும் சாப்பிடுங்கள். ஏனெனில் எதில் பரகத் இருக்கிறது என்பதை நீங்கள் அறிய



மாட்டீர்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பாளர்: ஜாபிர் (ரழி) நூல்: முஸ்லிம்: 3792, , 3793, 3794, இப்னு மாஜா: 3261, அஹ்மது: 13705, 14025, 14101, 14410, 14689.*

5. பகிர்ந்து உண்ண வேண்டும்:

ஒருவர் உணவு இருவருக்குப் போதுமானதாகும். இருவர் உணவு நால்வருக்குப் போதுமானதாகும். நால்வரின் உணவு எட்டு பேருக்குப் போதுமானதாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பாளர்: ஜாபிர் (ரழி) நூல்: முஸ்லிம்: 3836, 3837, 3838, இப்னு மாஜா: 3245, அஹ்மது: 13706, 13870, 14572*

**பசித்தோருக்கு உணவளித்தல்:**

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் இஸ்லாத்தில் சிறந்தது எது? என்று கேட்டார். அதற்கு பசித்தோருக்கு உணவளிப்பதும், நீ அறிந்தவருக்கும், அறியாதவருக்கும் ஸலாம் கூறுவதும் ஆகும் என பதில் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) நூல்: புகாரி: 12, 28, 6236 முஸ்லிம்: 56, திர்மிதி: 1778 நஸாயீ: 4914, அபூதாவூது: 4520, இப்னு மாஜா: 3244 அஹ்மது: 6293.*

கியாமத் நாளில் அல்லாஹ் (ஒரு மனிதனை அழைத்து) ஆதமின் மகனே உன்னிடத்தில் பசியுடன் வந்த எனக்கு நீ உணவளிக்கவில்லையே (எனக் கேட்பான்) என் இறைவா அகிலத்தின் அதிபதியாகிய உனக்கு நான் எப்படி உணவளிக்க முடியும்? என்பான் அதற்கு அல்லாஹ் என்னுடைய இன்ன அடியான் உன்னிடம் பசியுடன் வந்தான். அவனுக்கு நீ உணவளிக்கவில்லை. அவனுக்கு கொடுத்திருந்தால் அதன் பலனை என்னிடம் அடைந்திருப்பாய் என்று இறைவன் கூறுவான் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூல்: முஸ்லிம்: 4661, அஹ்மது: 8874.*

அல்லாஹ் உங்களுக்கு வழங்கியதிலிருந்து (நல் வழியில்) செலவிடுங்கள் என்று அவர்களிடம் கூறப்படும் போது நாங்கள் உணவளிக்க வேண்டுமா? அல்லாஹ் நாடியிருந்தால் அவனே அவர்களுக்கு உணவளித்திருப்பானே! தெளிவான வழிகேட்டிலேயே நீங்கள் இருக்கிறீர்கள் என்று (ஏக இறைவனை) மறுப்போர் நம்பிக்கை கொண்டோரிடம் கூறுகின்றனர். *அல்குர்ஆன்: 36:47)*

அவனைப் பிடியுங்கள் அவனுக்கு விலங்கு மாட்டுங்கள். பின்னர் நரகில் கருகச் செய்யுங்கள். பின்னர்எழுபது முழச் சங்கிலியால் அவனைப் பிணையுங்கள். (ஏனெனில்) அவன் மகத்தான அல்லாஹ்வை நம்பவில்லை. ஏழைக்கு உணவளிக்கத் தூண்டவும் இல்லை. இன்று இங்கே அவனுக்கு உற்ற நண்பன் யாரும் இல்லை.

*அல்குர்ஆன்: 69:30-3*

சொர்க்கச்சோலைகளில் இருப்போர் குற்றவாளிகளிடம் உங்களை நரகில் சேர்த்தது எது? என்று விசாரிப்பார்கள். நாங்கள் தொழுவோராகவும், ஏழைக்கு உணவளிப்போரகவும் இருக்கவில்லை (வீணில்) மூழ்கியோருடன் மூழ்கிக் கிடந்தோம். எங்களுக்கு மரணம் வரும் வரை தீர்ப்பு நாளைப் பொய்யெனக் கருதி வந்தோம் என்று (பதில்) கூறுவார்கள்.

*அல்குர்ஆன்: 74:40-47*

(சொர்க்கத்திற்குரியோர்) அவனை நேசித்ததற்காக ஏழைக்கும், அனாதைக்கும், சிறைப்பட்டோருக்கும் உணவளிப்பார்கள். அல்லாஹ்வின் திருப்திக்காகவே உங்களுக்கு உணவளிக்கிறோம். உங்களிடமிருந்து பிரதி பலனையோ, நன்றியையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எங்கள் இறைவனிடமிருந்து கடுமையும், நெருக்கடியும் நிறைந்த நாளை நாங்கள் அஞ்சுகிறோம் (என்று கூறுவார்கள்).

*அல்குர்ஆன்: 76:8-10*



தீர்ப்பு நாளைப் பொய்யெனக் கருதியவனை நீர் பார்த்தீரா? அவன் அனாதையை விரட்டுகிறான், ஏழைக்கு உணவளிக்க தூண்டுவதில்லை. *அல்குர்ஆன்: 107:1,2,3*

(சொர்க்கம் செல்வதற்கு இடையில் உள்ள கணவாயை அவன் கடக்கவில்லை) கணவாய் என்பது என்னவென்று உமக்கு எப்படித் தெரியும்? அடிமையை விடுதலை செய்தல், நெருங்கிய உறவுடைய அனாதைக்கும் வறுமையில் உழலும் ஏழைக்கும் பட்டினி காலத்தில் உணவளித்தல், பின்னர் நம்பிக்கை கொண்டு பொறுமையைப் போதித்து இரக்கத்தையும் போதித்தோரில் இணைதல் (இவைகளே கணவாயாகும்). *அல்குர்ஆன்: 90:11-17*

### யாசித்து உண்ணுதல்

பிறரிடம் யாசித்து உண்பதை இஸ்லாம் அருவருப்பாகக் கருதுகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாமியக் கோட்பாடுகளை தம் தோழர்களிடம் எடுத்துச் சொல்லி அதைப் பின்பற்றி நடக்க வேண்டும் என உறுதி மொழி (பைஅத்) எடுத்த போது யாசிக்கக் கூடாது என்பதையும் அதில் ஒன்றாக சேர்த்துக் கொள்வார்கள்.

அல்லாஹ்வையே வணங்க வேண்டும். அவனுக்கு எதையும் இணையாக்கக் கூடாது (தினமும்) 5 வேளைத் தொழ வேண்டும். கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று கூறிவிட்டு சற்று குரலைத் தாழ்த்தி மனிதர்களிடம் எதையும் யாசித்துப் பெறக்கூடாது என்பதையும் சேர்த்துக் கூறி உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

*அறிவிப்பவர்: அவ்்.ப் பின் மாலிக் (ரழி)நூல்: முஸ்லிம்: 1729, நஸாயீ: 456, அபூதாவூது: 1399, இப்னுமாஜா: 2858, அஹ்மது : 22868.*

மனிதர்களிடம் எதையும் யாசித்துப் பெறமாட்டேன் என்று என்னிடம் உறுதியளிப்பவர் சுவனம் செல்வதற்கு நான் பொறுப்பேற்கிறேன் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்)

அவர்கள் கூறினார்கள். உடனே ஸவ்பான் (ரழி) நான் (உறுதியளிக்கிறேன்) என்றார். அதன் பின் யாரிடமும் எதையும் கேட்காதவராகவே அவர் ஆகிவிட்டார்.

*அறிவிப்பவர்: ஸவ்பான் (ரழி) நூல் அபூதாவூது: 1400 இப்னுமாஜா: 1827.*

மனிதர்களிடம் யாசிப்பவன் கியாமத் நாளில் முகத்தில் சதையில்லாமல் (எலும்பும் தோலுமாக) வருவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி)நூல்: புகாரி: 1475, முஸ்லிம்: 1724, 1725, நஸாயீ: 2538, அஹ்மது: 4409, 5359.*

ஓரிரு கவள உணவுக்காக அலைபவன் ஏழை இல்லை. மாறாக தன் வாழ்வுக்கு போதிய செல்வம் இல்லாவிடினும் பிறரிடம் கேட்க வெட்கப்படுகிறவனும், அல்லது (அப்படிக் கேட்டாலும்) கெஞ்சிக் குழைந்து கேட்காதவனுமே ஏழையாவான் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூல்: புகாரி: 1476, 1479, முஸ்லிம்: 1722, 1723, நஸயீ: 2524, 2525, 2526, அபூதாவூது: 1390, அஹ்மது: 7225, 7840, 8748, 8779, 9370, 9422, 9510, 9687.*

ஒருவர் பிறரிடம் கையேந்துவதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதைப் போல தனது வாரிசுகளுக்கும் அது போன்ற நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும்.

மரணத் தருவாயில் இருந்த ஸஃது இப்னு அபீவக்காஸ் (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் சந்திக்கச் சென்றார்கள். அவர்களிடம் ஒரேயொரு பெண் மகளை தவிர சந்ததிகள் ஏதுமற்ற நான் என் சொத்தில் மூன்றில் இரண்டு பங்கை தர்மம் செய்திடட்டுமா? என ஸஃது (ரழி) கேட்டார்கள். நபியவர்கள் அதற்கு மறுப்பு தெரிவிக்கவே சொத்தின் பாதியைக் கொடுக்க அனுமதி கேட்டார்கள். அதுவும் கூடாது என்று சொல்லவும் மூன்றில் ஒரு பங்கிற்கு அனுமதி



கேட்டார்கள் அதற்கு அனுமதி கொடுத்த நபி (ஸல்) அவர்கள் அவருக்கு ஓர் உபதேசம் செய்தார்கள்.

நீ உன் வாரிசுகளை மக்களிடம் கையேந்தும் ஏழைகளாக விட்டுச் செல்வதை விட தன்னிறைவு பெற்ற செல்வந்தர்களாக விட்டுச் செல்வது சிறந்ததாகும்.

*அறிவிப்பவர்: ஸஃது இப்னு அபீவக்காஸ் (ரழி) நூல்: 1296, 2742, 3936, 4409, 5354, 5668, 6733 முஸ்லிம்: 3076, 3079, திர்மிதி: 2042, நஸயீ: 3567, 3568, 3569, 3570, அபூதாவூது: 2480, அஹ்மது: 1363, 1442, 1464, 1513.*

இருப்பது போதும் என நினைப்பதும் எந்தவொரு நிலையிலும் யாசிக்கமாட்டேன் என உறுதியேற்பதும் யாசிப்பதிலிருந்து நம்மைப் பாதுகாக்கும்.

யாசிப்பது தான் நம் தேவையை நிறைவேற்றுவதற்குரிய வழி என ஒருவர் முடிவெடுத்து விட்டால் அவர் யாசிப்பதற்குரிய வாசலை அல்லாஹ் திறந்து விட்டு விடுவான்.

யாசகம் கேட்காமல் என் தேவை நிறைவேறுவதற்குரிய ஹலாலான வழியை அல்லாஹ் காட்டுவான் என நல்லெண்ணம் கொண்டு அதற்காக முயற்சித்தால் அதற்குரிய வழியை அல்லாஹ் எளிதாக்குவான்.

அல்லாஹ்வை குறித்து நாம் எவ்வாறு எண்ணுகிறமோ அவ்வாறே அல்லாஹ் நம்மிடம் நடந்து கொள்வான்.

யார் சுயமரியாதையைப் பேணிக் கொள்கிறாரோ அவரை அல்லாஹ் சுயமரியாதையோடு வாழச் செய்வான். யார் பிறர் (செல்வத்தில்) தேவையற்றவராக இருக்கிறாரோ அவரை அல்லாஹ் தன்னிறைவு பெற்றவராக ஆக்குகிறான். யார் பொறுமையை மேற்கொள்ள முயற்சிக்கிறாரோ அவரை அல்லாஹ் பொறுமையாளராக ஆக்குவான். மேலும் பொறுமையை விடச் சிறந்த விசாலமான அருட்கொடை

எவருக்கும் கொடுக்கப்படவில்லை என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: அபூ ஸயீதுல் குத்ரி (ரழி) நூல்: புகாரி: 1469, 6470, முஸ்லிம்: 1745, திர்மிதி: 1947, நஸாயீ: 2541, அபூதாவூது : 1401, அஹ்மது: 10566, 10582, 10669, 10973, 11011, 11456.*

நீங்கள் அல்லாஹ்வின் மீது முழுமையாக நம்பிக்கை வைத்தால் பறவை உணவளிக்களிக்கப்படுவதைப் போல் நீங்களும் உணவளிக்கப்படுவீர்கள். அவைகள் காலையில் பசியுடன் செல்கின்றன. மாலையில் நிரம்பிய வயிறுடன் திரும்புகின்றன என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : உமர் பின் கத்தாப் (ரழி) நூல்: திர்மிதி: 2266.*

**உழைத்து உண்ணுதல்:**

ஒருவர் தமது கையால் உழைத்து உண்பதை விடச் சிறந்த உணவை ஒரு போதும் உண்ண முடியாது. நபி தாவூது (அலை) அவர்கள் தமது கையால் உழைத்து உண்பவர்களாகவே இருந்தார்கள் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: மிக்தாம் (ரழி) நூல்: புகாரி: 2071, அஹ்மது: 16560.*

உங்களில் ஒருவர் ஒரு கயிற்றை எடுத்துக் கொண்டு தமது முதுகில் விறகுக் கட்டைச் சுமந்து விற்று வாழ்வது மக்களிடம் யாசகம் கேட்பதை விடச் சிறந்ததாகும். இதன் மூலம் அல்லாஹ் அவருக்கு இழிவு ஏற்படாமல் தடுத்து விடுவான். (யாசித்தல்) மக்கள் அவருக்கு கொடுக்கவும் செய்யலாம் மறுக்கவும் செய்யலாம் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: ஜுபைர் பின் அவ்வாம் (ரழி)நூல்: புகாரி: 1471, 1470, 2373. இப்னு மாஜா: 1826, அஹ்மது: 1333, 1354.*

இறைத் தூதர்கள் அனைவரும் உழைத்துத்தான் பொருளீட்டியிருக்கிறார்கள் அல்லாஹ் அனுப்பிய எந்த நபியும்



ஆடு மேய்க்காமல் இருந்ததில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்படியானால் நீங்கள்? எனத் தோழர்கள் கேட்டனர்

அதற்கு ஆம் நானும் சில சில்லறைக் காசுக்காக மக்காவில் ஆடு மேய்த்துள்ளேன் என பதிலளித்தார்கள்.

*அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூல்: புகாரி: 2262, இப்னு மாஜா: 2140.*

**பச்சை வெங்காயமா? பள்ளிக்கு வர வேண்டாம்.**

சமைக்கப்படாத வெள்ளைப் பூண்டு, வெங்காயம், சீமைப் பூண்டு போன்ற துர்வாடையுள்ள பொருட்களை சாப்பிட்டவர் அதன் வாடை நீங்கும் வரை பள்ளிக்குச் செல்லலாகாது.

இந்த(ப்பூண்டுச்) செடியிலிருந்து விளைகின்றதைச் சாப்பிட்டவர் நமது பள்ளிவாசலை நெருங்கவோ, பூண்டின் வாடையால் நமக்கு தொல்லை தரவோ வேண்டாம் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்..

*அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூல்: முஸ்லிம்: 873, இப்னுமாஜா: 1005, புகாரி: 854, திர்மிதி: 1728, அஹ்மது: 7267, 7292, 9178, 14538.*

ஆதமின் மக்கள் எதில் வேதனை அடைகின்றனரோ அதில் மலக்குகளும் வேதனையடைகிறார்கள் (எனவே துர்வாடையுடன் தொழுகைக்கு வரவேண்டாம்) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி) நூல்: முஸ்லிம்: 876, 874, நஸயீ: 700, அஹ்மது: 14483, 14626.*

இந்த வாடை தரும் செடியிலிருந்து சாப்பிட்டவர் தொழுமிடத்தில் நமக்கருகே நெருங்க வேண்டாம் என நபியவர்கள் கூறியதும் மக்கள் வெள்ளைப்பூண்டு தடை செய்யப்பட்டு விட்டது. தடை செய்ய்பட்டு விட்டது என்று கூற ஆரம்பித்து விட்டனர் . விஷயம் நபி (ஸல்) அவர்களுக்கு எட்டிய போது மக்களே அல்லாஹ் அனுமதித்த ஒன்றைத்

தடை செய்யும் உரிமை எனக்கு இல்லை. இருப்பினும் அந்தச் செடியின் துர்வாடையை நான் வெறுக்கிறேன் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் அபூ ஸயீத் (ரழி) நூல்: அபூதாவூது: *3327*, முஸ்லிம்: *877* அஹ்மது: *10662*, *11154*.

அனுமதிக்கப்பட்ட பொருளாக இருந்தாலும் அதன் கெட்ட வாடையுடன் பள்ளிக்கு வரக்கூடாது என்றால் அனுமதிக்கப்படாத பீடி, சிகரெட் போன்ற கேடு விளைவிக்கும் பொருட்களின் நாற்றத்தோடு தொழுகையின் வரிசையில் வந்து நிற்கலாமா? அதன் மூலம் மலக்குகளுக்கும், மனிதர்களுக்கும் குமட்டலை ஏற்படுத்தலாமா? என்பதை சம்பந்தப்பட்டோர் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**சமைத்தவருடன் சேர்ந்து சாப்பிடுதல்**

உங்களில் ஒருவருக்கு அவரது பணியாளர் உணவு சமைத்து வந்து சாப்பிடக் கொடுத்தால் அவரையும் தன்னுடன் அமரச் செய்து சாப்பிட வைக்கட்டும். உணவு குறைவாக இருந்தால் ஓரிரு கவள உணவையாவது அவர் கையில் கொடுத்து சாப்பிடச் சொல்லட்டும். ஏனெனில் அதை சமைப்பதற்காக அவர் தானே நெருப்புச் சூட்டில் கஷ்டப்பட்டார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல்: முஸ்லிம்: *3142*, புகாரி: *2557*, திர்மிதி: *1776* இப்னுமாஜா : *3280*, *3281*, அஹ்மது : *7201*, *7401*, *7472*, *7640*

ஊதியம் பெற்று சமைத்துப் போடும் வேலைக்காரர் தானே என்று சிலர்சமைப்பவர்களை உதாசீனப்படுத்தி விடுகின்றனர் .அவர்கள் நபியவர்களின் கூற்றுப்படி நெருப்பின் உஷ்ணத்தை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பணியாளர்களிடமே கடைபிடிக்க வேண்டிய இந்த பண்பாடு. பல வீடுகளில் மனைவிமார்களுக்குக் கூட்த் தரப்படுவதில்லை ஆண்கள் சாப்பிட்டு முடித்தபின் மீதமிருந்தால் அவர்கள்



சாப்பிட வேண்டும். இல்லையெனில் தண்ணீரைக் குடித்துவிட்டு ஒட்டிய வயிறோடு பட்டினி கிடக்க வேண்டும்.இதுவே பல குடும்பங்களின் நிலையாகும்.

பல நேரங்களில் குடும்ப வாழ்வின் விரிசல்களுக்கு இதுபோன்ற பக்குவமற்ற நடத்தையே காரணமாக அமைந்து விடுவதும் உண்டு. அதனால், தான் கணவன், மனைவி சேர்ந்து சாப்பிடுவதை நபியவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்

அல்லாஹ்வின் தூதரே எங்கள் மனைவியருக்கு நாங்கள் செய்ய வேண்டிய கடமை என்ன? என்று கேட்டேன். அதற்கு நீ உண்ணும் போது அவளை உண்ணச் செய்ய வேண்டும். நீ உடுத்தும் போது அவளுக்கு உடுத்தக் கொடுக்க வேண்டும். முகத்தில் அடிக்கக் கூடாது. வீட்டில் தவிர (வெளியில்) அவளை வெறுக்கக் கூடாது என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர் : முஆவியா (ரழி) நூல் : அபூதாவூது - *1830*, *1831*, *1832* இப்னுமாஜா - *1840*.

**உணவுத் திருநாள்**

நோன்புப் பெருநாள் மற்றும் ஹஜ்ஜுப் பெருநாள் ஆகிய இரண்டு பெருநாள் தினங்களும் உண்டு பருகி மகிழ்ந்திருக்க வேண்டிய நாட்களாகும்.

அந்தநாளில் அல்லாஹ்விற்காக நோன்பிருக்கிறேன் என்று கூட பட்டினி கிடக்க அனுமதியில்லை.

இவை (பெருநாள் தினங்கள்) உண்ணுதல், பருகுதலுக்கு உரிய நாட்களாகும். எனவே, அதில் எவரும் நோன்பு நோற்க வேண்டாம் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அலீபின் அபீதாலிப் (ரழி) நூல் : அஹ்மது : *670*, *780*, *783*, *945*.

**கணவன் மனைவி ஊட்டி மகிழ்தல்**

கணவன் மனைவி இருவரும் தமக்கிடையில் உணவை ஊட்டி விட்டுக் கொள்வது இல்லற இன்பத்தையும் மறுமை நன்மையையும் பெற்றுத் தரும் காரியமாகும்.

அல்லாஹ்வின் திருப்தியை நாடி உன் மனைவியின் வாயில் ஊட்டி விடுகிற (உணவு) உட்பட அனைத்து தர்மத்திற்கும் கண்டிப்பாக கூலி வழங்கப்படும் என நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*நூல் : புகாரி : 56, 5354, 5668, 6373, 6733, 1296, 2742 முஸ்லீம் : 3076, திர்மிதி : 2042, அபூதாவூது : 2480, அஹ்மது : 1442,1464.*

**முஸ்லிம்களின் வீடுகளுக்குச் சென்றால்........**

முஸ்லீம்களின் வீடு, கடைகளில் சாப்பிட நேர்ந்தால் அவர்கள் பிஸ்மில்லாஹ் கூறி முறையாக அறுத்துள்ளார்களா? என்பதைப் பற்றி ஆராயத் தேவையில்லை. இவ்வாறு அறுத்து தான் உண்ண வேண்டும் என்ற சட்டம் தெரியாமல் இருந்தால்.? என்றெல்லாம் சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை.

அல்லாஹ்வின் தூதரே! புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எங்களுக்கு இறைச்சி உணவைக் கொண்டு வருகிறார்கள். அதில் அல்லாஹ்வின் பெயர்கூறினார்களா? இல்லையா? என்று எங்களுக்குத் தெரியாது. அப்போது நாங்கள் என்ன செய்வது என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் அதன் மீது நீங்கள் பிஸ்மில்லாஹ் கூறி சாப்பிடுங்கள் என்றார்கள்.

*அறிவிப்பாளர் : ஆயிஷா(ரழி)நூல் : புகாரி : 2057, 5507? 7398, நஸயீ : 4360 அபூதாவூது : 2446, இப்னுமாஜா : 3165*

**வீணாகும் உணவுப் பண்டங்கள்**

உண்ணுங்கள், பருகுங்கள், விரயம் செய்யாதீர்கள்.

*அல்குர்ஆன் 7:31*



பல வீடுகளில் தமது எண்ணிக்கைக்கு ஏற்ப அளந்து சமைப்பதில்லை. அதனால், ஏராளமான உணவுப்பொருள் வீணாகிறது. விருந்துகளின் போது சீரழியும் உணவுப் பண்டங்கள் கணக்கிலடங்காதவை.

அதிக வெரைட்டிகளை சமைக்கும் பழக்கமுள்ள குடும்பங்களில் ஒவ்வொரு பதார்த்ததிலும் கொஞ்சம் கொஞ்சம் கை வைத்து விட்டு மீதமுள்ள அனைத்தும் குப்பைத் தொட்டிக்கே.

அருகில் எத்தனையோ ஏழைகள் கால்வயிற்று கஞ்சிக்குக் கூட வழியின்றி பசியில் உழன்று கொண்டிருக்க அவர்களைப் பற்றிக் கொஞ்சம் கூட அக்கறையின்றி இவர்களின் ஆடம்பரத்தாலும், ஆணவத்தாலும் வீணடிக்கப்படுவது உணவுப் பொருள் மட்டுமல்ல போற்றப்பட வேண்டிய மனிதநேயமும் தான்.

செல்வ வளம் கொடுக்கப்பட்டோர் தமது வசதிக்கேற்ப உண்டு மகிழ்ந்து வாழ்வை அனுபவிப்பதில் மார்க்கம் தடையேதும் விதிக்கவில்லை. ஆனால் தானும் பயன்படுத்தாமல் பிறரும் பயன்பெற முடியாமல் வீணாக்கப்படுவதை எங்ஙனம் ஏற்க முடியும்? இது ஷைத்தானிய சிந்தனையின் கொடூர வெளிப்பாடு. இவர்களைப் பற்றி இறைவன் இவ்வாறு கூறுகிறான்.

விரயம் செய்வோர் ஷைத்தான்களின் உடன்பிறப்புகளாக உள்ளனர். ஷைத்தான் தனது இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கிறான்.

*அல்குர் ஆன் - 17:27*

உண்ணும் போது தவறுதலாக கீழே விழுந்து விட்ட உணவைக் கூட அப்படியே விட்டு விடக்கூடாது.என்றும் இயன்றால் சுத்தப்படுத்தியாவது அதைச் சாப்பிட்டு விட

வேண்டும் என்றும் நபியவர்கள் நமக்கு கட்டளையிடுகிறார்கள். ஏனெனில் வீணாகும் உணவுப் பண்டங்கள் ஷைத்தானை கொழுக்க வைக்கும் தீனியாகும் என்கிறார்கள்..

உங்களில் ஒருவரது ஒரு கவள உணவு கீழே விழுந்து விட்டால், அதை அவர் எடுக்கட்டும் அதில் பட்ட அசுத்தத்தை நீக்கட்டும் (பிறகு) அதைச் சாப்பிடட்டும். ஷைத்தானுக்காக அதை விட்டு விட வேண்டாம் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஜாபிர் (ரழி) நூல் : முஸ்லீம் : *3793, 3794,* அஹ்மது : *13869, 14025, 14101, 14410, 14701.*

உணவும் இருக்கிறது அதற்காக செலவு செய்ய பணமும் இருக்கிறது என்ற எண்ணம் தான் உணவுப் பொருளை வீணடிப்பதற்கான முக்கிய காரணம் .

இன்றிருக்கும் பொருளாதார நிலை இறுதி வரை நீடிக்கும் என யாரும் எதிர் பார்க்க முடியாது.இருக்கும் போது வீணாக்காமல் பயன்படுத்தப் பழகிக் கொண்டால் அப்படி ஒரு மாற்றம் வரும் போது அது நம்மை பெரிய அளவில் பாதிக்காது.

அதிலும் பணம் காசு இருந்து உணவுப் பஞ்சம் ஏற்பட்டால் பணக் கட்டுகளை கிழித்தா தின்ன முடியும்?

உளூச் செய்யும் உறுப்புகளை மூன்று தடவைக்கு மேல் கழுவக்கூடாது என்பது நபியின் எச்சரிக்கை. கடலிலே செய்தாலும் இதுவே சட்டம். மூன்று தடவையல்ல முந்நூறு தடவை செய்தாலும் கடல் என்ன, குறையவாப் போகிறது.?

பிறகு ஏன் இந்தக் கட்டுப்பாடு?

இந்தப் பழக்கம் நாளையும் தொடரக்கூடாது என்பதாகத் தான் இருக்க முடியும்,



இந்த அடிப்படையை புரிந்து நடந்தால் வாழ்வின் ஏற்ற இறக்கங்களை எளிதாகக் கடந்து செல்லலாம்.

இதற்கு உதாரணம் சொல்வதாக இருந்தால் ரஷ்யர்களைக் குறிப்பிடலாம். உணவுப் பண்டங்கள் வீணாவதை கனவில் கூட நினைத்துப் பார்த்திராதவர்கள்,

சோவியத் ரஷ்யாவின் இரும்புத் திரை கிழிந்து தனித் தனி தேசங்களாக அவை உடைந்து போன பின் அவர்களின் சமூகப் பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ள உலகமே ஆர்வம் காட்டியது.

உலகின் பல பாகங்களிலிருந்தும் ஆராய்ச்சியாளர்கள் ரஷ்யாவை நோக்கி படையெடுத்தனர். உணவுப் பழக்கத்தைப் பற்றி மட்டும் இரு நூறுக்கும் மேற்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதில் (**fiskeriforskning**)என்ற கடல் வாழ் உயிரினங்கள் ஆய்வு மையம் நடத்திய ஆராய்ச்சி முக்கியத்துவம் வாய்ந்தது.

*2006* நவம்பரில் வெளியிடப்பட்ட அந்த ஆய்வறிக்கையில் அதன் நிபுணர் குழுவை வியப்பிலாழ்த்திய விஷயம் ஒன்று கூறப்பட்டுள்ளது.

ஒரு பெண்மணி சாப்பிட்டு முடிந்த பின் அவரது தட்டையை அப்படியே எடுத்துச் சென்று அடுத்த வேளை உணவுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் அந்த அளவுக்கு சுத்தம்.

ஒரு பெண் மட்டுமல்ல ஆய்வில் பங்கேற்ற அத்தனைப் பெண்களுமே இப்படித் தான் இருந்துள்ளனர். ஒட்ட வழித்துச் சாப்பிடுவது,சிந்தாமல் சிதறாமல் சாப்பிடுவது, தேவையான அளவு மட்டுமே சமைப்பது என்பதை இயல்பாகவே கொண்டிருந்தனர்.

இதைப் பார்த்து விட்டு ஆண்களைப் பற்றி ஆய்வு செய்யும் திட்டமில்லாமல் இருந்தவர்கள் அவர்களையும் ஆய்வின்

வடட்த்திற்குள் கொண்டு வந்தனர். ஆச்சர்யம் என்னவென்றால் அவர்களிடமும் இந்தப் பழக்கம் எந்த வித்தியாசமுமின்றி இருந்துள்ளது.

இந்தப் பழக்கத்திற்கு ஒரு நூறாண்டு கால வரலாற்றுப் பின்னணி உண்டு. இயல்பில் ரஷ்யர்கள் ஒரு வேளைக்கு பத்து முதல் பதினைந்து வெரைட்டிகள் செய்து டாம்பீகமாக சாப்பிட்டு விட்டு எஞ்சியதை அள்ளிக் கொட்டும் பழக்கமுடையவர்களாகத்தான் இருந்துள்ளனர்.

ஸ்டாலினின் ஆட்சியில் தேசத்தின் உணவு உற்பத்தி மற்றும் வினியோகம் அனைத்தையும் அரசுடமையாக்கினார். எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் (?) என்ற கம்யூனிச சித்தாந்தத்தின் படி இருப்பதை அனைவருக்கும் சமமாக அளந்து கொடுத்தார்.

வேறு வழியில்லாமல் இதுவே நாளடைவில் அவர்களின் அளந்து சாப்பிடும் நடைமுறைக்கு அடிப்படையாயிற்று.

சோவியத் உடைந்து பல்வேறு நாடுகளாக துண்டான போது ரஷ்யப் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்தது.

எவ்வளவு விவரித்தாலும் அதை நம்மால் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடியது. ஒற்றை ரொட்டிக்காக நாள் முழுவதும் வரிசையில் காத்துக் கிடக்கும் அவலம்.

பல வருடங்களுக்கு நீடித்த இந்த சோகம் அவர்களின் பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்களை தலைகீழாக மாற்றிவிட்ட்து.

மேலும் இன்றளவும் அங்கே உணவுப் பொருட்களின் விலையும் மிகவும் அதிகம்.எனவே எது தேவையோ அதை மட்டும் வாங்கி துளியும் வீணாக்காத பழக்கத்திற்கு சொந்தக்காரர்களாகி விட்டனர்



ரஷ்யர்களுக்கு ஏற்பட்ட இந்த அவலங்களிலிருந்து நாம் பாடம் படித்துக் கொள்ள வேண்டும்

விரயம் செய்வோர் இறைவனின் நேசத்தை விட்டும் தூரமாகி போகும் துர்பாக்கியசாலிகள் என்கிறது திருக்குர் ஆன்.

அவை பலன் தரும் போது அதன் பலனை உண்ணுங்கள். அதை அறுவடை செய்யும் நாளில் அதற்குரிய (ஸகாத்) கடமையை வழங்கிவிடுங்கள். வீண் விரயம் செய்யாதீர்கள். வீண் விரயம் செய்வோரை அவன் நேசிக்கமாட்டான்

*அல்குர்ஆன் - 6:141*

**உண்ணாதிருத்தல் ஆரோக்கியமே**

தேவைக்கு அதிகமாக உண்பது எண்ணற்ற பல நோய்களுக்கு அடிப்படையாக அமைந்து விடுகிறது.உடல் பருமன்,இதய நோய்,மூளைத் தேய்மானம், போன்ற பல நோய்களிலிருந்து விடுதலை பெற வாரம் இரண்டு நாள் நோன்பு வைப்பது சிறந்த வழிமுறையாகும் என்கின்றனர் மருத்துவ விஞ்ஞானிகள்.

இதன் மூலம் மூளையின் உயிரணுக்களுக்கு இடையிலான தொடர்புகளும் .செயல்பாடுகளும் அதிகரிக்கின்றன என்றும்,புதிய உயிரணுக்களின் உற்பத்தி வேகமெடுக்கின்றன என்றும்,உளைச்சல் மற்றும் பாதிப்புகளைத் தாங்கும் திறன் வளர்கின்றன என்றும் கண்டுபிடித்துள்ளனர்.

பிரிட்டன் பல்கலைகழகத்தில் மூன்று விதமான ஆய்வுகள் நடத்தப்பட்டது.முதலாவது சிலருக்கு எந்த கட்டுப்பாடுமின்றி உணவளிக்கப்பட்டது.அடுத்த சிலருக்கு அவர்களின் வயது,எடை, உயரம் அனைத்தையும் கவனித்து முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரோக்கியமான முறையில் உணவளிக்கப்பட்டது.மூன்றாம் பிரிவினருக்கு விரும்பிய

அனைத்தையும் உண்பதற்கு அனுமதியளித்து வாரத்தில் இரண்டு நாட்கள் எதையும் சாப்பிடாமல் பட்டினி போடப்பட்டனர்.

இம்மூன்று பிரிவினரிடத்திலும் நடத்தப்பட்ட ஆய்வில் கட்டுப்பாடற்ற உணவுப் பழக்கமுடையவர்களின் உடல் ஆரோக்கியம் கெட்டுப் போயிருந்தது. முறையாக சாப்பிட்டவர்கள் ஆரோக்கியமான உடல் நலத்தோடு இருந்தனர். விரும்பியதை சாப்பிட்டு வாரம் இருநாள் பட்டினி இருந்தவர்கள் இரண்டாம் பிரிவினரின் ஆரோக்கியத்திற்கு கொஞ்சமும் குறைவில்லாத வகையில் ஆரோக்கியத்தோடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

நமது ஆரோக்கிய வாழ்வை உத்தரவாதப்படுத்துகிற இந்த காரியத்தை உலகம் இன்றைக்குத் தான் கண்டுபிடித்திருக்கிறது.

ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதே காரியத்தை இறைத் தூதின் வழியாக பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே கற்றுத்தந்து விட்டார்கள்.

நபி(ஸல்) அவர்கள் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் நோன்பு வைக்கக்கூடியவர்களாக இருந்தார்கள்.

*அறிவிப்பாளர்:ஆயிஷா (ரரி) நூல் : நஸாயீ : 2324, 2325, 2326*



# விருந்து

## விருந்தோம்பல்

சமூகவாழ்வில் பிறரது நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ளவும் பிறர் மீது கொண்டுள்ள நேசத்தை வெளிப்படுத்தவும் உதவுகிற பண்பாடு விருந்தோம்பல். சகோதரத்துவத்தை வளர்த்தெடுக்கும் இப்பண்பாட்டை இறைநம்பிக்கையில் ஒரு பகுதியாகவே இஸ்லாம் கருதுகிறது.

அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்புகிறவர் தனது விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புகாரி : 6018, 6019, 6136, 6138, 6475 முஸ்லீம் : 67, 68 அஹ்மது : 7307, 9223 திர்மிதி : 2424, அபூதாவூது : 4487.*

நபி (ஸல்) அவர்கள் நபித்துவத்திற்கு முன்பே இந்தப் பண்பாட்டை கடைபிடித்து வந்திருக்கிறார்கள்.

முதன்முதலாக ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியவர்களைச் சந்தித்து, கட்டியணைத்து திருமறையின் ஆரம்ப வசனங்களை ஓதிக் காட்டிய தருணத்தில் பயந்து போன நபியவர்களுக்கு அன்னை கதீஜா (ரழி) அவர்கள் கூறிய ஆறுதல் மொழிகளில் நபியிடம் இருந்த விருந்தோம்பலை ஓர் உயரிய பண்பாடாகக் குறிப்பிடுகிறார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக (கூறுகிறேன்) ஒருக்காலும் அல்லாஹ் உங்களை இழிவுபடுத்தமாட்டான். (ஏனெனில்) நீங்கள் வறியோருக்காக உழைக்கிறீர்கள். விருந்தினர்களை உபசரிக்கிறீர்கள் சத்தியவான்களுக்கு உதவுகிறீர்கள் என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : ஆயிஷா(ரழி) நூல் : புகாரி : 3, 4954, 6982 முஸ்லீம் : 231 அஹ்மது : 24681, 24768*

ஒருநாள் நபி (ஸல்) அவர்கள் தம்மிடம் வந்த ஒரு மனிதருக்கு உணவளிக்க ஏதும் இருக்கிறதா? எனக் கேட்டு வருமாறு தனது வீட்டிற்கு ஆளனுப்பினார்கள். தண்ணீரைத் தவிர வேறெதுவுமில்லை என பதில் வந்தது.

நபி (ஸல்) அவர்களின் தோழர் அபூதல்ஹா (ரழி) அவர்கள் அவரைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கும் அதே நிலை. குழந்தைக்குரிய உணவைத் தவிர வேறெதுவுமில்லை என அவரது மனைவி கூறினார்.

அழைத்து வரப்பட்டவர் அல்லாஹ்வின் தூதரின் விருந்தினர்.எப்படியேனும் அவரின் பசி தீர்த்து அனுப்ப வேண்டும் என்று அபூதல்ஹா ஓர் திட்டம் தீட்டினார்.

அதன்படி அவர் மனைவி குழந்தைகளுக்கு உணவளிக்காமல் தூங்க வைத்தார். விளக்கை சரி செய்வது போல் அதை அணைத்து விட்டார். விருந்தினரை உண்ண வைத்து இவர்கள் இருவரும் உண்பது போல் பாவணை செய்து கொண்டிருந்தனர்

இறுதியில் விருந்தினரை திருப்திபடுத்தி விட்டு கணவன், மனைவி, பிள்ளைகள் என மொத்தக் குடும்பத்தினரும் ஒட்டிய வயிறுடன் பட்டினியில் இரவைக் கழித்தார்கள்.

இந்நிகழ்வைக் கண்டு மகிழ்ந்த இறைவன் இப்பண்பாட்டை சிலாகித்து இத்தகையோர் தான் வெற்றியாளர்கள் எனும் (கீழ்காணும்) வசனத்தை இறக்கி வைத்தான்.

தமக்கு வறுமை இருந்த போதும், தம்மை விட (பிறருக்கு) முன்னுரிமை அளிக்கின்றனர். தன்னிடமுள்ள கஞ்சத்தனத்திலிருந்து காக்கப்படுவோரே வெற்றி பெற்றோர்.

*அல்குர் ஆன் - 59:9 அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : 2461, 3041, 3798, 4889 முஸ்லீம் : 3829, 3830, திர்மிதி : 3226.*



## விருந்து அழைப்பு

விருந்து கொடுப்பவர் அதற்காக மக்களை அழைக்கும் போது ஒரு தடவை அழைத்தால் போதுமானது. சம்மந்தப்பட்டவர் தனது அலுவல்களுக்கிடையில் மறந்திருப்பாரோ என நினைத்து மீண்டும் ஒரு தடவை நினைவூட்டிக் கொண்டால் அதுவும் தவறில்லை.

ஆனால், தமிழகத்தின் சில பகுதிகளில் விருந்தழைப்பு என்றால் நான்கு தடவை, ஐந்து தடவை அழைக்க வேண்டும் அதுதான் மரியாதை என்ற கருத்து நிலவுகிறது.

அதிலும் திருமணம் போன்ற குறிப்பிட்ட நிகழ்ச்சிக்காக அழைத்தால் முதலில் தந்தை அழைக்க வேண்டும். பிறகு தாய் போய் அழைக்க வேண்டும். திருமணத்தின் முதல் நாள் இரவில் மணமக்களின் சகோதர, சகோதரிகள் சென்று அழைக்க வேண்டும். திருமணத்தன்று காலையில் மீண்டும் ஓர் அழைப்பு. இவையனைத்தும் குறைவின்றி நடந்தேற வேண்டும்.

இதில் ஒன்று குறைந்தாலும், மரியாதை குறைந்ததாகக் கூறிக் கொண்டு விருந்தையே புறக்கணிக்கும் கோரக் காட்சிகளும் அரங்கேறுகின்றன. இஸ்லாம் காட்டும் நாகரிக மரபில் விருந்து என்றால் அதற்கு ஓர் அழைப்பு அவசியம். அதில் இதுபோன்ற முட்டாள் தனத்திற்கும், போலி மரியாதைக்கும் இடமில்லை.

நபியவர்கள் வழங்கிய பல விருந்துகளுக்கு அவர்களின் பணியாளரையும், குடும்பத்தைச் சேராத தோழர்களையும், அழைப்பாளராக அனுப்பியுள்ளார்கள். பத்தாண்டு காலம் நபி (ஸல்) அவர்களிடம் பணியாளராக இருந்த அனஸ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (என்னைப் பார்த்து) நீ சென்று முஸ்லீம்களில் நீ சந்திப்போரையெல்லாம் என்

(விருந்து)க்காக அழை(த்து வா) என்றார்கள். அவர்களுக்காக நான் சந்தித்தவர்களை அழைத்தேன். அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து சாப்பிட்டு விட்டுச் சென்றார்கள்.

*அறிவிப்பவர் : அனஸ் (ரழி) நூல் : புகாரி : 4793, 5170 முஸ்லீம் : 2572, 2573 திர்மிதி : 3142, 3143.*

பணியாளரை விட்டு அழைப்பதா? என நபி (ஸல்) அவர்களும் யோசிக்கவில்லை. இது மரியாதை இல்லையென ஸஹாபிகளும் புறக்கணிக்கவில்லை.

அபூஹுரைரா (ரழி) கூறுகிறார்கள். நபி (ஸல்) அவர்கள் (என்னைப் பார்த்து) அபூஹிர்ரே என்றழைத்து திண்ணைவாசிகளிடம் சென்று அவர்களை என்னிடம் அழைத்து வாரும் என்றார்கள்.

நான் திண்ணைவாசிகளிடம் வந்து அவர்களை அழைத்தேன். அவர்களும் எனது (அழைப்பை ஏற்று) நபி (ஸல்) அவர்களின் வீட்டிற்கு வந்தார்கள் அனுமதி கேட்டார்கள். அனுமதி கிடைத்தும் உள்ளே நுழைந்து ஆங்காங்கே அமர்ந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அபூஹிர் என்று என்னை அழைத்து, இதை இவர்களுக்கு கொடுங்கள் என்றார்கள். நான் அந்த (பால்) கோப்பையை எடுத்து ஒருவரிடம் கொடுத்தேன். அவர் தாகம் தணியும் வரை குடித்துவிட்டு கோப்பையைத் திருப்பித் தந்தார். இவ்வாறு ஒருவர் பின் ஒருவராக அனைவரும் வயிறாற குடித்து பசி தீர்ந்தார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புகாரி : 6452, 6246 திர்மிதி : 2401 அஹ்மது : 10263..*

நபியவர்கள் தாம் அளிக்கும் விருந்துக்கு ஸஹாபாக்களை விட்டு அழைத்தது மட்டுமில்லை. ஸஹாபாக்கள் நபியை விருந்துக்கு அழைக்கும் போதும் இதுபோல நடந்துள்ளது.



அனஸ் (ரழி) கூறுகிறார்கள்.

என் தயார் உம்முசுலைம் (ரழி) அவர்கள் ஒரு முத்துளவு வாற் கோதுமையை அரைத்து கஞ்சி தயாரித்துத் தம்மிடமுள்ள தோல் பையிலிருந்த நெய்யை ஊற்றினார்கள். பிறகு என்னை நபி (ஸல்) அவர்களை (அழைத்து வருமாறு) அனுப்பி வைத்தார்கள்.

நபியவர்கள் தம் தோழர்களுடன் அமர்ந்திருக்க நான் அவர்களிடம் சென்று அழைத்தேன். அவர்கள் தமது தோழர்களுடன் வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிட்டு விட்டுச் சென்றார்கள்.

*ஹதீஸ் சுருக்கம்.அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரழி) நூல் : புகாரி : 5450, 422, 3578, 5381, 6688 முஸ்லீம் : 3801,3802 திர்மிதி : 3563 அஹ்மது : 12034, 12806, 12946, 13058.*

இந்தச் செய்தியில் நபியவர்களை விருந்துக்கு அழைத்தவர் சிறுவர் அனஸை அனுப்பி அழைப்பு விடுத்துள்ளார். நபியவர்களும் அதற்காக முகம் சுளிக்கவில்லை. மரியாதைக்குறைவு என்றெல்லாம் கருதவும் இல்லை.

எனவே இதுபோன்ற போலித்தனமான மரியாதைகளை விட்டொழிக்க வேண்டும். அதே நேரத்தில் அனைவரையும் நேரில் சென்று அழைத்த ஒருவர் நம்மை உதாசீனப்படுத்தும் நோக்கத்தோடு, பிறர் மூலமாக நம்மை அழைத்தால் அது பரிசீலனைக்கு உரியது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### இயன்றால் பெண்களையும் சேர்த்து அழைத்தல்

பெரும்பாலான விருந்துகளில் ஆண்கள் மட்டுமே பங்கேற்கும் நிலை உள்ளது. ஒருவர் நம்மை விருந்துக்கு அழைக்கும் போது நமது குடும்பத்து பெண்களையும் அழைத்துச் செல்ல வாய்ப்பிருந்தால் அவரிடம் நமது பெண்களையும் அழைக்கச் சொல்லலாம்.

நபி (ஸல்) அவர்களின் பக்கத்து வீட்டில் பாரசீகத்தைச் சேர்ந்த ஒருவர் வசித்து வந்தார். அவர் ருசியாகச் சமையல் செய்வார். (ஒருநாள்) அல்லாஹ்வின் தூதருக்காக உணவு தயாரித்து வைத்து விட்டு நபி (ஸல்) அவர்களை விருந்துக்காக அழைத்தார்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஆயிஷாவை அழைக்குமாறு சைகை செய்தார்கள். அவர் மறுத்துவிட்டு நபியை மட்டும் அழைத்தார். நபி (ஸல்) அவர்கள் மீண்டும் முன்பு போல (ஆயிஷாவை அழைக்குமாறு) சைகை செய்தார்கள். அவர் இரண்டாம் முறையும் மறுத்துவிட்டு நபியை மட்டும் அழைத்தார். பிறகு நபி (ஸல்) அவர்கள் மூன்றாம் முறையும் அதேபோல செய்தார்கள். அப்போது அவர் ஆயிஷா(ரழி) அவர்களையும் விருந்துக்கு அழைத்தார். இருவரும் எழுந்து அவர் வீட்டுக்குச் சென்று (விருந்தில் பங்கேற்றார்கள்)

*அறிவிப்பவர் : அனஸ் (ரழி) நூல் : முஸ்லீம் : 3798 நஸாயீ : 3382 அஹ்மது : 11799, 1336.*

### அழைப்பை ஏற்றுக் கொள்ளுதல்

விருந்துக்காக அழைக்கப்பட்டால் இயன்ற வரை மறுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை ஏற்பதால் ஒரு சில அசௌகரியங்கள் ஏற்படலாம். நமது அன்றாட நடவடிக்கையில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டிய நிலை வரலாம். அவற்றை நினைத்துக் கொண்டு விருந்தழைப்பை புறக்கணித்து விடக்கூடாது.

ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் விருந்தை ஏற்பது ஒரு முஸ்லீம் இன்னொரு முஸ்லிமுக்குச் செய்கிற கடமைகளில் ஒன்று என்கிறார்கள்.

ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஐந்து. அவை, சலாமுக்குப் பதில் சொல்லுதல்.



நோயாளியை நலம் விசாரித்தல், ஜனாஸாவைப் பின் தொடர்தல், விருந்தழைப்பை ஏற்றுக் கொள்ளுதல், தும்மியவருக்கு மறுமொழி கூறுதல் ஆகியவைகளாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புகாரி : 1240, 2445, 5175, 5635, 5863, 6222 முஸ்லிம் : 4022, 4023 திர்மிதி : 2661 நஸயீ : 1912அபூதாவூது : 4375 இப்னுமாஜா : 1425 அஹ்மது : 8047, 10543.*

(தக்க காரணமின்றி) விருந்தழைப்பை ஏற்காதவர் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் மாறு செய்தவராவார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம் : 2586.*

நபி (ஸல்) அவர்கள் மார்க்க வரம்பிற்கு உட்பட்டு அழைக்கப்பட்ட அனைத்து விருந்துகளிலும் பங்கெடுத்துள்ளார்கள்.

அபூஉசைத் (ரழி) தமது மணவிருந்துக்காக நபி (ஸல்) அவர்களையும் ஸஹாக்களையும் அழைத்திருந்தார். இவர்களுக்கான உணவை அபூஉசைத் (ரழி)யின் மனைவி உம்முஉசைத் (மணப்பெண்) அவர்களே தயாரித்துப் பரிமாறினார்கள் (முதல்நாள்) இரவில் கல் பாத்திரம் ஒன்றில் ஊறவைக்கப்பட்ட பேரீச்சம் பழத்தை சாறு பிழிந்துஎடுத்து அவர்கள் சாப்பிட்டு முடித்ததும் அவர்களுக்கு(குடிக்கக்) கொடுத்தார்கள்.

*அறிவிப்பவர் : ஸஹ்ல் பின் ஸஃது (ரழி) நூல் : புகாரி : 5176, 5182, 5183, 5591, 5597, 6685 இப்னுமாஜா : 1902 அஹ்மது : 15482 முஸ்லீம் : 3746.*

இதுபோன்ற நபியவர்கள் சென்று பங்கெடுத்த விருந்துகள் குறித்த பல செய்திகள் ஹதீஸ் நூற்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**அழையா விருந்தாளி**

விருந்து நடக்கும் சபைகளில் சிலர் எவ்வித அழைப்புமின்றி உள்ளே நுழைந்து விடுகின்றனர். நாகரிகமற்ற இந்தச் செயலால் விருந்தளிப்பவர் பெரும் சங்கடத்திற்கு ஆளாகிவிடுகிறார். அழையா விருந்தாளிகளால் ஏற்கனவே முறைப்படி அழைக்கப்பட்டவரை சரிவர கவனிக்க முடியாத சூழல் ஏற்பட்டுவிடுகிறது.

அழையா விருந்தினரின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டால் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு விருந்து கொடுப்பவர் பெரும் மனச்சுமைக்கு ஆளாக நேரிடுகிறது.

நபி(ஸல்) அவர்கள் இதில் மிகுந்த எச்சரிக்கையோடு செயல்பட்டிருக்கிறார்கள்.

(ஒருநாள்) அபூஷுஐப் (ரழி) தமது ஊழி யரிடம் வந்து நபி (ஸல்) அவர்களின் முகத்தில் பசியின் அறிகுறியைக் காண்கிறேன். எனவே, அவர்களுடன் சேர்த்து ஐந்து நபர்களுக்கு உணவைத் தயார்செய் என்று கூறினார்.

பின்னர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விருந்துக்கு வருமாறு அழைத்தார். அப்போது அவர்களுடன் (விருந்துக்கு அழைக்கப்படாத) இன்னொருவரும் சேர்ந்து கொண்டார். இவர் எங்களைப் பின் தொடர்ந்து வந்துவிட்டார். நீர் இவருக்கு அனுமதியளிப்பதாக இருந்தால் அனுமதிப்பீராக! இல்லாவிட்டால் இவர் திரும்பச் சென்று விடுவார் என நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அபூஷுஐப் (ரழி) இவருக்கும் அனுமதி அளிக்கிறேன் என்றார்.

அறிவிப்பவர் : அபூஷுஐப் (ரழி) நூல் : புகாரி : 2081, 2456, 5434, 5461 முஸ்லீம் : 3797 திர்மிதி : 1018.

நபி (ஸல்) அவர்கள் அழைக்கப்படாமல் தம்முடன் வந்தவரையே பிரித்துக் காட்டி அனுமதி கோரியிருக்கிறார்கள்



என்றால் நாமே அப்படிப்பட்ட அழையா விருந்தாளியாக இருக்கலாமா? என்பதை யோசிக்க வேண்டும்.

சில தருணங்களில் நபி (ஸல்) அவர்கள் விருந்துக்கு அழைக்கப்படும் போது அழைக்கப்படாத தம் தோழர்களையும் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு நம்மை அழைத்தால் நம்முடனிருப்பவர்களையெல்லாம் கூட்டிச் செல்லலாம் என எண்ணிக் கொள்ளக்கூடாது. ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் அவ்வாறு அழைத்துச் சென்ற அனைத்து தருணங்களிலும் விருந்துக்கு அழைத்தவர் செய்து வைத்திருக்கும் உணவை எதிர்பார்த்து அழைத்துச் செல்லவில்லை. மாறாக இறைவனின் புறத்திலிருந்து நிகழப்போகும் அற்புதத்தை எதிர்பார்த்துத் தான் அழைத்துச் சென்றுள்ளார்கள்.

உதாரணமாக அபூதல்ஹா (ரழி) அவர்களின் வீட்டுக்குச் செல்லும் போது உங்களுக்கு மட்டும் தானே உணவு உள்ளது என்று அவர் கூற அதற்காக உம்மீது எந்தச் சுமையும் இல்லை என்று கூறினார்கள்.

முஸ்லிமின் 3802வது அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் மட்டும் வந்தால் அவர்களின் பசி போக்கலாம். அவர்களுடன் இன்னொருவரும் வந்துவிட்டால் அவர்களுக்கு நமது உணவு போதாது என உம்மு சுலைம் அவர்கள் கூறிய செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கு மட்டுமே போதுமான அளவில் இருந்த உணவில் ஏறத்தாழ எழுபது, எண்பது பேர் சாப்பிட்டு முடித்தார்கள்.

அறிவிப்பாளர் : அனஸ் (ரழி), நூல் : புகாரி : 3578, 5381, 5450, 6688, திர்மிதி : 3563 அஹ்மது : 12946, 1305முஸ்லீம் : 3801, 3802.

அகழ்ப்போரின் போது ஜாபிர் (ரழி) அவர்கள் வீட்டில் கொஞ்சம் உணவை தயாரித்துக் கொண்டு நபியவர்களை

விருந்துண்ண வருமாறு அழைத்தார். அனைவரையும் அழைத்துச் சென்றால் உணவு தரமுடியாது என்பதால் தமது அழைப்பை மிக இரகசியமாக நபியிடம் முன் வைத்தார். அதைக் கேட்ட நபியவர்களோ உரத்தக்குரலில் தம் தோழர்களை அழைத்து ஜாபிர் உங்களை விருந்துக்கு அழைக்கிறார் வாருங்கள் என்றார்கள்.

பிறகு ஜாபிரைப் பார்த்து நான் வரும் வரை சட்டியை அடுப்பிலிருந்து இறக்க வேண்டாம் குழைத்த மாவில் ரொட்டியும் சுட வேண்டாம் எனக்காக காத்திருங்கள் என்று கூறினார்கள் பிறகு வீட்டிற்கு வந்ததும் அந்த உணவில் இறையருளை வேண்டி பிரார்த்தனை செய்துவிட்டு தம்மோடு ஒரு பணியாளரை வைத்துக் கொண்டு அவர்களே ரொட்டி சுட்டுத் தந்தார்கள். வந்திருந்த அனைவரும் பசியாறினர் அதில் பங்கெடுத்தவர்கள் ஏறத்தாழ ஆயிரம் பேர்.

ஹதீஸ் சுருக்கம் அறிவிப்பவர் ஜாபிர் (ரழி) நூல் : புகாரி *: 4102, 4101* முஸ்லீம் *: 4101* முஸ்லீம் *: 3800* ,அஹ்மது *: 14497.*

நபியவர்கள் தாமாக அழைத்துச் சென்ற அனைத்து தருணங்களுமே இதுபோன்ற அற்புதத்தின் வெளிப்பாடாய் அமைந்தவை தான். எனவே, இதை ஆதாரமாக வைத்து அழைக்கப்படாத விருந்துக்கு நாம் செல்வதோ (அ) பிறரை அழைத்துச் செல்வதோ கூடாது.

### விருந்தின் நாட்கள்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறவர் தனது விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும் அவரது கடமையை (நிறைவேற்றட்டும்) என்றார்கள்.



அல்லாஹ்வின் தூதரே! அவருடைய கடமை என்றால் என்ன? எனத் தோழர்கள் கேட்டார்கள். அதற்கு ஒரு இரவு ஒரு பகல் (உபசரிப்பதாகும்) விருந்து என்பது மூன்று தினங்களாகும். அதற்கு மேல் உள்ளது அவருக்கு தர்மமாக அமையும்.

மேலும் விருந்தளிப்பவரை சிரமப்படுத்தும் அளவுக்கு அவரிடம் தங்குவது விருந்தினருக்கு ஹலால் ஆகாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புகாரி : 6135, 6019, 6476 முஸ்லீம் : 69, 3255, 1890 திர்மிதி : 1890, 1891 அபுதாவூது : 3256 இப்னுமாஜா : 3662 அஹ்மது : 15775, 25906, 25908*

### விருந்தின் தரம்

உயர்ந்த தரத்தில் அதிகப்படியான பொருட்செலவில் பலவகைப் பதார்த்தங்களைத் தயாரித்து வழங்குவது தான் விருந்து எனும் கருத்து மக்களின் மனங்களை ஆக்கிரமித்துள்ளது. இஸ்லாம் காட்டும் நாகரிக மரபின்படி ஒருவர் தனது வீட்டில் எதைச் சாப்பிடுகிறாரோ அதுவே விருந்தளிக்கப் போதுமானதாகும்.

ஒரு ஆட்டின் கால் குளம்பையோ (அ) விலா எலும்பையோ (சமைத்து வைத்துக் கொண்டு) நான் அழைக்கப்பட்டாலும். கலந்து கொள்வேன் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூல் : புகாரி : 2858, 5178 அஹ்மது : 9121, 9822, 9853, 10239 திர்மிதி : 1258முஸ்லீம் : 2582.*

ஒருவரின் வீட்டிலிருக்கும் பிஸ்கட், பேரீத்தம் பழம், முறுக்கு, பழைய கஞ்சி, ரசம் சோறு என உண்பதற்கு தகுதியான அனைத்தும் விருந்தளிக்கப்போதுமானது தான் என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

வசதி படைத்த ஒருவர் தமது விருந்தினருக்காக அறுசுவை உணவு கொடுக்கலாம். அதற்காக விருந்து என்றாலே உயர்தர

உணவாகத் தான் இருக்க வேண்டும் எனக் கருதுவது தவறாகும்.

ஒருநாள் நபி (ஸல்), அபூபக்கர் (ரழி), உமர் (ரழி) ஆகிய மூவரும், ஒரு அன்சாரித் தோழரின் வீட்டுக்குச் சென்றார்கள்.

அல்லாஹ்வின் தூதரையும் அவர்களின் இரு தோழர்களையும் கண்ட அவர் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். இன்று என்னை விடச் சிறந்த விருந்தினரைப் பெற்றவர் எவரும் இல்லை என்று கூறினார். பின்னர் நன்கு கனிந்ததும், கனியாததும் நிறம் மாறிய செங்காய்களும் கலந்திருந்த பேரீச்சங்குலையுடன் வந்து அதைச் சாப்பிடச் சொன்னார். (ஆட்டை அறுத்து விருந்து சமைப்பதற்காக) கத்தியை எடுத்தார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பால் தரும் ஆட்டை அறுப்பதை விட்டும் உன்னை எச்சரிக்கிறேன் என்று கூறினார்கள். மூவரும் ஆட்டிறைச்சியையும், பேரீத்தம் பழத்தையும் சாப்பிட்டுவிட்டு தண்ணீர் அருந்தி தாகம் தணிந்தனர்

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம் : 3799, திர்மிதி : 2292.*

இங்கே அன்சாரித் தோழர் பேரீச்சங்குலையுடன் ஆட்டையும் சமைத்து விருந்து படைத்துள்ளார். வசதிபடைத்த ஒருவர் இதுபோன்ற உயர்தர உணவின் மூலம் விருந்தளிப்பதை மார்க்கம் ஏற்றுக்கொள்கிறது.

அதேநேரத்தில் பால்தரும் ஆட்டை அறுத்துவிடாதே எனும் நபி (ஸல்) அவர்களின் எச்சரிக்கை கவனத்திற்குரியது. நமக்கு அவர் தரும் விருந்து அவரின் வாழ்வாதாரத்தைச் சிதைப்பதாகவோ, வருமானத்திற்கு இழப்பு ஏற்படுத்துவதாகவோ அமைந்து விடக்கூடாது எனபதில் நபி (ஸல்) அவர்கள் கவனமாக இருந்திருக்கிறார்கள் என்பது விளங்குகிறது.



இன்று சமூகத்தில் பலர் கடன் வாங்கி விருந்து வைக்கிறார்கள். வீட்டுப்பொருட்களை அடமானம் வைக்கிறார்கள். வீடு வாசலை எல்லாம் விற்பனை செய்து விட்டு வாழ்வாதாரமே சிதைந்து வீதியில் நிற்கின்றனர்,

இவ்வாறு சிரமப்பட்டு விருந்தளிக்க வேண்டிய தேவை என்ன வந்தது? அன்றாடச் செலவுக்கே அல்லாடும் ஒருவர் விருந்து எனும் பெயரில் தாங்க முடியாத சுமையை சுமந்து கொள்வதை மார்க்கம் ஒருபோதும் அனுமதிக்காது. மார்க்கத்தின் சட்டங்கள் அனைத்தும் மனிதனின் இயலாமையும், பலஹீனத்தையும் அறிந்து வைத்துள்ள இறைவனால் அருளப்பட்டவை.

எவரையும் அவரது சக்திக்கு உட்பட்டே தவிர அல்லாஹ் சிரமப்படுத்தமாட்டான். *அல்குர் ஆன் 2:286, 65:7*

எளிதானதை மேலும் உமக்கு எளிதாக்குவோம். :

*அல்குர்ஆன் 87:8*

அல்லாஹ் உங்களுக்கு எளிதானதையே நாடுகிறான். சிரமமானதை உங்களுக்கு நாடமாட்டான். *அல்குர் ஆன் 2:185*

நிச்சயமாக இந்த மார்க்கம் எளிதானது. இம்மார்க்கத்தை யாரேனும் (தம்மீது) சிரமமாக ஆக்கிக் கொண்டல் அவரை அது மிகைத்துவிடும். எனவே நடுநிலையைக் கடைபிடியுங்கள் இயன்றதைச் செயயுங்கள் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புகாரி : 39, 6463, 5673 நஸயீ : 4949 அஹ்மது : 7902, 9866, 10517*

**விருந்து உண்பதும் பரிமாறுவதும்**

**சபையில் அமரும் விதம்**

விருந்துக்காகப் பலர் ஒன்று கூடும் போது இடப்பற்றாக்குறை ஏற்படலாம். அப்போது ஒருவருக்கொருவர்

பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். இயன்றவரை நமது உடலைக் குறுக்கி பிறருக்கு இடமளிக்க வேண்டும்.

நம்பிக்கை கொண்டவர்களே சபைகளில் (பிறருக்கு) இடமளியுங்கள் என்று உங்களடம் கூறப்பட்டால் இடமளியுங்கள். அல்லாஹ் உங்களுக்கு இடமளிப்பான் எழுந்துவிடுங்கள் எனக் கூறப்பட்டால் எழுந்துவிடுங்கள்.

*அல்குர் ஆன் : 58:11*

நபி (ஸல் அவர்களிடம் ஹர்ரா என்ற (பெரிய) தட்டு ஒன்று இருந்தது. நான்கு பேர் சேர்ந்து சுமக்கும் அளவுள்ள அந்த பாத்திரம் கொண்டுவரப்பட்டது. அதில் (இறைச்சியும், ரொட்டியும் கலந்த) தக்கடி வைக்கப்பட்டது. (அனைவரும்) அதைச் சுற்றி அமர்ந்தார்கள்.

எண்ணிக்கை அதிகமாகி (இட நெருக்கடி ஏற்பட்ட போது) ரசூல் (ஸல்) அவர்கள் தமது கால்களை மடக்கி முட்டிக்காலின் மீது மண்டியிட்டு (அத்தஹிய்யாத்தில் இருப்பது போல்) அமர்ந்தார்கள். அப்போது கிராமவாசி ஒருவர் இது என்ன இருக்கை? என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ் என்னை கண்ணியமான அடியானாக ஆக்கியுள்ளான். பிடிவாதம் கொண்ட அடக்குமுறை செய்பவனாக என்னை ஆக்கவில்லை என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு புஸ்ர் (ரழி) நூல் : அபூதாவூது : 3281, இப்னுமாஜா : 3254*

### வலது புறமாகப் பரிமாற வேண்டும்

அனஸ் (ரழி) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்த போது குடிக்கத் தண்ணீர் கேட்டார்கள். அவர்களுக்காக நாங்கள் ஒரு ஆட்டில் பால் கறந்தோம். பிறகு எங்களின் இந்தக் கிணற்று நீரை அதில் கலந்து கொடுத்தோம். அப்போது நபி (ஸல்)



அவர்களின் இடதுபுறம் அபூபக்கர்(ரழி) அவர்களும் வலதுபுறம் ஒரு கிராமவாசியும் எதிரில் உமர் (ரழி) அவர்களும் இருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் பாலைக்குடித்து முடித்ததும், உமர் (ரழி) அவர்கள் இதோ அபூபக்கர்என்று கூறி (மீதமிருந்ததை அவருக்கு கொடுக்கச் சொன்னார்). ஆனால், நபி (ஸல்) அவர்களோ மீதத்தை கிராமவாசிக்கு கொடுத்தார்கள். பிறகு வலது புறத்திலிருப்பவர் முன்னுரிமை பெற்றவர். எனவே, வலது புறத்திலிருப்பவருக்கே முதலிடம் கொடுங்கள் என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அனஸ் (ரழி) நூல் : புகாரி : 2371, 2332, 5612,5619 முஸ்லீம் : 3783, 8784, 3785, திர்மிதி : 1815அபூதாவூது : 3238, இப்னுமாஜா : 3416, அஹ்மது : 121634, 12565, 12941, 13025*

பெரும்பாலும் நம்முடைய அவைகளில் இமாம்கள், தலைவர்கள், முக்கியஸ்தர்கள் என பார்த்து முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நெருங்கிய தோழர்களான அபூபக்கர், உமரை விடுத்து வலதுபுறம் எனும் சபை ஒழுங்குக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள்.

### அனுமதி பெற்று இடதுபுறம்

ஒருவேளை இடதுபுறத்தில் உள்ளவருக்கு முன்னுரிமை கொடுக்க விரும்பினால் வலப்புறத்தாரின் அனுமதி பெற்று கொடுக்கலாம்.

(ஒருநாள்) நபி (ஸல்) அவர்களின் வலதுபுறம் கூட்டத்தில் சிறிய வயதுடையவரும் இடதுபுறம் மூத்தவர்களும் அமர்ந்திருந்தனர்அப்போது ஒரு கோப்பையில் பால் கொண்டு வரப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் அதிலிருந்து சிறிதளவு பருகினார்கள்.

(பிறகு வலதுபுறத்தில் இருந்த சிறுவனிடம்) சிறுவனே இதைப் பெரியவர்களுக்கு கொடுப்பதற்கு என்னை நீ அனுமதிப்பாயா? எனக் கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதரே தங்களிடமிருந்து எனக்கு கிடைக்கும் மீதத்தை யாருக்கும் நான் விட்டுக் கொடுக்கமாட்டேன் என்று கூறிவிட்டார் நபியவர்கள் மீத(ப்பாலை) அந்தச் சிறுவனுக்கே கொடுத்துவிட்டார்கள்.

அறிவிப்பவர் : ஸஹ்ல் பின் ஸஅது (ரழி) நூல் : புகாரி : 2351, 2366, 2451, 2602, 2605, 5620, 2366 முஸ்லீம் : 3786,அஹ்மது : 21758, 21797

இடப்புறத்தில் உள்ளவருக்கு கொடுக்க அனுமதிப்பாயா? என நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் கேட்ட கேள்வியிலிருந்து அவர் அனுமதித்தால் வழங்கலாம் என்பது விளங்குகிறது.

**சமமாகப் பரிமாறுதல்**

விருந்தில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் ஒரே அளவில் உணவளிக்க முடியாது. ஒவ்வொருவரின் தேவையைப் பொறுத்து கூடுதலாகவோ (அல்லது) குறைவாகவோ அமையும். உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டால் சிலருக்கு கிடைத்தும் சிலருக்கு கிடைக்காமல் போய்விடலாம். அது போன்ற தருணங்களில் குறைந்த அளவாக இருந்தாலும் இருப்பதை அனைவருக்கும் கிடைக்குமாறு இருப்பதை சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

அஷ்அரிய்யா (எனும் குலத்தார்) போருக்குச் செல்லும் போதும் அல்லது ஊரில் இருக்கும் போதும் அவர்களின் குடும்பத்துக்கு தேவையான உணவு குறைவாக இருந்தால் தங்களிடம் இருப்பதை ஒரு துணியில் ஒன்று திரட்டுவார்கள். பிறகு பாத்திரத்தைக் கொண்டு அதைத் தமக்கிடையே சமமாகப் பங்கிட்டு கொள்வார்கள். அவர்கள் என்னைச்



சேர்ந்தவர்கள் நான் அவர்களைச் சேர்ந்தவன் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூமூஸா (ரழி) நூல் : முஸ்லீம் : 4556, புகாரி : 2486

**உரிய பங்கை விட அதிகம் உண்ணுதல்**

விருந்தில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக உணவு வழங்கப்படும் போது நமக்கு வழங்கப்பட்டதை நாம் சாப்பிடுவோம்.

அனைவரும் சேர்ந்து சாப்பிடும் விதத்தில் உணவுப்பண்டங்களைப் பொதுவில் வைத்தால் மற்றவர்களைக் கவனித்து நமக்குரிய பங்கை எடுக்க வேண்டும்.

உதாரணமாக பிஸ்கட், வாழைப்பழம், பேரீத்தம்பழம் போன்றவை வைக்கப்படுகிறது. அனைவரும் ஒவ்வொன்றாக (அ) இரண்டிரண்டாக எடுத்துச் சாப்பிடும் போது ஒருவர் மட்டும் நான்கு, ஐந்து என அதிகப்படியாக எடுத்து உண்ணக் கூடாது.

அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரழி) அவர்கள் (ஹிஜாஸின் ஆட்சியாளராக) இருந்த போது எங்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டது. அவர்கள் எங்களுக்கு பேரீச்சம் பழம் கொடுத்தார்கள். அதை நாங்கள் சாப்பிட்டு கொண்டிருக்கும் போது எங்களை கடந்து சென்ற இப்னுஉமர் (ரழி) அவர்கள் இரண்டு (பழத்தை ஒன்றாகச்) சேர்த்துச் சாப்பிடாதீர்கள். ஏனெனில், (ஒருவர் தம்முடன் சாப்பிடும்) சகோதரனின் அனுமதி பெறாமல் சேர்த்துச் சாப்பிடுவதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜபலாபின் சுஹைம் (ரஹ்) நூல் : புகாரி : 5446, 2455, 2489, 2490 முஸ்லிம் : 3809, 3810 திர்மிதி : 1736 அபுதாவூது : 3337இப்னுமாஜா : 3322 அஹ்மது : 4284, 4794, 4819, 4995, 5178, 5274, 5540, 5874.

### விருந்துக்காக துஆ செய்தல்

உணவளித்தவருக்காக நபி (ஸல்) அவர்கள் கீழ்காணும் பிரார்த்தணையை செய்வார்கள்

அல்லாஹும்ம பாரிக் லஹும் ஃபீமா ரஸக்தஹும் வக்ஃபிர் லஹும் வர்ஹம்ஹும்.

பொருள்: இறைவா! இவர்களுக்கு வழங்கிய உணவில் அருள்புரிவாயாக! இவர்களை மன்னித்து இவர்களுக்கு இரக்கம் காட்டுவாயாக!

அறிவிப்பவர்:அப்துல்லாஹ் பின் புஸ்ர்(ரழி) நூல்:முஸ்லிம் 4149

சில நேரங்களில் அல்லாஹும்ம அத்யிம் மன் அத்அமனீ வஸ்கீ மன் ஸகானீ என்றும் ஓதியிருக்கிறார்கள்.

பொருள்: இறைவா!எனக்கு உணவளித்தவருக்கு நீஉணவளிப்பாயாக! எனக்கு நீர் கொடுத்தவருக்கு நீ நீர் புகட்டுவாயாக!

அறிவிப்பவர் : மிக்தாத் இப்னுல் அஸ்வத் (ரழி) நூல் முஸ்லிம் 4177

### சாப்பிட்டதும் வெளியேறுதல்

விருந்து முடிந்தால் உடனடியாக அங்கிருந்து வெளியேறி விட வேண்டும் சாப்பிட்ட பிறகும் அங்கே அமர்ந்திருப்பது விருந்து கொடுப்பவருக்கு பெரும் சிரமத்தைக் கொடுத்துவிடும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஜைனப் பின்த் ஜஹ்‘ (ரழி) அவர்களை மணமுடித்த போது மக்களை (விருந்துக்கு) அழைத்தார்கள். விருந்து முடிந்த பிறகு மக்கள் பேசிக் கொண்டே அமர்ந்துவிட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் எழுந்து போகத் தயாராயிருப்பது போல் (பலமுறை) காட்டினார்கள். ஆனால் மக்கள் எழுந்திருக்கவில்லை.

இறுதியாக நபி (ஸல்) அவர்கள் எழுந்துவிட்டார்கள். அவர்கள் எழுந்ததும் மற்றவர்களும் எழுந்துவிட்டார்கள். அதில் மூன்று பேர் மட்டும் அமர்ந்து கொண்டேயிருந்தார்கள். நபி



(ஸல்) அவர்கள் ஜைனப் (ரழி) அவர்களிடம் செல்ல முற்பட்டார்கள் அப்போதும் அவர்கள் எழவில்லை. பிறகு (சிறிதுநேரம் கழித்து) எழுந்து சென்றுவிட்டார்கள். நான் அவர்கள் போய்விட்ட செய்தியை நபியிடம் தெரிவித்தேன்.

வந்து பார்த்த நபி (ஸல்) அவர்கள் உள்ளே சென்றார்கள். நானும் உள்ளே செல்ல நினைத்தேன். அதற்குள் நபி (ஸல்) அவர்கள் திரையைப் போட்டு விட்டார்கள். அப்போது தான் அல்லாஹ் (கீழ்காணும்) வசனத்தை இறக்கினான்.

இறை நம்பிக்கையாளர்களே! நபியின் இல்லங்களில் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டாலே தவிர உண்பதற்கு நுழையாதீர்கள் அவரது பாத்திரத்தை பார்த்துக் கொண்டிருக்காதீர்கள் மாறாக அழைக்கப்பட்டால் செல்லுங்கள் உணவு உண்டதும் எழுந்து சென்று விடுங்கள் பேச்சிலே லயித்து விடாதீர்கள். இது நபிக்குத் தொந்தரவாக இருக்கும். உங்களிடம் கூற அவர் வெட்கப்படுவார். உண்மை(யைக் கூறும்) விஷயத்தில் அல்லாஹ் வெட்கப்படமாட்டான்.

அல்குர்ஆன் 33:53 அறிவிப்பவர் : அனஸ்பின் மாலிக் (ரழி) நூல் : புகாரி : 4791, 4792, 4793, 4794, 5154, 5166, 5466, 6238, 6239, 6271 முஸ்லிம் : 2565, 2567, 2570, 2572, 2573 திர்மிதி : 3142, 3143

## சுன்னத்தான விருந்துகள்

### திருமணம்

திருமணம் என்பது மனித வாழ்வின் மிக முக்கியமான ஒரு நிகழ்வாகும். அந்நிலையை அடையும் ஆண்மகன் தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதற்காக (வலீமா) விருந்தளிப்பது சுன்னத்தாகும். அது பற்றிய நபி (ஸல்) அவர்களின் கூற்றை நபித் தோழர் அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப் அவர்கள் கூறுகிறார்கள்.

எனது ஆடையில் நறுமணப் பொருளின் கறையைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் நீ மணமுடித்து விட்டாயா? எனக்

கேட்டார்கள். நான் ஆம் என்றேன். யாரை? என்றார்கள். ஓர் அன்சாரிப் பெண்ணை என்றேன். மஹர் எவ்வளவு கொடுத்தீர்? எனக் கேட்டார்கள். ஒரு பேரீச்சங்கொட்டையின் எடைக்கு தங்கம் என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் ஓர் ஆட்டையேனும் (அறுத்து) மண விருந்தளியும் என்றார்கள்.

அறிவிப்பவர் : அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (ரழி) நூல் : புகாரி : 2048, 3780, 3781, 2049, 3937, 5072, 5155, 6082, 6386,2049. முஸ்லீம் : 2556, 2557, 2558 திர்மிதி : 1014, 1856 நஸயீ : அபூதாவூது, அஹ்மது

நபி (ஸல்) அவர்கள் கைபருக்கும், மதீனாவுக்கும் இடையில் (உள்ள சத்துஸ் ஸஹ்ஃபா எனுமிடத்தில் ஸஃ. பிய்யா பினத் ஹுயய் அவர்களை மணமுடித்து) மூன்று நாட்கள் தங்கினார்கள். அங்கு சபிய்யாவுடன் வீடு கூடினார்கள். அப்போது நபியின் வலீமாவுக்காக முஸ்லீம்களை நான் அழைத்தேன். அந்த விருந்தில் ரொட்டியோ, இறைச்சியோ இருக்கவில்லை.

நபி (ஸல்) அவர்கள் பிலாலிடம் தோல் விரிப்பை கொண்டு வருமாறு உத்தரவிட அது (கொண்டு வந்து) விரிக்கப்பட்டது. பிறகு பேரீச்சம்பழம், பாலாடைக்கட்டி, நெய் ஆகியவற்றை வைத்து ஹைஸ் எனும் எளிய உணவைத் தயாரித்து விருந்தளித்தார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் (ரழி) நூல் : 4213, 371, 2893 முஸ்லீம் : 2561, 2564, நஸாயீ : 3327, 3329. அஹ்மது : 11554, 12155, 12253.

### விருந்தளிப்பது எப்போது?

திருமணம் முடிந்து இல்லறத்தில் ஈடுபட்ட பிறகு தான் விருந்தளிக்க வேண்டும் என்று சிலர்கூறி வருகின்றனர் சென்ற அத்தியாயத்தில் சொல்லப்பட்ட நபி வழியை அதற்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர்

சபிய்யா(ரழி) அவர்களை மணந்த போது நபியவர்கள் இல்லறத்தில் ஈடுபட்ட பின்னரே விருந்தளித்துள்ளார்கள்.



எனவே நாமும் அவ்வாறு தான் நடந்து கொள்ள வேண்டும் என்கின்றனர்

நபி (ஸல்) அவர்களின் இந்த நடைமுறையை திருமண விருந்தின் ஓர் விதியாகக் கொள்ள முடியாது. அவ்வாறு இருந்தால் திருமண விருந்து குறித்த தமது போதனைகளில் நேரடியாகவோ (அ) மறைமுகமாகவோ அதை வலியுறுத்தியிருப்பார்கள்.

உதாரணமாக அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களின் திருமணச் செய்தி ஓர் சான்றாகும்.

திருமணம் செய்து கொண்டேன் என்று கூறிய அப்துர் ரஹ்மான் அவர்களிடம் விருந்து கொடுக்க கட்டளையிட்ட நபியவர்கள் மஹர் எவ்வளவு எனக் கேட்டார்களே தவிர இல்லறத்தில் ஈடுபட்டீரா? எனக் கேட்கவில்லை.

திருமணத்திற்கு மஹர் அவசியம் என்பதால் அதைப் பற்றிக் கேட்டார்கள். திருமண விருந்துக்கு இல்லறம் அவசியம் என்றால் அதுகுறித்தும் கேட்டிருப்பார்கள். (அ) இல்லறத்தில் ஈடுபட்ட பின் விருந்தளியும் என்று தெளிவுபடுத்தியிருப்பார்கள்.

இதிலிருந்து திருமண விருந்துக்கு இல்லறத்தில் ஈடுபட்டிருக்க வேண்டிய நிபந்தனை ஏதுமில்லை என்பதையும் திருமணம் முடிந்த பிறகு அன்றைக்கோ (அ) அடுத்தடுத்த நாட்களிலோ விருந்தளித்துக் கொள்ளலாம் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

### விருந்தின் செலவு

அனுமதிக்கப்பட்ட அனைத்து விருந்துகளையும் விட திருமண விருந்துக்கு சற்று கூடுதல் கட்டுப்பாடுகள் உள்ளன. அதில் ஒன்று திருமண விருந்து மிகக் குறைந்த செலவில் செய்யப்பட வேண்டும் என்பதாகும்

எந்தத் திருமணத்தில் செலவு குறைவாக உள்ளதோ அதுவே இறையருள் (பரகத்) அதிகம் உள்ளதாகும் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : ஆயிஷா (ரழி) நூல் : அஹ்மது : 23388*

திருமணச்செலவு என்பது ஓர் சமூகப் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. அதன் செலவீனங்களுக்குப் பயந்து பல திருமணங்கள் தள்ளி போடப்படுகின்றன. தேவையற்ற இந்த தாமதத்தால் சமூகத்தில் பாலியல் ரீதியான ஒழுக்கக் கேடுகள் உருவாகின்றன. செலவு அதிகரிப்பதால் பரகத் எனும் இறையருளும் தடைபட்டுப் போகிறது.

பணம் இருக்கிறது என்பதற்காக பகட்டாக திருமணம் முடிப்போர் இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**விருந்து விதிவிலக்கா?**

திருமணச் செலவு என்பதில் மண்டபம், வாகனம், உடை, அலங்காரம், நகை, அழைப்பிதழ் போன்றவற்றைத் தான் கவனிக்க வேண்டும். விருந்து அதில் அடங்காது என்கின்றனர் சிலர்.

ஏனெனில் அப்துர் ரஹ்மான் பின் அவ்.:.ப் அவர்களைப் பார்த்து ஓர் ஆட்டையேனும் அறுத்து விருந்தளியும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளதால் ஒவ்வொருவரும் அவரவர் வசதிக்கேற்ப விருப்பம் போல் விருந்தளிக்கலாம் என்கின்றனர்

இந்த வாதம் ஏற்புடையதல்ல. திருமணச்செலவு என்பது முதலில் விருந்து செலவைத் தான் குறிக்கும். அதன்பிறகு தான் மண்டபம், வாகனம் போன்றஅனைத்துமே. .

ஏனெனில் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் திருமணச் செலவு என்றால் அது விருந்துக்கு ஆகும் செலவு மட்டுமே இருந்தது. விருந்தைத் தவிர இன்று இருப்பதைப் போல் வேறெந்த செலவும் நபியவர்களின் காலத்தில் இருக்கவில்லை.



எனவே, செலவைக் குறைத்தல் என்பதில் விருந்துச் செலவை தான் முதலில் கணக்கிட வேண்டும். மேலும் விருந்தின் அளவை பொறுத்துத் தான் மண்டபம், வாகனம், தட்டுமுட்டுத் தளவாடச் சாமான்களின் செலவு சுருங்குவதும், பெருகுவதும் அமைகிறது என்பதையும் சிந்தித்தால் விருந்துக்கு விதிவிலக்கு ஏதுமில்லை என்பதை அறியலாம்.

**பெருமானாரின் பிரம்மாண்ட விருந்து**

விருந்துக்கு தாராளமாகச் செலவு செய்யலாம் என்போர் மற்றுமோர் ஆதாரத்தைக் காட்டுகின்றனர்

நபி (ஸல்) அவர்கள் ஜைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) அவர்களை மணமுடித்த போது ஏறத்தாழ 300 பேருக்கு விருந்தளித்துள்ளார்கள்.

அந்தக் காலத்தில் 300 பேருக்கு விருந்து என்றால் அது மிகப் பெரும் விருந்தல்லவா? என கேள்வியெழுப்புகின்றனர்

300 பேர் கலந்து கொண்ட விருந்தென்பது மிகப்பெரியது தான். அதுவும் நபி (ஸல்) அவர்கள் காலத்து மக்கட்தொகையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மிகப் பிரம்மாண்டமான விருந்து என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இதிலும் நபி (ஸல்) அவர்கள் தாம் போட்டு வைத்த குறைந்த செலவு எனும் எல்லைக் கோட்டை தாண்டவில்லை. அதிகம் பேர் சாப்பிட்டார்கள் அதற்காக அதிகம் செலவு செய்யப்படவில்லை.

இவ்விருந்து இறை அற்பதத்தின் வெளிப்பாடாய் அமைந்த ஒன்று. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் ஒரேயொரு ஆட்டை அறுத்துத் தான் இத்தனை பிரம்மாண்டமான விருந்தளித்துள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் ஜைனப் (ரழி) அவர்களை மணந்த போது அளித்த (வலீமா) விருந்தைப் போல் தம் மனைவியரில்

வேறெவரை மணந்த போதும் அளிக்கவில்லை. அதில் ஒரு ஆட்டை மண விருந்தாக்கினார்கள்.

*அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரழி) நூல் : புகாரி : 5168, 5171 முஸ்லீம் : 2568, 2569.*

நபி (ஸல்) அவர்கள் ஜைனப் (ரழி) அவர்களை மணந்து கொண்ட போது (என்னைப் பார்த்து) நீ சென்று சந்திக்கின்ற முஸ்லீம்களை எனது (விருந்துக்காக) அழைத்து வா என்றார்கள். நானும் சென்று சந்தித்தவர்களில் ஒருவர் விடாமல்அழைத்தேன். அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து சாப்பிட்டுச் சென்றார்கள். நபி (ஸல்) அவர்கள் தமது கையை உணவின் மீது வைத்து அல்லாஹ் நாடிய வார்த்தைகளைக் கூறி பிரார்த்தித்தார்கள்.

*அறிவிப்பவர் : அனஸ் (ரழி) நூல் : முஸ்லீம் : 2573, 2570, 2572, புகாரி : 4793, 6238, திர்மிதி : 3142, 3143 நஸயீ : 3334*

முஸ்லீம் 2572, நஸாயீ : 3334 ஆகிய எண்களைக் கொண்ட ஹதீஸில் அதன் அறிவிப்பாளர் அபூஉஸ்மான் அவர்கள் அனஸ் (ரழி) அவர்களிடம், அவர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் எனக் கேட்க ஏறக்குறைய 300 பேர் இருந்தார்கள் என அனஸ் (ரழி) பதிலளித்தார்கள் என்ற செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.

இறைச்சியை பிரதான உணவாகக் கொண்டுள்ள சமூகத்தில் நபியவர்கள் அளித்த விருந்திலே மிகப்பெரியது ஒரேயொரு ஆடு தான் என்றால் அதன் மூலம் அவர்கள் அளித்த விருந்தின் எளிமை நமக்குப் புலனாகிறது.

முந்நூறு பேர் கலந்து கொண்டாலும் அதற்காக செய்யப்பட்ட செலவு ஒரு ஆடு தான் எனும் போது இதை சிக்கனம் என்பதா? (அ) செலவு நிறைந்த திருமணம் என்பதா? எனச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



மேலும் ஓர் ஆட்டிறைச்சியில் முந்நூறு பேர் வயிறு நிரம்பியது நபித்துவத்தை மெய்ப்படுத்த இறைவன் நிகழ்த்திய அற்புதம். அதை மண விருந்திற்கு அளவுகோலாகக் கொள்ள முடியாது.

இதைத் தவிர மற்ற திருமணங்கள் அனைத்திலும் நபியவர்கள் வழங்கிய விருந்து மிகச் சாதாரணமாக உள்ளதையும் கவனிக்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் தமது மனைவி யரில் சிலரை திருமணம் செய்த போது, இரண்டு முத்து கோதுமையையே வலீமா விருந்தாக அளித்தார்கள்.

(ஒரு முத்து என்பது இரு கைகளையும், சேர்த்து ஒரு தடவை அள்ளும் அளவாகும்).

*அறிவிப்பவர் : சபிய்யா (ரழி) நூல் : 5172.*

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வழங்கிய இரண்டு வலீமாவில் நான் கலந்திருக்கிறேன். அதில் எங்களுக்கு ரொட்டியோ, இறைச்சியோ இருக்கவில்லை வேறு என்ன தான்? (விருந்து) எனக் கேட்டேன். அதற்கு ஹைஸ் என்றார்கள். அதாவது பேரீத்தம்பழம், நெய், பாலாடை ஆகியவற்றின் கலவையாக இருந்தது.

*அறிவிப்பவர் : அலீபின் ஜைத் (ரழி) நூல் : அஹ்மது : 11515, 13182, 13304, புகாரி : 519 இப்னுமாஜா : 1900.*

### விமர்சனத்துக்கு அஞ்சாமை

இன்றைய திருமண விருந்துக்காக லட்சங்களை அள்ளிக்கொட்டி விரயமாக்குகிறார்கள். இதற்கு முக்கிய காரணம். மக்களின் விமர்சனத்திற்கு அஞ்சுவது தான்.

பிறர் நம்மைப் பற்றித் தவறாக நினைப்பார்களோ இதுவெல்லாம் ஒரு விருந்தா? என கேலி பேசுவார்களோ

என்ற அச்சம் தான் பல ஆயிரங்கள் போனாலும் பரவாயில்லை என செலவு செய்ய வைக்கிறது.

இவர்கள் மனிதர்களின் விமர்சனத்திற்கு அஞ்சி அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகலாமா? என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

யாருக்கு அல்லாஹ் அருள்புரிந்து (முஹம்மதே) நீரும் அவருக்கு அருள் புரிந்தீரோ அவரிடம் உமது மனைவியை உம்மிடமே வைத்துக் கொள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள் என்று நீர் கூறியதை எண்ணிப் பார்ப்பீராக! அல்லாஹ் வெளிப்படுத்த இருந்ததை உமது மனதுக்குள் மறைத்துக் கொண்டீர். மனிதருக்கு அஞ்சினீர். நீர் அஞ்சுவதற்கு அல்லாஹ்வே தகுதியானவன். *அல்குர் ஆன் : 33:37*

அவர்கள் நம்பிக்கை கொண்டோரிடம் பணிவாகவும், (ஏக இறைவனை) மறுப்போரிடம் தலை நிமிர்ந்தும் நிற்பார்கள். அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவார்கள். பழிப்போரின் பழிச்சொல்லுக்கு அஞ்சமாட்டார்கள். இது அல்லாஹ்வின் அருள். தான் நாடியோருக்கு அதை அவன் அளிப்பான். அல்லாஹ் தாராளமானவன் அறிந்தவன்.

*அல்குர் ஆன் : 5:54*

அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? நீங்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் நீங்கள் அஞ்சுவதற்கு அல்லாஹ்வே தகுதியானவன். *அல்குர் ஆன் : 9:13*

**மக்கள் திருப்தி சாத்தியமா?**

மனிதர்களை திருப்திபடுத்துவதற்காக அதிக பொருட்செலவில் நாம் செய்யும் திருமணத்தின் மூலம் மக்களின் திருப்தியைப் பெற்று விடமுடியுமா?

எவ்வளவு ருசி மிக்க உணவையும் உப்பில்லை, புளியில்லை என உதாசீனம் செய்வோர் இருக்கத் தான் செய்வர்.



சுவையாக இருக்கிறது என சுவைத்துச் சாப்பிட்டாலும் பணத்திமிரின் பகட்டு என்பர் வேறு சிலர்.

செலவு குறைத்து எளிமையாக்கினாலும் விடமாட்டார்கள். கஞ்சத் தனம் என கடுப்பேற்றுவார்கள்.

எப்படிப்பட்ட நிலையிலும் விமர்சனத்தை விட்டு விலகியிருக்க முடியாது எனும் போது அவர்களை திருப்திபடுத்த முயற்சித்து தோற்பதை விட முட்டாள் தனம் வேறெவும் இருக்க முடியாது.

எனவே, அல்லாஹ்வின் திருப்தியை நாடி திருமணத்தின் விருந்து முதல் அனைத்துச் செலவையும் குறைத்து எளிமையாக்குவது தான் அறிவுடையோர் செய்யும் காரியமாகும்.

**திருமணவிருந்து யார் பொறுப்பு?**

கடந்த அத்தியாங்களில் சொல்லப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் பார்க்கும் போது திருமணத்திற்கு விருந்தளிப்பது ஆண்களின் (மாப்பிள்ளை வீட்டார்) மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

ஆனால், இன்று பரவலாக மாப்பிள்ளைவீட்டார் கொடுப்பதைப் போல் பெண்வீட்டாரும் விருந்தளிக்கின்றனர்

சில இடங்களில் பெண் வீட்டாரின் எண்ணிக்கைக்கு ஏற்ப விருந்துச் செலவில் பங்கெடுத்துக் கொள்கின்றனர் சில இடங்களில் விருப்பத்தோடும் பல இடங்களில் விருப்பமில்லாமலும் நடைபெறும் இச்செயல் மார்க்கத்தின் பார்வையில் பெருங்குற்றமாகும்.

ஆண்மகன் மணப்பெண்ணுக்கு மஹர் கொடுக்க வேண்டும் என்ற கட்டளையில் பெண்ணிடமிருந்து எதையும் பெறக்கூடாது என்பதும் அடங்கியுள்ளது.

அதேபோன்று திருமணவிருந்தை ஆண் வழங்கவேண்டும் என்றால் பெண் வழங்கக் கூடாது என்பதும் அதில் அடங்கியுள்ளது.

மாப்பிள்ளைவீட்டார், பெண்வீட்டாரை நிர்பந்திக்கா விட்டாலும், பெண்வீட்டார் தாங்களாக விரும்பி விருந்தளிப்பதும் கூடாது. விரும்பிச் செய்வது குற்றமாகுமா? என சிலர்குதர்க்க வாதம் பேசுகின்றார். அதிகாரிக்கு வழங்கப்படும் லஞ்சமும் வாங்கிய கடனுக்கு கொடுக்கப்படும் வட்டியும் பல நேரங்களில் விரும்பித்தான் கொடுக்கப்படுகிறது. அதை சரியென்று கூறமுடியுமா?

ஒரு குறிப்பிட்ட காரியத்தை மையப்படுத்தி கொடுக்கப்பட்டால் அது அதனுள் இருந்த மறைமுக நிர்பந்தத்தினால் கொடுக்கப்பட்டதாகத் தான் அர்த்தம்.

இதுவரை இல்லாத விருப்பம் திருமண நேரத்தில் திடீரென உதித்தது எப்படி? நேற்று கொடுக்காதவர் இன்றைக்கு கொடுப்பதன் நோக்கத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. விருந்து கொடுக்காவிட்டால் அவர்களின் வீட்டிற்குச் செல்லும் நமது மகளின் நிலை எப்படியாகுமோ? விருந்து கூட வைக்கவில்லையே என சமூகம் நம்மைக் கேலிபேசுமோ என்ற அச்சம் தான் பெண்வீட்டு விருந்தின் பின்புலம்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (ஜகாத் வசூலிக்கும்) அதிகாரியாக ஒருவரை நியமித்தார்கள். அந்த அதிகாரி தனது பணியை முடித்துவிட்டு நபியவர்களிடம் திரும்பி வந்து அல்லாஹ்வின் தூதரே இது உங்களுக்குரியது. இது எனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது என்று கூறி (பொருட்களை பங்கு வைத்தார்). அவரிடம் உன் தந்தையின் வீட்டில் (அ) தாய்வீட்டில் உட்கார்ந்து கொண்டிரும். (அப்போது) உமக்கு



அன்பளிப்பு வழங்கப்படுகிறதா? இல்லையா? என்று பாரும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுமைத் அஸ்ஸாயிதீ (ரழி) நூல் : புகாரி : 6636, 2597, 6979, 7174, 7197 முஸ்லீம் : 3413, 3414 அபூதாவூது : 2557 அஹ்மது : 22492.*

இந்த ஹதீஸில் அந்த மக்கள் விரும்பிக் கொடுத்த அன்பளிப்பை நபி (ஸல்) அவர்கள் கண்டிக்கிறார்கள். காரணம் ஜகாத் வசூலின் போது அது கிடைத்துள்ளது. இந்த வசூல் இல்லையெனில் அந்த அன்பளிப்பும் இல்லை என்பது வெளிப்படை. எனவே, இது ஜகாத்தில் உள்ளது தான் என தீர்ப்பளிக்கிறார்கள்.

இதேபோல பெண்வீட்டார் வழங்கும் விருந்து திருமணத்திற்குத் தான். திருமணம் இல்லையேல் இவர்களின் விருந்தும் இல்லை.

எனவே, எத்தனை வாதங்களை எடுத்து வைத்தாலும் அல்லாஹ் அனுமதிக்காத பெண் வீட்டு விருந்து பெருங்குற்றமே.

**அகீகா**

குழந்தைப் பிறந்த ஏழாம்நாள் செய்யவேண்டிய காரியங்கள் சிலவற்றை நபி (ஸல்) அவர்கள் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். அதில் ஆடு அறுப்பதும் ஒன்று.

ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய அகீகாவிற்கு அடமானமாக இருக்கிறது. அதன் ஏழாம்நாளில் அதற்காக (ஆடு) அறுக்கப்பட்டு அந்தக் குழந்தையின் தலைமுடி இறக்கப்பட்டு பெயர்வைக்கப்படும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : சமுராபின் ஜுன்துப் (ரழி)நூல் : நஸயீ : 4149, திர்மதிதி : 1442 அபூதாவூது : 2454, 2455 இப்னுமாஜா : 315அஹ்மது : 19225, 19274, 19327, 19382 புகாரி : 5471.*

அறுக்கப்பட்ட ஆட்டை பிறருக்கு வழங்கும் போது சமைக்கப்படாத இறைச்சியாகவோ (அ) சமைக்கப்பட்ட விருந்தாகவோ விரும்பியவாறு வழங்கிக்கொள்ளலாம்..

**குழந்தைகளின் பாலினம்**

ஆண் குழந்தையாக இருப்பின் இரண்டு ஆடுகளும், பெண் குழந்தையாக இருப்பின் ஒரு ஆடும் அறுக்கப்பட வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஆண் குழந்தைக்கு சம (வயதுடைய) இரண்டு ஆடுகளும் பெண் குழந்தைக்கு ஒரு ஆடும் (அறுக்கப்பட வேண்டும் என்று) கட்டளையிட்டார்கள்.

*அறிவிப்பவர் : ஆயிஷா(ரழி)நூல் : திர்மிதி : 1433, 1435 இப்னுமாஜா : 3154 அபூதாவூது : 2451, 5452, 2453 நஸயீ : 4144, 4145, 4147*

ஆண் குழந்தை பிறந்து அதற்கு இரண்டு ஆடுகள் கொடுக்க வசதியில்லாதவர் ஒரு ஆடும் கொடுக்கலாம்

ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் தமது பேரக்குழந்தைகள் ஹஸனுக்கும், ஹுஸைனுக்கும் ஒவ்வொரு ஆட்டை அகீகா கொடுத்துள்ளார்கள் எனும் செய்தி இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் வழியாக அபூதாவூதில் 2458வது ஹதீஸாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**யார் கொடுப்பது?**

அகீகாவை குறிப்பிட்ட இன்னார் தான் நிறைவேற்ற வேண்டும் என்று எந்தச் சட்டமும் இல்லை.

அகீகாவை வலியுறுத்தும் ஹதீஸ்களில் அறுக்கப்பட வேண்டும் என செயப்பாட்டு வினைச் சொல்லைத் தான் நபி (ஸல்) அவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள். அதிலிருந்து குழந்தையின் பெற்றோரோ (அ) உறவினர்களோ யார் வேண்டுமானாலும் இதை நிறைவேற்றலாம் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

அலீ (ரழி) அவர்களின் பிள்ளைகள் ஹஸனுக்கும் ஹுஸைனுக்கும் பாட்டனாராகிய நபி (ஸல்) அவர்கள் தான்



அகீகா கொடுத்துள்ளார்கள் எனும் செய்தி மேலே கூறப்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஒருவர் கொடுத்துவிட்டால் மற்றவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஆளாளுக்கு நான் கொடுக்கிறேன் நான் கொடுக்கிறேன் என்று அனைவரும் கொடுக்கிற புதிய வழிமுறையை உருவாக்கி விடக் கூடாது.

அவ்வாறு செய்வது பெண்குழந்தைக்கு ஒரு ஆடு ஆண் குழந்தைக்கு இரண்டு ஆடு எனும் எண்ணிக்கையில் எல்லை மீறும் செயலாக அமைந்துவிடும்.

**எப்போது கொடுப்பது?**

குழந்தை பிறந்த ஏழாம் நாள் இதை நிறைவேற்ற வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு குழந்தையும் அதற்கான அகீகாவுடன் பிணையாக்கப்பட்டுள்ளது. அது (பிறந்த) ஏழாவது நாளில் அதற்காக (ஆடு) அறுக்கப்பட வேண்டும்.

*அறிவிப்பவர் : சமுரா பின் ஜுன்துப் (ரழி) நூல் : அபூதாவூது : 2455, 2454 திர்மிதி : 1442 நஸயீ : 4149 இப்னுமாஜா : 315 அஹ்மது : 19225, 19274, 19327, 19382*

ஏழாம்நாளில் அதைச் செய்ய முடியவில்லை என்றால் அதற்காக வேறு நாட்களில் அதை நிறைவேற்ற முடியாது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு தேதியைக் குறிப்பிட்டுச் சொன்ன பிறகு நமது வசதிக்காக அதை நாம் மாற்ற முடியாது.

ஏழில் தவறிவிட்டது எனவே பத்தில் கொடுக்கிறேன் என்பதற்கு இது கட்டாயக் கடமை இல்லை விரும்பியோர் செய்துக்கொள்ளும் காரியம் தான்.

யார் தனது குழந்தைக்காக அறுக்கப்படுவதை விரும்புகிறாரோ அவர் அதற்காக அறுக்கட்டும் என நபி

(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) நூல் : நஸாயீ : 4141, அபூதாவூது : 2459, அஹ்மது : 6426, 6530.*

பைஹகீ, தப்ரானீ, மு்.ஜமுஸ் ஸகீர் ஆகிய நூற்களில் ஏழாம்நாள் (அ) பதினான்காம் நாள் (அ) இருபத்தியோராம் நாள் ஆகிய நாட்களில் அகீகா கொடுக்கலாம் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்புகள் அனைத்தும் இஸ்மாயீல் பின் முஸ்லீம் என்பவர் வழியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் பலஹீனமானவர். குழப்பத்தோடு செய்திகளைச் சொல்பவர் என ஹதீஸ்கலை அறிஞர்களால் விமர்சிக்கப்பட்டவர். இவர் வழியாக அறிவிக்கப்படும் இந்தச் செய்தியை, ஆதாரமாக ஏற்றுச் செயல்படுத்த முடியாது.

**தனக்குத்தானே அகீகா**

அதேபோன்று நபி (ஸல்) அவர்கள் நபியான பிறகு தனக்குத் தானே அகீகா கொடுத்துக் கொண்டதாக ஒரு செய்தி பைஹகீ, மு்.ஜமுல் அவ்ஸத் ஆகிய நூற்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்விரு அறிவிப்புகளில் ஒன்றில் அப்துல்லாஹ் இப்னு முஹர்தர் என்பவரும் இன்னொன்றில் அப்துல்லாஹ் இப்னுமுஸன்னா என்பவரும் வருகிறார்கள்.

இவ்விருவரும் பலஹீனமானவர்கள் என குறை கூறப்பட்டுள்ளதால் இந்தச் செய்தியையும் ஆதாரமாக ஏற்க முடியாது.

**இறைச்சி யாருக்கு?**

அகீகாவின் இறைச்சியை இவ்வாறு தான் செலவிட வேண்டும் என்று திட்டவட்டமாக எந்த அறிவுரையும் சொல்லப்படவில்லை. எனவே அல்லாஹ்விற்காக குர்பானி



கொடுக்கும் போது நாமும் சாப்பிட்டு, உறவினர்கள், ஏழை எளியவர்கள் என அனைவருக்கும் வாரி வழங்குவதைப் போன்று இதிலும் நடந்து கொள்ள வேண்டும்.

**புது வீட்டு விருந்து**

புதிதாக வீடுகட்டி குடியேறும் ஒருவர் மக்களை அழைத்து விருந்தளிக்க விரும்பினால் மார்க்கம் அதை அனுமதிக்கிறது.

இந்த அனுமதியை நபியவர்களைப் பற்றி மலக்குகள் சொன்ன ஒரு உவமையிலிருந்து விளங்கிக் கொள்கிறோம்,

(ஒருநாள்) நபி (ஸல்) அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த போது அவர்களிடம் வானவர்கள் வந்தார்கள். அவர்களில் ஒருவர் இவர் உறங்கிக் கொண்டிருக்கிறார், என்றார். அதற்கு மற்றொருவர் கண் தான் உறங்குகிறது. உள்ளம் விழித்திருக்கிறது என்று கூறினார். பின்னர்அவர்கள் உங்களுடைய இந்த நண்பருக்கு ஒரு உதாரணம் இருக்கிறது. அவருக்கு அந்த உதாரணத்தை கூறுங்கள் என்று பேசிக் கொண்டார்கள். அப்போது அவர்களில் ஒருவர் இவர் உறங்குகிறாரே என்றார். மற்றொருவர் கண் உறங்கினாலும் உள்ளம் விழித்திருக்கிறது என்றார்.

பின்னர் அவர்கள் இவரின் நிலை ஒரு மனிதரின் நிலைக்கு ஒத்திருக்கிறது. அவர் ஒரு வீட்டைக் கட்டினார். அவ்வீட்டில் விருந்துக்கு ஏற்பாடு செய்தார். (மக்களை) அழைப்பதற்காக ஓர் ஆளை அனுப்பினார். அழைப்பாளியின் அழைப்பை ஏற்று வந்தவர் வீட்டினுள் சென்றார். விருந்துண்டார். அழைப்பை ஏற்காதவர் வீட்டிற்குள் நுழையவில்லை. விருந்து உண்ணவுமில்லை என்று கூறினார்.

பின்னர் அவர்கள் இந்த உவமையை விளக்கிக் கூறுங்கள் அவர் புரிந்து கொள்ளட்டும் என்றார்கள். அப்போது அவர்களில் ஒருவர் இவர் உறங்குகிறாரே என்று சொல்ல மற்றொருவர் கண் தான் தூங்குகிறது. உள்ளம் விழித்திருக்கிறது என்றார்.

அதைத் தொடர்ந்து அந்த வீடு தான் சொர்க்கம். அழைப்பாளி முஹம்மது (ஸல்) அவர்கள். முஹம்மது (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படிந்தவர் அல்லாஹ்வுக்குக் கீழ்படிந்துவிட்டார். முஹம்மது (ஸல்) அவர்களுக்கு மாறு செய்தவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்துவிட்டார். முஹம்மது (ஸல்) அவர்கள் மக்களைப் பகுத்துக்காட்டி விட்டார்கள் என்று விளக்கமளித்தார்கள்.

*அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி) நூல் : புகாரி 7281, திர்மிதி : 2787*

புதுவீடு கட்டி அதில் விருந்துக்கு அழைப்பது இங்கே உவமையாக கூறப்பட்டுள்ளது. மார்க்கத்தில் தடுக்கப்பட்ட ஒன்றை வானவர்கள் உவமையாகக் கூட கூறமாட்டார்கள். எனவே, புதுமனை புகும்போது விருந்தளிக்கலாம் என்று விளங்குகிறது. இது அனுமதிக்கப்பட்டது தானே தவிர கட்டாயமானது இல்லை.

இன்றைய சமூகத்தில் வீடு கட்டி குடியேறும் போது விருந்தோடு சேர்த்து ஏராளமான அனாச்சாரங்களும் அரங்கேறுகின்றன. பால் காய்ச்சுதல், பாத்திஹா ஓதுதல், பாங்கு சொல்லுதல், கத்தம் ஓதுதல், உப்பு, மிளகு வழங்குதல், பசுமாட்டை வீட்டிற்குள் கொண்டு வருதல், ஜமாஅத் தொழுகை நடத்துதல் என பலவித மூட நம்பிக்கைகள் மக்களிடம் காணப்படுகின்றன. இவற்றில் எதுவுமே மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டது அல்ல. மாற்று சமுதாயத்திலிருந்து காப்பியடிக்கப்பட்டவை.

யார் பிற சமுதாய (சம்பிரதாயங்களுக்கு) ஒப்பாக நடக்கிறாரோ அவரும் அவர்களைச் சார்ந்தவரே என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : இப்னுஉமர் (ரழி) நூல் : அபூதாவூது : 3512.*

இந்த ஹதீஸின் அடிப்படையில் ஒரு மதத்தாரின் கலாச்சார சம்பிரதாயங்களைப் பின்பற்றுகிறவர் அந்த மதத்தைச்



சேர்ந்தவராக கருதப்படுவார். இதில் பல காரியங்கள் நமது சமுதாயத்தார் மட்டுமே செயல்படுத்தும் காரியமாக இருந்தாலும் அவைகளும் பிற மதத்தாரின் சடங்குகளை மையமாக வைத்தே உருவாக்கப்பட்டுள்ளன என்பதை உணர வேண்டும்.

### புறக்கணிக்க வேண்டிய விருந்துகள்

குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்காக விருந்தளிக்கலாம் என்பதையும் அவை என்னென்ன? என்பதையும் நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் தெளிவுப்படுத்திவிட்டார்கள். அவர்களுடைய வழிகாட்டுதலில் இல்லாத பல புதிய விருந்துகள் இன்று உருவாகியிருக்கின்றன.

அவற்றில் சில விருந்துகள் சமூக நிர்பந்தமாக உருவெடுத்து பொருளாதார ரீதியாக மக்களை பெரும் பாடுபடுத்திக் கொண்டிருக்கிறது. மேலும் சில விருந்துகள், மார்க்கக் கடமைகளை நிறைவேற்ற முடியாமல் பெரும் முட்டுக்கட்டையாக மாறி நிற்கின்றன. இன்னும் சில விருந்துகள், மார்க்கத்தில் இல்லாத புதிய அனாச்சாரங்களாக உருவெடுத்துள்ளன.

இவைபோன்ற அனைத்து விருந்துகளும் புறக்கணிக்கப்பட வேண்டிய விருந்துகளாகும். இதுபோன்ற விருந்துக்கு ஏற்பாடு செய்வதும் கூடாது. அந்த விருந்திற்காக நாம் அழைக்கப்பட்டால் அதில் பங்கெடுக்கவும் கூடாது.

மார்க்க முரணான விருந்துகளை ஏற்பாடு செய்பவர் எந்த அளவு பாவத்தை சுமப்பாரோ அதே அளவு பாவத்தை பங்கெடுப்பவரும் சுமப்பார் என்கிறது திருமறைக் குர்ஆன்.

அல்லாஹ்வின் வசனங்கள் மறுக்கப்பட்டு, கேலி செய்யப்படுவதை நீங்கள் செவியுற்றால் அவர்கள் வேறு பேச்சுக்களில் ஈடுபடும் வரை அவர்களுடன் அமராதீர்கள்.

(அவர்களுடன் அமர்ந்தால்) அப்போது நீங்களும் அவர்களைப் போன்றவர்களே என்று இவ்வேதத்தில் உங்களுக்கு அவன் அருளியுள்ளான். நயவஞ்சகர்களையும் (தன்னை) மறுப்போர் அனைவரையும் நரகில் அல்லாஹ் ஒன்று சேர்ப்பான்.

நமது வசனங்களில் (குறை காண்பதற்காக) மூழ்கிக் கிடப்பவர்களை நீர்காணும் போது அவர்கள் வேறு செய்தியில் மூழ்கும் வரை அவர்களைப் புறக்கணிப்பீராக! ஷைத்தான் உம்மை மறக்கச் செய்தால் நினைவு வந்தபின் அநீதி இழைத்த கூட்டத்துடன் நீர் அமராதீர். அல்குர் ஆன் 6:68

அனுமதிக்கப்பட்ட விருந்தில் இஸ்லாத்தில் இல்லாத அனாச்சாரங்கள் அரங்கேறுமாயின் அவைகளும் புறக்கணிக்கப்பட வேண்டியவையே. உதாரணமாக திருமணத்தில் வரதட்சணை, பெண் வீட்டு விருந்து, ∴பாத்திஹா என கலப்படம் நடந்தால் அவற்றையும் புறக்கணித்திட வேண்டும்.

இதுபோன்ற தீமைகள் நடக்கும் சபைகளில் நாம் பற்கேற்கக் கூடாது பங்கேற்றால் அல்லாஹ்வின் பார்வையில் நாமும் அதைச் செய்தவர்களாகத் தான் கருதப்படுவோம். மேலும் தீமைகளைக் காணும் ஒரு முஸ்லிம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற நபிகளாரின் போதனையை மீறியவர்களாகவும் ஆகிவிடுவோம்.

உங்களில் ஒருவர் ஒரு தீமையைக் கண்டால் அவர் அதைத் தமது கையால் தடுக்கட்டும் முடியாவிட்டால் நாவால் (தடுக்கட்டும்) அதுவும் முடியாவிட்டால் தமது உள்ளத்தால் (வெறுத்து ஒதுங்கட்டும்). இதுவே இறைநம்பிக்கையின் பலவீனமான நிலையாகும் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஸயீதுல் குத்ரி (ரழி)நூல் : முஸ்லிம் : 70, திர்மிதி : 2098 நஸாயீ : 4922, 4923, அபூதாவூது : 963, 3777 இப்னுமாஜா : 1265, 4003 அஹ்மது : 10651, 10723, 11034, 11068, 11090, 11442.



தீமையைக் காணும் போது புறக்கணித்தல் தான் ஈமானின் இறுதி நிலையாகும். ஒரு முஸ்லிம் அதையாவது கடைபிடிக்க முயற்சிக்க வேண்டும்.

மார்க்கத்திற்கு முரணான காரியங்கள் நடைபெறும் நிகழ்ச்சியில் வழங்கப்படுகிற உணவு ஹலால் ஆனது தானே அதைச் சாப்பிடுவதில் தவறு என்ன நேர்ந்துவிடப் போகிறது? என்று சிலர் அதை ஆதரிக்கின்றனர்

இத்தகையோருக்கு நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் நடைபெற்ற ஓர் நிகழ்ச்சி மிகச்சிறந்த விளக்கமாக அமைந்துள்ளது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (தமது மகள்) ∴பாத்திமா (ரழி) அவர்களின் வீட்டுக்கு வந்தார்கள். உள்ளே செல்லாமல். (திரும்பிப் போய் விட்டார்கள்) அங்கே வந்த அலி (ரழி) அவர்களிடம். ∴பாத்திமா (ரழி) அவர்கள் விஷயத்தைச் சொன்னார்கள். அலி (ரழி) அவர்கள் அதைப்பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் நான் ∴பாத்திமாவின் வீட்டுவாசலில் பல வண்ணச் சித்திரங்கள் வரையப்பட்ட திரைச்சீலை ஒன்றைக் கண்டேன். எனக்கும் இந்த (ஆடம்பரமான) உலகத்திற்கும் என்ன தொடர்பு? (அதனால் தான் திரும்பி வந்துவிட்டேன்) என்று கூறினார்கள். அலி (ரழி) அவர்கள் பாத்திமாவிடம் வந்து நபி (ஸல்) அவர்கள் கூறியதைச் சொன்னார்கள்.

அதற்கு ∴பாத்திமா (ரழி) அவர்கள் அந்தத் திரைச்சீலையின் விஷயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் விரும்புவதை எனக்கு கட்டளையிடட்டும் (அதன்படியே நான் நடந்து கொள்கிறேன்) என்று கூறினார்கள். நபிகள்நாயகம்

(ஸல்) அவர்கள் அதை இன்ன வீட்டாரிடம் அனுப்பிவிடு அவர்களுக்குத் தேவையுள்ளது என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : இப்னுஉமர் (ரழி) நூல் : புகாரி : 2613, அபூதாவூது : 3620, அஹ்மது : 4497.*

பாத்திமா (ரழி) அவர்களின் வீட்டில் உள்ள உணவு ஹலால் ஆனது தான். அதை ஹராம் என்பதற்காக நபி (ஸல்) அவர்கள் புறக்கணிக்கவில்லை. மாறாக அந்த இடத்தைப் பார்க்கும் போது தேவையற்ற அலங்காரமாக தோன்றிய காரணத்தினால் தான் புறக்கணித்துள்ளார்கள்.

அங்கே கண்ட திரைச்சீலையும் கூட தடுக்கப்பட்டது அல்ல. அதனால் தான் பிறருக்கு அதைக் கொடுத்துவிடுமாறு கூறியுள்ளார்கள்.

இதுவே, புறக்கணிக்கப் போதுமானது என்றால் தடுக்கப்பட்ட தீமைகள் நடக்கும் சபையைப் பற்றி கூறத் தேவையில்லை.

சுன்னத்தான விருந்துகளில் சில தவறுகள் நடைபெற்றாலும் அதில் நபியின் சுன்னத்தும் பேணப்படுகிறதே. அதை கவனித்து சென்று வரலாமே என சிலர் நினைக்கின்றனர்.

நல்லதும், கெட்டதும் கலந்திருந்தால் அதில் நல்லதும் இருக்கத்தானே செய்கிறது என்று பார்க்க நமக்கு அனுமதி இல்லை இஸ்லாத்தின் பார்வையில் நல்லது மட்டும் இருப்பது தான் நல்லதாகும். அதனுடன் கெட்டதும், சேர்ந்திருந்தால் அதைக் கெட்டது என்று தான் முடிவெடுக்க வேண்டும்.

சுவை மிகுந்த உணவில் சிறிதளவு விஷம் கலந்திருந்தால் நல்ல உணவும், இருக்கத்தானே செய்கிறது என்று எந்த அறிவாளியும் முடிவெடுப்பதில்லை.

ஒருவரிடம் இறை நம்பிக்கையோடு கொஞ்சம் ஷிர்க்கும் கலந்திருந்தால் அவரை மு∴மீன் என அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை.

*அல்குர் ஆன் : 6:82, 3:71, 2:42*



புதுவீட்டு விருந்தில் மவ்லூது போன்ற தடுக்கப்பட்டவை இருந்தால் அனுமதிக்கப்பட்ட விருந்தைப் பார்க்க கூடாது. தடுக்கப்பட்ட மவ்லூதை தான் பார்க்க வேண்டும். வரதட்சணைத் திருமணத்தில் மணமகன் கொடுக்கும் வலீமாவை மட்டும் பார்க்கக் கூடாது. கேடுகெட்ட வரதட்சணையும் அதிலே கலந்திருக்கிறது என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். இவ்வாறு எந்தவொரு விருந்திலும், அல்லாஹ் அனுமதிக்காத காரியங்கள் நடை பெற்றால் அதில் எத்தனை சுன்னத்துகள் பேணப்பட்டாலும் மீறப்பட்ட சுன்னத்களை கவனத்தில் கொண்டு அவற்றைப் புறக்கணிக்க வேண்டும்

## இறப்பு விருந்து

ஒருவர் இறந்துவிட்டால் அவரது வீட்டில் 3ம் நாள், ஏழாம் நாள், 40ம் நாள் என பல நாட்களுக்கு ∴பாத்திஹா ஓதப்பட்டு விருந்தளிக்கப்படுகிறது.

இது இஸ்லாத்தில் இல்லாத புதிய வழிமுறையாகும். நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் உயிருடனிருக்கும் போது அவர்களின் தோழர்கள், உறவினர்கள், பிள்ளைகள் என பலரும் மரணத்தை தழுவியிருக்கிறார்கள். யாருக்காகவும் நபி (ஸல்) அவர்கள் கத்தம், பாத்திஹா எதுவும் ஓதவில்லை விருந்தளிக்கவும் இல்லை.

இது திதி, திவசம் என முஸ்லிமல்லாதவரின் நடவடிக்கையின் மறுபதிப்பாகும். இறந்தவர் உயிருடனிருக்கும் போது எதை விரும்பிச் சாப்பிட்டாரோ அதுவே இந்த விருந்திலும் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

ஒருவிதத்தில் மாற்றாரின் படையலுக்கு ஒப்பாக இருக்கிறது இந்த ஏற்பாடு. ஏனெனில் அவர் விரும்பும் பொருளை அவருக்காக வைக்கின்றனர் அதில் எதையும் அவர் சாப்பிடுவதில்லை. அவர் சாப்பிடமாட்டார் எனத் தெரிந்தும்

அவர் விரும்பும் பொருளை வைப்பதன் நோக்கம் என்ன? என்பதை சிந்தித்தால், இதவும் ஒருவகைப் படையல் தான் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

மேலும், இறந்தவரின் வீட்டார் சோகத்தில் இருப்பார்கள். அவர்களின் துயரத்தில் பங்கெடுக்கும் விதமாக அண்டைவீட்டார் தமது வீடுகளில் உணவு சமைத்து அவர்களுக்குப் பாரிமாற வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

ஜ.ஃபர் (ரழி) அவர்கள் மூத்தா போரில் கொல்லப்பட்ட செய்தியை நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் தெரிவித்தார்கள். மேலும் ஜ.ஃபரின் குடும்பத்தாருக்கு கவலை தரும் செய்தி வந்துவிட்டது அவரது குடும்பத்தாருக்காக உணவு சமைத்துக் கொடுங்கள் என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் ஜ.ஃபர் (ரழி) நூல் : திர்மிதி : 919 அபூதாவூது : 2725 இப்னுமாஜா : 1599.*

விருந்து கொடுக்க வேண்டிய இடத்தில் இருக்கும் அண்டை அயலார் கொடுக்காமல் இருப்பதே பிழை. அதைவிடக் கொடுமையாக அவர்களிடமே விருந்தைப் பெறுவது அதைவிடக் கொடுமையல்லவா?

எனவே, ஃபாத்திஹா எனும் படையல் இருப்பதால் இந்த உணவு ஹராமானதாகும்.மேலும் அந்த இடத்தில் நபி (ஸல்) அவர்களின் கட்டளை மறுக்கப்படுவதால் அங்கே அமர்ந்திருப்பதும் குற்றமாகும்.

### ஹஜ் பயண விருந்து

ஹஜ்ஜுக்கு செல்லும் போதும் ஹஜ்ஜை முடித்து திரும்பும் போதும் விருந்து கொடுக்கும் பழக்கம் பரவலாகக் காணப்படுகிறது.

இதுபோன்ற ஓர் நடைமுறையை நபி (ஸல்) அவர்கள் காட்டித் தரவில்லை. இந்தப் பழக்கம் ஹஜ்ஜுக்குச்



செல்வோரின் எண்ணிக்கையை கணிசமாகக் குறைத்திருக்கிறது.

சாதாரணமாக ஹஜ் செய்ய 1.5 லட்சம் செலவாகும் என்றால் விருந்துச் செலவு 1 லட்சம் சேர்ந்து இரண்டரை லட்சம் வைத்திருப்போர் மட்டுமே அதை நிறைவேற்ற முடியும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

மேலும் இறைவன் நம் மீது விதித்துள்ள கடமையை நிறைவேற்றச் செல்கிறோம் என்ற இறையச்ச உணர்வு குறைந்து பெருமைக்காக ஹஜ் செய்தல் எனும் நிலையை இந்த விருந்து ஏற்படுத்தி விடுகிறது. என்வே இது புறக்கணிக்க வேண்டிய விருந்தாகும்.

### ஏழைகள் அழைக்கப்படா விருந்து

சமூகத்தில் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் விதமாக செல்வந்தர்களை மட்டும் அழைத்து ஏழையைப் புறக்கணிக்கும் விருந்துகள் மகா கெட்டவையாகும்.

விருந்தில் மிகக் கெட்டது செல்வந்தர்கள் அழைக்கப்பட்டு ஏழைகள் விடப்படும் (வலிமா) விருந்தாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி)நூல் : புகாரி : 5177, முஸ்லீம் : 2585, 2586 அபூதாவூது : 3251 இப்னுமாஜா : 1903 அஹ்மது : 6978, 7305, 8893, 10009*

ஒருவரிடம் நட்பு கொள்வதற்கு பொருளாதாரத்தை அளவுகோலாகக் கொள்வதை விட கெட்ட அளவுகோல் வேறெதுவும் இருக்கமுடியாது. இவர்கள் பார்வையில் ஏழைகள் என்றால் கெட்டவர்கள் மரியாதை தெரியாதவர்கள் என்று பொருள். உண்மையில் நல்லவன், கெட்டவன் என்பதை ஒருவரிடம் உள்ள பணம் தீர்மானிப்பதில்லை.

மேலும் கெட்டுப்போவதற்கு அதிக வாய்ப்புள்ளவர் யார் என சிந்தித்தால் ஏழையை விட செல்வந்தனே அதில்

முதலிடத்தைப் பெறமுடியும். ஏனெனில் தவறு செய்ய நினைத்தால் அதைச் செய்வதற்குரிய பொருள் வசதி இவரிடம் தான் உள்ளது. மேலும் ஏழ்மையில் பலர் தவறு செய்ய நினைத்தாலும் பெரும்பாலும் அவர்களின் ஏழ்மை அதற்குரிய வாய்ப்பை அவர்களுக்குத் தருவதில்லை. எனவே, பொருளாதார ரீதியிலான ஏற்றத்தாழ்வுகள் சமூகத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்.

ஒரு செல்வந்தர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைக் கடந்து சென்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள் இவரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு தோழர்கள் இவர் பெண் கேட்டால் மணமுடித்து வைக்கவும், பரிந்துரைத்தால் ஏற்கவும், பேசினால் செவிசாய்க்கவும் தகுதியானவர் என்று கூறினார்கள்.

சிறிதுநேரத்திற்குப் பிறகு நபி (ஸல்) அவர்களை ஒரு ஏழை முஸ்லிம் ஒருவர் கடந்து சென்றார். இவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? எனக் கேட்டார்கள். அதற்கு ஸஹாபாக்கள் இவர் பெண் கேட்டால் மணமுடித்து வைக்காமலும் பரிந்துரைத்தால் ஏற்கப்படாமலும் பேசினால் செவியேற்காமலும் இருக்கத் தகுதியானவர் என்று பதிலளித்தார்கள்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவரைப் போன்றவர்கள் இந்த பூமி நிரம்ப இருப்பதை விட இவர் (ஏழை) சிறந்தவராவார்.

அறிவிப்பவர் : ஸஹ்ல் (ரழி) நூல் : 5091, 6447 இப்னுமாஜா : 4110

மேலும் விருந்து என்பது செல்வச் செழிப்பில் உள்ள பலருக்கு பெரிய மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை. ஏனெனில், அவர்களின் அன்றாட உணவே அறுசுவை நிறைந்ததாகத் தான் இருக்கும். அழைத்து விட்டார்களே என வேண்டா



வெறுப்பாக கலந்து கொள்பவர்கள் தான் அதிகம் இருப்பார்கள். ஏழைகளாக இருப்பின் நமது அழைப்பை ஏற்று கலந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவார்கள்.

நமது அழைப்பு யாருக்கு மகிழ்ச்சியைத் தருகிறதோ அவர்களை விட்டு விட்டு மற்றவர்களை அழைப்பது அறிவார்ந்த செயலாகுமா?

விருந்துக்கு வரத்தயாராக இருப்பவர்கள் தடுக்கப்பட்டு மறுப்பவர்கள் அழைக்கப்படும் வலீமாவே விருந்தில் மிகக் கெட்டதாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம் 2586.

எனவே நபி (ஸல்) அவர்களால் கெட்டது என வர்ணிக்கப்படும் ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் விருந்துகள் யாவும் புறக்கணிக்கப்பட வேண்டியவையாகும்.

இவைபோன்று ஒரு பெண் வயதுக்கு வந்ததற்காக, (சுன்னத்) கத்னாவிற்காக, குழந்தை பிறந்த 40-ம் நாளுக்காக வளைகாப்புக்காக என நபியவர்களால் வழிகாட்டித் தரப்படாத காரியங்களை முன்னிட்டு வழங்கப்படும் விருந்துகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட வேண்டியவையாகும்.